இலங்கையின் மிகப் பாரிய ஒய்வூதிய நிதியமான ஊழியர் சேம நிதியமானது முதலீடுகளின் மீது வரவேற்கத்தக்க வருமானம் அதேபோன்று அதன் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் ஆகிய இரண்டினையும் சமமான அளவில் பேணுவதன் மூலம் உறுப்பினர்களின் ஒய்வுகால வாழ்க்கையினைத் தொடர்ந்தும் பாதுகாத்து வருகின்றது.

நிதியமானது, வரலாற்றிலேயே மிக உயர்ந்த வருமானமான 136 பில்லியன் ரூபாவினை பதிவு செய்ததன் காரணமாக இவ்வாண்டு நிதியத்திற்கு ஒரு விசேடத்துவம் மிக்க ஆண்டாகக் காணப்படுகின்றது.

மேலும், வீழ்ச்சியடைகின்ற வட்டி வீதங்களின் காரணமாக, தாழ்ந்த பணவீக்கச் சூழலில் நிதியமானது மற்றைய அனைத்து நிதியியல் நிறுவனங்களையும் விடக் கூடுதலான 11 சதவீத குறிப்பிடத்தக்க வட்டி வீதத்தினை அறிவித்தது. இதன் காரணமாக உறுப்பினர்களின் உண்மை வருமானம் அதிகரித்தது.



# உள்ளடக்கம்

பக்கம்

## பகுதி 1


தொலைநோக்கு மற்றும் பணி 79

நாணயச் சபையின் தலைவர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடமிருந்தான செய்தி 80

தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி 82

செயலாற்றத்தின் முக்கிய பண்புகள் 84

தொழிற்பாட்டின் முக்கிய பண்புகள் 86

ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு 87

பொருளாதார மீளாய்வு 91

ஊ. சே. நிதி மீளாய்வு 96


## பகுதி 2


**நிதியியல் கூற்றுக்கள்**

வருமான செலவுக் கூற்று 105

அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று 106

நிதியியல் நிலைமைக் கூற்று 107

கொள்ளல் கொடுத்தல் கணக்கு 108

காசுப்பாய்ச்சல் கூற்று 109

முதலீடுகளின் கூற்று 110

உரிமை மூலதனத்திலான/ உறுப்பினர் செல்வத்திலான மாற்றங்களின் கூற்று 111

நிதியியல் கூற்றிற்கான குறிப்புக்கள் - கணக்கீட்டுக் கொள்கைகள்

வருமானம் மற்றும் செலவினக் கணக்குகளுக்கான குறிப்புக்கள்

1. வட்டி வருமானம் 119
2. பங்கிலாப வருமானம் 119
3. பெறப்பட்ட மூலதன இலாபம்/(நட்டம்) 119
4. பதிவழித்தல் இலாபம் 120
5. இலாபம் அல்லது இழப்பினூடாக சந்தைப் பெறுமதியில் நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய வருமானம் 120
6. ஏனைய வருமானம் 120
7. மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள் 120
8. வருமான வரிச் செலவினம் 121
9. விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் 121

நிதி நிலைமை கூற்றிற்கான குறிப்புக்கள்

10. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் 122
11. தொழிற்பாட்டிலுள்ள மூலதனம் 123

12. அருவச் சொத்துக்கள் 123
13. நிதியியல் சொத்துக்கள் 124
14. ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்/பெறத்தக்கவைகள் 125
15. காசு மற்றும் காசிற்குச் சமமானவைகள் 125
16. கடன் கொடுநர்கள் 125
17. ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் 126
18. உறுப்பினர் நிலுவைகள் 127
19. ஒதுக்கங்கள் 127

பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுக் கணக்குகளுக்கான குறிப்பு
20 பெறுவனவுகள் 128
21 கொடுப்பனவுகள் 129
முதலீட்டுக் கூற்றுக்கான குறிப்பு
22 இலாபம் மற்றும் இழப்பினூடாக சந்தைப் பெறுமதி 130
23. விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை 131
24. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்பட்டவை 135
25. கடன்கள் மற்றும் பெறத்தக்கவை 139
26. முதலீட்டின் அசைவு 140
27. சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடுகளின் வகைப்படுத்தல் 141

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 142

## பகுதி 3

**அட்டவணைகள்**

1 முதலீடுகள், முதிர்ச்சிகள் மற்றும் முதலீட்டின் மீதான வருமானம் (1982 - 2013) 243
2 உறுப்பினர் நிலுவைகள் மீதான வருமான வீதங்கள் (1982 - 2013) 244
3 உறுப்பினர் நிலுவைகள், வட்டி மற்றும் அவற்றின் மீதான மெய் வருவாய் வீதம் (1982-2013) 245
6 முதலீட்டுப் பட்டியல் கூற்று (1982-2013) 246
7 தொகுக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று (நாணய சபை) (1982 - 2013) 247
8 வருமானக் கூற்றின் சுருக்கம் (1992 - 2013) 249

# எமது தொலைநோக்கு

எமது உறுப்பினர்கள் ஒரு நிறைந்த ஓய்வு கால வாழ்க்கையை வாழச் செய்வதனை இயலச்செய்யும் விதத்தில் இப்பிராந்தியத்தில் மிக அக்கறை கொண்ட ஓய்வு கால நிதியமாகத் திகழ்தல்.

# எமது பணி

முன்மதியும் நவீனத்துவமும் கொண்ட முகாமைத்துவத்தினூடாக எமது உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வுகால நன்மைகளையும் வினைத்திறன்மிக்க பணிகளையும் வழங்குதல்

# நாணயச் சபையின் தலைவர் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரிடமிருந்தான செய்தி



நான் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் சார்பில், 2013ஆம் ஆண்டிற்கான ஊழியர் சேம நிதியத்தின் ஆண்டறிக்கையினை முன்வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2013இல் ஊ.சே.நிதியம் பல அடைவுகளைக் கடந்தும் வலுவான செயலாற்றத்துடன் தொடர்ந்தது. மொத்த சொத்துக்களின் பெறுமதி ரூ.1.3 றில்லியனை அடைந்ததுடன் வருவாய்கள் முன் எப்பொழுதுமில்லாத மிக உயர்ந்த முதலீட்டு வருமானமான ரூ.136 பில்லியனைப் பதிவு செய்து. பெறுமதியில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு ஊ.சே. நிதியத்தின் முதலீட்டு சொத்துப்பட்டியலின் மீது 11.54 சதவீதம் கொண்ட வரவேற்கத்தக்க வட்டி வீதம் பெறப்பட்டமை தூண்டுதலாக அமைந்தது. இதற்குப் பதிலாக நிதியமானது அதன் உறுப்பினர்களிற்கு அவர்களின் நிலுவைகளின் மீது 11 சதவீத வருவாய் வீதத்தினைச் செலுத்தக் கூடியதாகக் காணப்பட்டது. இது 2013இல் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து வருகின்ற வட்டி வீதச் சூழல், சவால்மிக்க பங்குரிமைச் சந்தை நிலைமைகள் என்பனவற்றினைக் கருத்திற் கொள்கையில் ஊ.சே. நிதியத்தின் செயலாற்றம் வரவேற்கத்தக்கதொன்றாக அமைந்து உத்வேகம்மிக்க நிதிய முகாமைத்துவம், முதலீட்டுக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை மீண்டுமொரு முறை எடுத்துக்காட்டியது. ஊ.சே. நிதியம் அதன் மிகையான நிதியினை முக்கியமாக அரச பிணையங்களில் தொடர்ந்தும் முதலீடு செய்த வேளையில் பங்குரிமை மூலதனம் மற்றும் கம்பனிப் படுகடன் கருவிகளுக்குப் பன்முகப்படுத்திக் கொண்டவேளையில் பொருத்தமான இடர்நேர்வற்ற வருமானம் தரும் விடயங்களிலும் கவனமான முறையில் முதலீடுகளை மேற்கொண்டது. இப்பின்னணியில், நாட்டின் மிகப்பெரிய ஓய்வு நிதியம் என்ற ரீதியில் நிதியத்தின் நீண்ட கால முதலீட்டு உபாயம் காலத்திற்கு காலம் வருவாய்களின் தளம்பல்களிற்கு மத்தியிலும் தொடர்ந்து 8 ஆவது ஆண்டாக 10 சதவீதத்திற்கும் மேலான வட்டியை நிலையாகச் செலுத்துவதில் எம்மை இயலுமைப்படுத்தியுள்ளது.

எமது நாட்டின் அதிகளாவான பொருளாதார வாய்ப்புக்களினைக் கருத்தில் கொள்கையில் எதிர்வரும் ஆண்டுகளில் நிதியம் மேலும் விரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கைத்தொழில் மற்றும் பணி துறைகளின் புதிய விரிவாக்கம் ஊ.சே. நிதியத்தின் செயல்படு உறுப்புரிமையினை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேநேரம், வயதான குடித்தொகை தொழில் சந்தைக்கான புதிய உறுப்பினர்களின் எண்ணிக்கையினைக் குறைக்கிறது. இயக்கவாற்றல் மிக்கதொரு அமைப்பு என்ற ரீதியில் ஊ.சே. நிதியத்திற்குத் தேவையான பயிற்சிகள், சாதனங்கள், மூலவளங்கள், முறைமைகள் மற்றும் உட்கட்டமைப்பு என்பவற்றினைப் பலப்படுத்தும் விதத்தில் இவ் அபிவிருத்திகள் இதன் நிதிய முகாமைத்துவ உபாயங்கள், நிருவாகம் அத்துடன் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகள் மற்றும் நடவடிக்கை முறைகள் என்பவற்றில் மாற்றங்களினை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, ஊ.சே. நிதியம் இனிவரும் ஆண்டுகளில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி வாய்ப்புக்களிலிருந்து அதிகளவில் நன்மையளிக்கும் எனவும் நிதியம் வினைத்திறன் மற்றும் பயனுறுதி வாய்ந்த விதத்திலும் முகாமை செய்வதற்கான நம்பகமான பொறுப்புக்கள் நிறைவேற்றப்படும் எனவும் அனைத்து உறுப்பினர்களிற்கும் உறுதியளிக்க விரும்புகிறேன்.

இதன் உறுப்பினர்களுக்கு மிகக் காத்திரமான பணிகளை வழங்குகின்ற குறிக்கோளுடன் பல புதிய செயற்றிட்டங்கள் நடைமுறைக்கிடப்பட்டு வருவதனை இவ்வாண்டு காட்டுகிறது. தொழில்தருநர்களிடமிருந்து ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களை சேகரித்துக் கொள்வதனை ஒழுங்குமுறைப்படுத்துமொரு முறையாக, கட்டாய இ-கூற்றுக்களுக்கான ஒழுங்குவிதிகள் இவ்வாண்டுப் பகுதியில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. இது, தற்பொழுது 50 இற்கு மேற்பட்ட ஊழியர்களைக் கொண்டுள்ள அனைத்துத் தொழில்தருநர்களும் அவர்களது ஊழியர்களின் ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களையும் உறுப்பினர் விபரங்களையும் மாதாந்த அடிப்படையில் இ-கூற்று முறைமையில் சமர்ப்பிப்பதனை தேவைப்படுத்துகிறது. ஆண்டின் இறுதியில் மொத்த தொழில்தருநர்களில் இம்முறைமைக்கு தகுதிவாய்ந்த 41 சதவீதமான தொழில்தருநர்கள் முறைமையுடன் வெற்றிகரமாக பதிவு செய்து கொண்டமையின் மூலம் விரைவாக நிதியத்தினை வரவு வைக்க வசதியளிக்கப்பட்டதுடன் உறுப்பினர்கள் கணக்குகள் மிகக் காத்திரமான விதத்தில் முகாமைப்படுத்தப்பட்டதன் காரணமாக ஊ.சே. நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு சிறந்த

பணிகளை வழங்கக்கூடியதாகவிருந்தது.

பிரதிமைப்படுத்தும் ஸ்கானிங் செயற்றிட்டம் நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்ட இன்னொரு பிரமாண்டமான முயற்சியாகும். இது மீளாய்விற்குரிய ஆண்டிலும் செயற்படுத்தப்பட்டது. இச்செயற்றிட்டத்தின் இலக்கு தற்போதைய காகிதங்களை அடிப்படையாகக் கொண்ட ஊ.சே. நிதிய முறையினை ஏறத்தாழ காகிதங்களற்ற முறைமையொன்றிற்கு மாற்றுவதேயாகும். இது மில்லியன் கணக்கான எமது உறுப்பினர்களுக்குச் சொந்தமான தற்போதைய எண்ணற்ற தொகையான ஆவணங்களை இலத்திரனியல் முறைமைக்கு மாற்றிக் கொள்வதற்குப் பயன்படும். இச்செயற்றிட்டம் நிறைவடைந்ததும், தற்போதுள்ள ஊ.சே. நிதியக் கணனி முறைமையை ஆவண முகாமைத்துவ முறைமையுடன் இணைக்கின்ற இ-பதிவக அறையொன்று நிறுவப்படும். இது நிதியத்தின் உற்பத்தித்திறனைக் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரிக்கும்.

மேலும், ஊ.சே. நிதியத்தின் பணிகள் தொடர்பில் உறப்பினர்களின் விழிப்புணர்வினை அதிகரிக்கும் முயற்சிகள் 2013இலும் தொடர்ந்தன. இ-கூற்று முறைமை, உறுப்பினர்களின் மீள்பதிவு மற்றும் ஏனைய உறப்பினர்களுடன் தொடர்பான பணிகள் தொடர்பில் பல விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடமாடும் சேவைகளும் நிதியத்தின் ஆர்வலர்களைப் பெருமளவிற்குக் கவரும் இலக்குடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்டன. ஊ.சே. நிதியம் தொழில் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம் மற்றும் பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் போன்ற மற்றைய தொடர்புபட்ட அரச நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் இந்நிலைமையை மேலும் மேம்படுத்தியது.

இத்தகைய பின்னணியில், நாணயச் சபை, தொழில் திணைகளத்தின் அலுவலர்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் தினைக்களத்தின் அலுவலர்களுக்கும் அவர்களது அர்ப்பணிப்பும் கடப்பாடும் மிக்க பணிகளுக்காக அதன் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

நாணயச் சபை, ஊ.சே. நிதியத்தின் உறுப்பினர்கள் மற்றும் தொழில்தருநர்கள் நிதியத்தின் மீது வைத்த தைரியம் மிக்க நம்பிக்கைக்கான அதன் உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது. இந்நம்பிக்கையானது உறுதியான பயணத்திற்கு சக்தியளிப்பதாக விளங்குகிறது.



அர்ஜுன மகேந்திரன்
ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
நாணயச் சபையின் தலைவர்

# தொழில் ஆணையாளர் நாயகத்தின் செய்தி



2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஊ.சே. நிதியத் திணைக்களத்தினால் அடையப்பட்ட முன்னேற்றங்களைத் தாங்கிவரும் ஆண்டறிக்கை 2013 இனை வெளியிடுகின்ற இச்சந்தர்ப்பத்தில், இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் அலுவலர்களுக்கு முதலில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஓய்வூதிய நன்மைகளை அனுபவிக்காத இலங்கையிலுள்ள தனியார் மற்றும் அரசுசார் துறைகளிலுள்ள ஊழியர்களுக்கு நிறைந்த ஓய்வுகால வாழ்க்கையை வழங்குவதனை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஊ.சே. நிதியம், இன்று நாட்டின் மிகப் பாரிய சமூக பாதுகாப்பு முறைமையொன்றாக வளர்ச்சியடைந்திருக்கிறது.

2012இல் கொழும்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஊ.சே. நிதியக் கொடுப்பனவுகளை கண்காணிக்கின்ற நடவடிக்கை 2013 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் நாடளாவிய முறையில் பெரும்பாலான மாவட்ட தொழில் அலுவலகங்களில் நிறுவப்பட்டிருக்கிறது.

மேலும், 2013ஆம் ஆண்டுப் பகுதியில் ஊ.சே. நிதியத்தின் மரணமடைந்த உறுப்பினர்களின் மீளளிப்புக் கொடுப்பனவுகள் வலய தொழில் அலுவலகங்களினூடாக இலங்கை முழுவதற்கும் வெற்றிகரமான முறையில் பன்முகப்படுத்தப்பட்டிருக்கிறது.

டிஜிட்டல் வடிவத்தில் பெறப்பட்ட உறுப்பினர்களின் கைவிரல் அடையாளத்தினைப் பயன்படுத்தி 2012இல் ஆரம்பிக்கப்பட்ட தரவுத்தளம், நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் வசதிக்காக நிறுவப்பட்டதொன்றாகும். அப்பணியினை பயன்மிக்க முறையில் நிறைவேற்றும் பொருட்டு மாவட்டத் தொழில் அலுவலகங்கள் பலவற்றிலும் டிஜிட்டல் வடிவத்தில் உறுப்பினர்களின் கைவிரல் அடையாளத்தினை சேகரிப்பதற்கான தரவுத்தள முறைமையினை உருவாக்கியதன் மூலம் 2013இல் ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எதிர்காலத்தில் இம்முறையினை ஒவ்வொரு மாவட்ட தொழில் அலுவலகங்களிலும் நிறுவுவதற்கு நாம் எதிர்பார்க்கிறோம்.

தொழில் திணைக்கள அலுவலர்களுக்கு சட்ட ரீதியான பொறுப்பாண்மைகளை நிறைவேற்றுவதில் அவர்களின் பாராட்டத்தக்க பங்களிப்பிற்காகவும் ஊழியர்கள் மற்றும் தொழில்தருநர்களுடனும் அதேபோன்று இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே. நிதியத் திணைக்களத்தின் அலுவலர்களுடனும் ஆரோக்கியமான உறவுகளைப் பேணியமைக்காகவும் ஊ.சே. நிதியத்தின் நடவடிக்கைகளை வெற்றிகரமாகக் கொண்டு நடத்த அவர்கள் அளித்த ஆதரவிற்காகவும் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இவ்வாண்டறிக்கையானது ஊழியர்களுக்கும், தொழில்தருநர்களுக்கும் நிருவாகம் மற்றும் நிதி நிறுவனங்களிலுள்ள அலுவலர்களுக்கும் மாணவர்கள் உட்பட இத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள எந்தவொரு தரப்பினருக்கும் பெறுமானம் மிக்க தகவல்களை வழங்குமென நான் நம்புகிறேன்.



திருமதி பேர்ள் வீரசிங்க
தொழில் ஆணையாளர் நாயகம்

# செயலாற்றத்தின் முக்கிய பண்புகள் 2013

## அட்டவணை 1 நிதியியலின் முக்கிய பண்புகள்

ரூ. மில்

| விபரங்கள் | 2012 | 2013 |
|---|---|---|
| பங்களிப்புக்கள் | 70,171 | 80,484 |
| மீளளிப்புக் கொடுப்பனவுகள் | 48,712 | 50,243 |
| தேறிய பங்களிப்புக்கள் | 21,459 | 30,241 |
| மொத்த வருமானம் | 121,413 | 136,657 |
| தேறிய வருமானம் | 111,829 | 125,610 |
| ஒதுக்கிலிருந்து/ (ஒதுக்கிற்கு) மாற்றல்கள் | 5,700 | 3,700 |
| உறுப்பினர் நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி | 115,771 | 126,992 |
| உறுப்பினர் நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி வீதம் (%) | 11.50 | 11.00 |
| சராசரி சொத்துப்பட்டியல் மீதான வருவாய் வீதம் (%) | 11.61 | 11.54 |
| தொழிற்பாட்டுச் செலவினம் | 948 | 979 |
| மொத்த வருமானத்தின் சதவீதமாக தொழிற்பாட்டுச் செலவுகள் (%) | 0.78 | 0.72 |

## வரைபடம் 1 நிதியத்தின் வளர்ச்சி




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| மொத்தத் தேறிய சொத்துக்கள் (ரூ.பில்.) | 770 | 900 | 1,018 | 1,144 | 1,300 |
| வளர்ச்சி வீதம் (%) | 17.82 | 16.94 | 13.11 | 12.38 | 13.64 |

மூலம்: ஊ.சே நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 2 உறுப்பினர்களின் இறுதி நிலுவைகளின் மீது செலுத்தப்பட்ட வட்டி




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| செலுத்தப்பட்ட வட்டி (ரூ.பில்.) | 90.69 | 96.27 | 101.28 | 115.77 | 126.99 |
| வட்டி வீதம் (%) | 13.75 | 12.50 | 11.50 | 11.50 | 11.00 |

மூலம்: ஊ.சே நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 3 பங்களிப்புக்கள், மீளளிப்புக்கள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள்




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 48.7 | 54.8 | 61.9 | 70.2 | 80.5 |
| மீளளிப்புக்கள் (ரூ.பில்.) | 31.9 | 34.9 | 47.3 | 48.7 | 50.2 |
| திரவத்தன்மை உள்ளடக்கம் (மொத்தக் காசு உட்பாய்ச்சல்/மீளளிப்பு) % | 16.8 | 19.9 | 14.6 | 21.5 | 30.2 |

மூலம்: ஊ.சே நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 4 மீளளிப்புக் கொடுப்பனவுகளுக்கான திரவத்தன்மை உள்ளடக்கம்




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| மொத்தக் காசு உட்பாய்ச்சல் (பங்களிப்பு வருமானம்) | 373.29 | 447.84 | 531.68 | 558.77 | 848.42 |
| காசு வெளிப்பாய்ச்சல் (மீளளிப்பு) | 44.17 | 44.30 | 64.43 | 70.95 | 85.06 |
| திரவத்தன்மை உள்ளடக்கம் (மொத்த காசு உட்பாய்ச்சல் /மீளளிப்பு) | 0.09 | 0.08 | 0.09 | 0.09 | 0.06 |

மூலம்: ஊ.சே நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 5 உறுப்பினர் நிலுவை எதிர் சந்தை வீதங்களுக்கான வருவாயின் பயனுறு வீதம்




மூலம்: ஊ.சே நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
ஆண்டறிக்கை, இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 6 சராசரி முதலீட்டுச் சொத்துப்பட்டியல் மீதான வருவாய்




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| மொத்த முதலீட்டு வருமானம் | 109.44 | 120.90 | 115.82 | 121.36 | 136.30 |
| முதலீட்டின் மீதான வருமானம் | 16.0 | 15.1 | 12.5 | 11.6 | 11.5 |

மூலம்: ஊ.சே நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 7 முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு




| வகை | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| அரச பிணையங்கள் | 97.1 | 92.2 | 91.1 | 93.6 | 92.5 |
| பங்குரிமை மூலதனம் | 1.3 | 7.0 | 7.7 | 5.4 | 5.8 |
| தொகுதிக் கடன்களும் ஏனையவையும் | 1.6 | 0.9 | 1.2 | 1.0 | 1.7 |

அரச பிணையங்கள் பங்குரிமை தொகுதிக் கடன்களும் ஏனையவையும்

மூலம்: ஊ.சே நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

## வரைபடம் 8 உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்பு | 2.0 | 2.2 | 2.2 | 2.3 | 2.4 |
| பங்களிப்பல்லாதவை | 10.7 | 11.2 | 11.8 | 12.3 | 12.8 |

மூலம்: ஊ.சே நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

# தொழிற்பாட்டின் முக்கிய பண்புகள்

1 உறுப்பினர்களுக்கு 11.0 சதவீதமான வட்டி செலுத்தப்பட்டது.

2 உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 15.2 மில்லியனுக்கு அதிகரித்தது.

3 பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2.3 மில்லியனிலிருந்து 2.4 மில்லியனுக்கு அதிகரித்தது.

4 நிதியத்தின் மொத்தப் பெறுமதி ரூ.1,300 பில்லியனுக்கு அதிகரித்தது.

5 114,114 உறுப்பினர்களுக்கு ஓய்வூதிய நன்மைகளாக ரூ.50,243 மில்லியன் செலுத்தப்பட்டது.

6 பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களிடமிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெறுவதற்காக 16,268 உறுப்பினர்களுக்கு அவர்களது ஊ.சே. நிதியக் கணக்கு நிலுவைகளுக்கெதிராக உத்தரவாதச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

7 ஆர்வலர்களுடனான தொடர்புகளை வலுப்படுத்திக் கொள்வதற்காக வேறுபட்ட புவியியல் பிரதேசங்களிலுள்ள ஊழியர்களுக்காக ஒன்பது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடமாடும் பணிகளும் நடத்தப்பட்டன.

8 ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் பங்களிப்புக்களை வங்கிகளின் வெப்தளப் பணிகளூடாக கணனி வழியில் உடனடியாகச் செலுத்துவதற்காக சேகரிப்பு முகவர்களாக 3 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் நியமிக்கப்பட்டன.

9 ஆவணங்களை ஏறத்தாழ காகிதாதிகளற்ற அலுவலகத்தினை நோக்கி நகர்த்தும் விதத்தில் 7.5 மில்லியன் உறுப்பினர் தொடர்பான ஆவணங்களை பிரதிமைப்படுத்தும் ஸ்கானிங் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

10 பெயர் மற்றும் கணக்குத் திருத்தங்கள், நிலுவை விசாரணைகள் போன்றன தொடர்பாக 222,498 எண்ணிக்கை கொண்ட பொதுமக்கள் விசாரணைகள் கையாளப்பட்டன.

## ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு

ஊழியர் சேம நிதியம் (ஊ.சே.நி/நிதியம்) இலங்கையில் உள்ள பாரிய ஓய்வு நிதியமாக விளங்குகின்றது. 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமநிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேமநிதியமானது, தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கான ஓய்வூதிய நன்மைகளை வழங்குவதற்கான கட்டாய பங்களிப்பு ஓய்வூதிய நன்மைகள் திட்டமாகும். சட்டத்தின் ஏற்பாட்டு நியதிகளின்படி தொழில் ஆணையாளர் நிதியத்தின் நிருவாக ஆணையாளராகச் செயற்படுகின்ற வேளையில் நிதியத்தின் கட்டுக்காப்பாளராக செயற்படுவதற்கான அதிகாரம், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. நாணயச் சபை, சட்டத்தின் மூலம் அதனிடம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்கள், கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியம் வசதியளிக்கிறது.

ஊ.சே. நிதிமானது ஒரு கட்டாய பங்களிப்பு ஓய்வூதிய நன்மைகள் திட்டமாகும். தற்பொழுது நிதியத்திற்கான குறைந்தபட்ச கட்டாய பங்களிப்பு வீதம் ஊழியர் சேமநிதிய உறுப்பினரின் மொத்த மாதாந்த வருவாயில் 20 சதவீதமாகும். ஊ.சே.நிதியத்திற்கு ஊழியர்களும் தொழில் தருநர்களும் உறுப்பினர்களின் மொத்த வருவாயில் முறையே 8 சதவீதத்தினையும் 12 சதவீதத்தினையும் பங்களிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பங்களிப்புக்களையும் ஊழியர் விபரங்களையும் நிதியத்திற்கு காலத்திற்குக் காலம் அனுப்பி வைப்பது தொழில்தருநரின் பொறுப்பாகும். 150 ஊழியர்களுக்கும் குறைவானவர்களுக்கு தொழில் வழங்கும் தொழில்தருநர்கள் (சி வகை) பங்களிப்புகளையும் தொடர்பான விபரங்களையும் (படிவம் சி) மாதாந்த அடிப்படையில் அனுப்பி வைக்க வேண்டியதுடன் 150 ஊழியர்களுக்கும் கூடுதலானவர்களுக்கு தொழில் வழங்கும் தொழில்தருநர்கள் பங்களிப்புக்களை மாதாந்தமும் தொடர்பான உறுப்பினர் விபரங்களை (படிவம் சி3) ஆண்டிற்கு இரு தடவையும் அனுப்பி வைத்தல் வேண்டும். எனினும், 2012இல் சட்டத்திற்கு செய்யப்பட்ட திருத்தங்களின்படி, குறைந்தபட்சம் 50 ஊழியர்களைக் கொண்டுள்ள தொழில்தருநர்கள் பங்களிப்புக்களையும் உறுப்பினர் விபரங்களையும் இலத்திரனியல் ஊடகத்தினூடாக மாதாந்த அடிப்படையில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிதியத்தின் உறுப்பினர்கள் அவர்கள் ஓய்வு பெறும் வயதினை அடைந்ததும் (பெண்கள் 50 வயதினையும் ஆண்கள் 55 வயதினையும்) அவர்களது ஓய்வூதிய நன்மைகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராவர். ஓய்வு பெறும் போது மீளப் பெற்றுக் கொள்வது தவிர, புலம்பெயர்தல், நிரந்தரமாக ஊனமடைதல், திருமணம் காரணமாக தொழிலிலிருந்து விலகுதல் (பெண் உறுப்பினர்களுக்கு மாத்திரம்) ஓய்வூதியம் பெறத்தக்க தொழில்களில் இணைந்து கொள்ளுதல் போன்ற பல்வேறு காரணங்களின் பொருட்டும் உறுப்பினர்கள் தமது நிலுவைகளை மீளப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர். இறந்த

### தொழில் ஆணையாளரின் தொழிற்பாடுகள்

- தொழில்தருநர்களையும் நிதியத்தின் உறுப்பினர்களையும் பதிவு செய்தல்.
- ஊ.சே. நிதியச் சட்டத்திற்கு இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்தும் விதத்தில் பரீட்சிப்புக்களை மேற்கொள்வதுடன் உறுப்பினர் பங்களிப்புக்களை செலுத்தாதவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.
- தாமதமான பங்களிப்புக்களின் மீது தொழில்தருநர்களிடமிருந்து மேலதிகக் கட்டணங்களை அறவிடல்.
- நன்மைகளின் மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளலும் அத்தகைய விண்ணப்பங்கள் தொடர்பாக நன்மைகளின் கொடுப்பனவு பற்றி மத்திய வங்கிக்கு ஆலோசனை வழங்கும் தீர்மானக் கடிதங்களை வழங்குவதும்
- உறுப்பினரொருவரின் முன்னைய கணக்குகளை ஒன்றுசேர்ப்பதற்கு அங்கீகாரமளித்தல்.
- உறுப்பினர்கள், அவர்களது உறுப்பினர் நிலுவைகளை பிணையாக வைத்து ஒப்புதல் பெற்ற கடன் வழங்கல் நிறுவனங்களிலிருந்து வீடமைப்புக் கடன்களை பெற்றுக் கொள்வதனை இயலச் செய்யும் விதத்தில் வீடமைப்புக் கடன்களுக்கு ஒப்புதலளித்தல்

## நாணயச் சபையின் தொழிற்பாடுகள்

உறுப்பினர் பங்களிப்புக்களையும் மேலதிக் கட்டணங்களையும் வருமானத்தையும் பெற்றுக் கொள்ளுதல்.

உறுப்பினர் கணக்குகளைப் பேணுதல்.

உறுப்பினர்களுக்கு உயர்ந்தபட்ச வருவாய்களை வழங்கும் விதத்தில் மிகையான நிதியங்களை முதலீடு செய்யும் அதேவேளையில் நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்.

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் ஆகியோரின் சம்மதத்துடன் நாணயச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வீதத்தில் உறுப்பினர் கணக்குகளுக்கு வருடாந்த வட்டியை வரவு வைத்தல்.

ஆண்டுக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் கணக்குகளின் ஆண்டுக் கூற்றுக்களை உறுப்பினர்களுக்கு வழங்குதல்.

தொழில் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானக் கடிதத்திற்கிணங்க மீளளிப்பு நன்மைகளை மேற்கொள்ளுதல்.

உறுப்பினர்கள் வீடமைப்புக் கடன்களைப் பெறுவதனை இயலச் செய்யும் விதத்தில் தொடர்பான கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு உறுப்பினர் நிலுவைகள் தொடர்பான சான்றிதழை வழங்குதல்

ஒவ்வொரு ஆண்டின் இறுதித் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் மாண்புமிகு தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சருக்கும் நிதி அமைச்சருக்கும் நிதியியல் கூற்றுக்கள் மற்றும் முதலீட்டுக் கூற்றுக்கள் போன்ற தகவல்களை சமர்ப்பித்தல்.

# 2013.12.31இல் உள்ளவாறு மூத்த முகாமைத்துவக் குழு

## தொழில் திணைக்களம் (ஊ.சே.நி. பிரிவு)

| பெயர் | பதவி | பிரிவு |
|---|---|---|
| திரு. டி பி கே ஆர் வீரகோன் | தொழில் ஆணையாளர் | |
| திருமதி. வி உமாமகள் | துணை தொழில் ஆணையாளர் | கோரல் |
| செல்வி பி எச் பி ஐ பண்டார | உதவி தொழில் ஆணையாளர் | |
| திருமதி. கே பி எச் இந்திராணி | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. டபிள்யு ஆர் ஏ எம் ரத்நாநயக்கா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. கே எல் கே பெரேரா | துணை தொழில் ஆணையாளர் | அறவிடல் |
| திரு. டி எச் ரி தேஷபிறியா | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. பீ வசந்தன் | துணை தொழில் ஆணையாளர் | தகவல் தொழில்நுட்பம் |
| செல்வி டி வி ரி பி தயானந்தா | உதவி தொழில் ஆணையாளர் | நிருவாகம் |
| திருமதி. என் எம் வை துஷாறி | உதவி தொழில் ஆணையாளர் | கோரல் எல் |
| திருமதி. ஜி ஏ டி ஆர் கயானி | உதவி தொழில் ஆணையாளர் | |
| திரு. எம் எவ் ஜி சமரவீர | உதவி தொழில் ஆணையாளர் | மத்திய கோப்புப் பிரிவு |

## இலங்கை மத்திய வங்கியின் ஊ.சே.நிதிய திணைக்களம்

| பெயர் | பதவி | பிரிவு |
|---|---|---|
| திரு. பி டபிள்யு டி என் ஆர் றொட்றிகோ | கண்காணிப்பாளர் | |
| திருமதி. சி எம் டி என் கே செனிவிரத்ன | மேலதிக கண்காணிப்பாளர் | |
| திருமதி. ஏ ஜி யூ திலகரத்ன | துணைக் கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் ஏ எல் முத்துக்குமார | துணைக் கண்காணிப்பாளர் | |
| திரு. ஜே டி எஸ் ஜே நாணயக்கார | துணைக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. எஸ் என் திலகவர்தன | மூத்த உதவி கண்காணிப்பாளர் | |
| திருமதி. ஓ கே எஸ் பி பண்டாரா | உதவி கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் எஸ் பி டி சில்வா | மூத்த உதவி கண்காணிப்பாளர் | அலுவலக பணிகள் மற்றும் நிருவாகம் |
| திரு. எச் ஜி எல் விக்கிரமசிங்க | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. கே ஜி என் விஜயரத்ன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எம் என் வீரசிங்க | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. பி டபிள்யு விமால் ஷாந்த | உதவிக் கண்காணிப்பாளர் | சேகரிப்புப் பிரிவு |
| திரு. சுனில் கொஸ்வத்த | மூத்த உதவிக் கண்கணிப்பாளர் | நடைமுறைப் பங்களிப்புப் பிரிவு |
| திரு. கே ஏ என் எல் ரத்னசேகர | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி ஜி பீ என் ஏ சமரநாயக்கா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. கே ஏ சேனரத்ன | உதவிக் கண்காணிப்பாளர் | |

| | | |
|---|---|---|
| செல்வி பீ எம் டபிள்யு எஸ் பாலசூரிய | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | மீள்பதிவுப் பிரிவு |
| செல்வி வை சி எம் விஜயதிலக | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. கே ஜி திலகசிறி | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | கூற்றுப்படுத்தப்பட்ட பங்களிப்புப் பிரிவு |
| திரு. யு ஏ குணவர்த்தன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எம் ஏ டி எல் சிறில் | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. டி எம் ஜி பியதிலக | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | இ-சேகரிப்புப் பிரிவு |
| செல்வி கே எம் ரி ஏ வை பண்டார | முகாமைத்துவப் பயிலுநர் | |
| திருமதி. என் எல் எம் அபேசேகரா | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | நிதிய முகாமைத்துவப் பிரிவு |
| திரு. ரி உதயசீலன் | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. டி எல் றோகினி | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. டபிள்யூ ஜி ஆர் ஹர்சபிரியா | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி டி பி உடுகமகோறள | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எஸ் பதுமநாபன் | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. கே எல் ஏ சி என் அனுராதா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. ஏ ஏ ஆர் லான்சன் | முகாமைத்துவப் பயிலுநர் | |
| திருமதி. எச் ஏ ஹெற்றிகேவா | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | கணக்குகள் மற்றும் தீர்ப்பனவுப் பிரிவு |
| செல்வி ஜி பீ எம் பி திசநாயக்கா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி ஈ ரி டபிள்யு ரி ஆர் பி உடுகும்பற | முகாமைத்துவப் பயிலுநர் | |
| செல்வி டி வை எஸ் மகாகெதறவத்தே | உதவிக் கண்காணிப்பாளர் | பதிவேடுகள் முகாமைத்துவப் பிரிவு |
| திரு. ஏ ரி உபசேன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| செல்வி கே எம் சி சோமசிறி | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. எம் விக்கிரமரத்ன | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | பதிவேடுகள் முகாமைத்துவப் பிரிவு |
| செல்வி சி பி ஜயவீர | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. எஸ் டி ரத்னவீர | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. எச் ஏ எஸ் குலசிங்க | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | திருத்தப்பட்ட பதிவேடுகள் பிரிவு |
| திருமதி. எல் எஸ் கமகே | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திரு. டபிள்யூ ஏ நந்தசேன | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | வீடமைப்புக் கடன் பிரிவு |
| திருமத. எஸ் ஏ ஜயவர்தன | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. பி எச் டி ஏ அத்தநாயக்க | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | மீளளிப்பு கொடுப்பனவுப் பிரிவு |
| செல்வி கே கே சி எஸ் கன்னங்கரா | உதவிக் கண்காணிப்பாளர் | |
| திருமதி. வி கே தம்பகல்கே | மூத்த உதவிக் கண்காணிப்பாளர் | பொதுமக்கள் தொடர்புகள், விசாரணைகள |

# பொருளாதார மீளாய்வு 2013

## 1.1 பொருளாதார வளர்ச்சி

**2013ஆம் ஆண்டுப் பகுதியில் பொருளாதாரம் 7.3 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட விரிவாக்கமே பெருமளவிற்கு உதவியாக அமைந்தது.** கடந்த மூன்றாண்டு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட 7.5 சதவீதத்திற்கு மேற்பட்ட வலுவான சராசரி வளர்ச்சிக்குப் பின்னர் பொருளாதாரம் மிதமான தன்மையினை அடைந்தமைக்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுக் காரணிகள் இரண்டுமே காரணங்களாக அமைந்தன. வெளிநாட்டுப் பக்கத்தில், நலிவடைந்த வெளிநாட்டுக் கேள்விகள் ஏற்றுமதி வளர்ச்சியை மெதுவடையச் செய்த வேளையில் 2012இல் பின்பற்றப்பட்ட கொள்கை வழிமுறைகளும் மோசமான வானிலை நிலைமைகளும் உள்நாட்டுக் கேள்வி மற்றும் நிரம்பலின் மீது தளர்ச்சித் தாக்கமொன்றினை ஏற்படுத்தின. முன்மதியுடைய கேள்வி முகாமைத்துவக் கொள்கைகள், உறுதியான பன்னாட்டுப் பண்ட விலைகள் மற்றும் உள்நாட்டு உணவு நிரம்பலில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் என்பன 2013இல் பணவீக்க அழுத்தங்கள் மிதமடைய உதவியதன் விளைவாக, தொடர்ந்து ஐந்தாண்டுகளாக ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்பட்ட பணவீக்கம் 2013 இறுதியில் நடு ஒற்றை இலக்க மட்டத்திற்குப் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. உயர்தர உட்கட்டமைப்புப் பணிகள் பொருளாதார நடவடிக்கைகளை விரிவடையச் செய்வதுடன், பணி வழங்கலின் வினைத்திறனை மேம்படுத்தி, சந்தைகளை அணுகும் வசதிகளை மேம்படுத்துவதனூடாக செலவுகளைக் குறைத்து, இவையெல்லாவற்றினூடாக ஒட்டுமொத்த உற்பத்தித்திறனை மேம்படுத்துமென்பதனால் நாடு முழுவதிலும் வினைத்திறன் மிக்கதும் காத்திரமானதுமான பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்புத் தளத்தினை அபிவிருத்தி செய்வது

வரைபடம் 9 உண்மை மொ.உ.உற்பத்தி வளர்ச்சி




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அரசாங்கத்தின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் உயர்ந்த முன்னுரிமையினைப் பெற்றிருக்கிறது. இவ்வாண்டுப் பகுதியில் பொருளாதார வளர்ச்சியில் உறுதியானதொரு எழுச்சி காணப்பட்டமையின் காரணமாக தலைக்குரிய மொ.உ.உற்பத்தி வருமானம் 2013இல் ஐ.அ.டொலர் 3,280 இற்கு உயர்வடைந்தது.

அனைத்து மூன்று முக்கிய துறைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சி 2013இல் ஒட்டுமொத்த நீடித்த பொருளாதார வளர்ச்சிக்குப் பக்கபலமாக விளங்கியது. கைத்தொழில் துறை தொடர்ந்தும் 9.9 சதவீதம் கொண்ட வலுவான வளர்ச்சியைக் கொண்டிருந்து மொ.உ.உற்பத்தியில் அதன் பங்கினை 31.1 சதவீதத்திற்கு உயர்த்திக் கொண்டமைக்கு கட்டடவாக்கம் மற்றும் தயாரிப்புத் துணைத் துறைகளின் தூண்டுதலே பெருமளவு காரணமாக அமைந்தது. முக்கியமான அரச உட்கட்டமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டமையும் தனியார் துறைக் கட்டுமானப் பணிகளில் காணப்பட்ட அதிகரிப்பும் கட்டுமானத் துறையின் உறுதியான வளர்ச்சிக்குப் பங்களித்தன. இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான மீட்சியும் சுற்றுலாத் துறையிலிருந்தான உயர்ந்த கேள்வியும் தொழிற்சாலைக் கைத்தொழிலின் வளர்ச்சிக்குப் பங்களித்தன. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தக நடவடிக்கைகளில் தொடர்ந்தும் மெதுவான தன்மை காணப்பட்ட போதும் பணிகள் துறை 6.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு போக்குவரத்து மற்றும் நிதியியல் பணிகள் தொடர்ந்தும் விரிவடைந்தமையே காரணமாகும். 2012இன் முதலரைப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட 10.4 சதவீதம் கொண்ட ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வேளாண்மைத் துறை 4.7 சதவீதம் கொண்ட ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு ஆண்டின் தொடக்கத்தில் நிலவிய மோசமான வானிலை நிலைமைகளே முக்கிய காரணமாக அமைந்ததுடன் இது உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியைக் குறிப்பாக நெல் மற்றும் உணவுப் பயிர்களைப் பாதித்தது.

## 1.2 பணவீக்கம் மற்றும் வட்டி வீதம்

தொடர்ந்து ஐந்தாண்டுகளாக பணவீக்கம் தொடர்ச்சியாக ஒற்றை இலக்க மட்டத்தில் காணப்பட்ட வேளையில், ஆண்டின் முதல் இரண்டு மாத காலப்பகுதியில் இரட்டை இலக்க மட்டத்திற்கு அணித்தாகக் காணப்பட்ட முதன்மைப் பணவீக்கம் அதன் பின்னர் ஆண்டின் இறுதிப் பகுதியில் நடு ஒற்றை இலக்க மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, மேம்பட்ட உள்நாட்டு நிரம்பல்

நிலைமைகளும் முன்மதியுடைய கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளுமே பக்கபலமாக விளங்கின. இதற்கமைய 2013 இறுதியளவில் முதன்மைப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.7 சதவீதமாகவும் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 6.9 சதவீதமாகவும் காணப்பட்டது.

அதேவேளையில், கூட்டுக் கேள்வியின் காத்திரமான முகாமைத்துவத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில்

**வரைபடம் 10 ஆண்டுக்கு ஆண்டு பணவீக்கம்**




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

மையப் பணவீக்கம் இவ்வாண்டுப் பகுதியில் படிப்படியாக மிதமடைந்து 2013இன் இறுதிக் காலாண்டில் அதன் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்து ஆண்டின் இறுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2.1 சதவீதத்திலும் ஆண்டுச் சராசரி அடிப்படையில் 4.4 சதவீதத்திலும் காணப்பட்டது. பணவீக்கத்திலும் பணவீக்க எதிர்பார்ப்புக்களிலும் காணப்பட்ட மிதமான தன்மையானது பொருளாதாரத்தில் கூலி அழுத்தங்களைக் குறைப்பதற்கும் முதலீட்டாளர் நம்பிக்கை உயர்வடைவதற்கும் உதவியது.

2012 திசெம்பரில் மத்திய வங்கியின் முக்கிய கொள்கை வட்டி வீதங்கள் 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டமையுடன் ஆரம்பமான நாணயக் கொள்கைத் தளர்த்தல்கள் 2013இலும் தொடர்ந்தன. 2013ஆம் ஆண்டுப் பகுதியில், பொதுவாக, கொள்கை வட்டி வீதங்கள் மேலும் 100 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்ட வேளையில், அதிகரித்த திரவத்தன்மை கடன் வழங்கல் வசதிக் கொள்கை நிலையினைப் பிரதிபலித்தது. யூன் மாத முதற் கிழமை வரை கொள்கை வட்டி வீத வீச்சின் ஏறத்தாழ மேல் எல்லைவரை தளம்பலடைந்து காணப்பட்ட சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதங்கள் 2013 மேயில் மத்திய வங்கிக் கொள்கை வட்டி வீதங்களைக் குறைத்தமையின் மூலம் நாணயக் கொள்கையின் போக்கினை மீள உறுதிப்படுத்தியமையின் காரணமாக வட்டி வீத வீச்சின் நடுப்பகுதிக்கு நகர்ந்தன. 2013 ஒத்தோபரில் கொள்கை வட்டி வீதங்கள் குறைக்கப்பட்டதுடன் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி இவ்வாண்டுப் பகுதியில் 217 அடிப்படைப் புள்ளிகளாக விளங்கி 2013 இறுதியில் 7.66 சதவீதத்தினைப் பதிவு செய்தன. இலங்கை வங்கிகளுக்கிடையிலான ஓரிரவு வழங்கல் வீதம் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்துடன் சேர்ந்து கீழ் நோக்கி நகர்ந்தது. கொள்கை வட்டி வீதங்களிலும் அழைப்புப் பண வீதங்களிலும் காணப்பட்ட கீழ் நோக்கிய சீராக்கங்களைத் தொடர்ந்து 2013இல் திறந்த சந்தைத் தொழிற்பாட்டு ஏலங்களில் சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதங்களும் வீழ்ச்சியடைந்தன.

இறுக்கமான திரவத் தன்மை நிலமையின் காலம் கடந்த தாக்கம் மற்றும் 2012இல் காணப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலை என்பன வங்கித்தொழில் துறையில் போட்டித்தன்மையினை அதிகரித்து தீவிரமான வைப்புத் திரட்சிக்கு வழிவகுத்தது. இது 2013 மே இறுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதமும்

**வரைபடம் 11 தெரிந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவு**




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதமும் முறையே 64 அடிப்படைப் புள்ளிகளினாலும் (10.74 சதவீதத்திற்கு) 69 அடிப்படைப் புள்ளிகளினாலும் (13.90 சதவீதத்திற்கு) அதிகரிக்கக் காரணமாகியது. எனினும், 2013இல் இடம்பெற்ற நாணயக் கொள்கைத் தளர்த்தல் வழிமுறைகளின் காரணமாக 2013இன் நடுப்பகுதியிலிருந்து வைப்பு வீதங்கள் கீழ் நோக்கிச் சீராக்கப்படத் தொடங்கின. எனவே, இவ்வாண்டுப் பகுதியில், சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம், 2013 இறுதியின் 10.10 சதவீதத்திலிருந்து 73 அடிப்படைப் புள்ளிகளினால் 9.37 சதவீதத்திற்கு குறைவடைந்த வேளையில், சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் 2013 இறுதியளவில் 13.21 சதவீதத்திலிருந்து 143 அடிப்படைப் புள்ளிகளினால் 11.78 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

ஆய்விற்குரிய காலப்பகுதியில் பெரும்பாலான வகைப் பிணையங்களுக்கு எதிரான கடன் வழங்கல் வீதங்கள் வீழ்ச்சியடைந்தன. 2013ஆம் ஆண்டுப் பகுதியில், அரச பிணையங்கள், வர்த்தகத்திலுள்ள இருப்புக்கள், நம்பிக்கைப் பெறுகைகள் மற்றும் பங்குகள், முறிகள் மற்றும் தொகுதிக் கடன்கள் என்பன குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன.

## 1.3 கூலிகள் மற்றும் தொழில் நிலை

புதிதாகத் தொழில் தேடுவோர் தொழிற்சந்தைக்குள் நுழைந்தமையின் பெருமளவு காரணமாக முன்னைய ஆண்டில் 4 சதவீதத்திலிருந்து சிறிதளவால் அதிகரித்த தொழிலின்மை வீதம் 2013ஆம் ஆண்டுப் பகுதியில் 4.4 சதவீதத்திற்கும் குறைவானதொரு மட்டத்தில் காணப்பட்டது. தொழிலிலுள்ளோரின் எண்ணிக்கையிலும் அதேபோன்று தொழிலற்ற ஆட்களின் எண்ணிக்கையிலும் ஏற்பட்ட அதிகரிப்பு 2013 இல் தொழிற்படை 4.1 சதவீதத்தினால் விரிவடைய வழிவகுத்தது.

ஆண்டின் இறுதியில் ஒற்றை இலக்க மட்டங்கள் 2013இல் அதிகரித்த பொருளாதார நடவடிக்கைகளுடன் இணைந்து காணப்பட்டன. 2013 இறுதியில் நாணயக் கூட்டுக்கள் விரும்பத்தக்க மட்டங்களை நோக்கி குறைவடைந்த வேளையில் முன்னைய ஆண்டின் இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகளின் காலம் கடந்த தாக்கம் மற்றும் தங்கத்தினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட கடன்களில் ஏற்பட்ட செங்குத்தான வீழ்ச்சி என்பன தனியார் துறைக்கான கொடுகடன் வழங்கலைக் குறைத்தன. தாழ்ந்த பணவீக்கம் பொருளாதார வளர்ச்சிக்கு வசதியளிக்கும் விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் நாணயக் கொள்கையினை மேலும் தளர்த்துவதற்கு மத்திய வங்கியை இயலச் செய்தது. 2012இல் பின்பற்றப்பட்ட பேரண்டப் பொருளாதார கொள்கைப் பொதியின் விரும்பத்தக்க சமநிலைப்படுத்தல் குறிக்கோள்கள் அடையப்பட்டமையானது சாதகமான பணவீக்கப் பெறுபேறுகள் மற்றும் எதிர்பார்ப்புக்களுடன் இணைந்து இவ்வாண்டுப் பகுதியில் நாணயக் கொள்கையினை மேலும் தளர்த்துவதற்கு மத்திய வங்கியினை இயலச் செய்தது. பணவீக்கத்தினை ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்தும் பேணியமையானது ஆண்டு முழுவதும் நாணயக் கொள்கைக் குறிக்கோளினை பின்பற்ற உதவியது. இவ்வாண்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான அபிவிருத்திகள் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தினை முன்னைய ஆண்டின் 52.6 சதவீதத்திலிருந்து 2013இல் 53.8 சதவீதத்திற்கு உயர்த்துவதற்கு உதவின. தொழில் வாய்ப்புக்களை எதிர்பார்த்து கிராமத்திலுள்ள பெண்கள் தொழிற்சந்தைக்குள் நுழைந்தமையின் பெறுபேறாக பெண்களின் தொழிற்படைப் பங்கேற்பு வீதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஒட்டுமொத்த தொழிற்படைப் பங்கேற்பு வீதம் உயர்வடையப் பங்களித்தது.

2013இல் தனியார் துறையின் பெயரளவுக் கூலி 5.7 சதவீதத்தினால் அதிகரித்தது. அநேக துணைத் துறைகளில் காணப்பட்ட குறைந்தபட்சக் கூலி வீதங்களில் காணப்பட்ட கணிசமான அதிகரிப்பு இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தது. இவ்வதிகரிப்பு ஆண்டின் இறுதியில் ஊழியர் சேம நிதியத்திற்கான உறுப்பினர்களின் பங்களிப்பு 2012இன் ரூ.2.3 மில்லியனிலிருந்து 2013 இறுதியில் ரூ.2.4 மில்லியனுக்குச் சிறிதளவு அதிகரிப்பிற்கு பங்களித்தது.

## 1.4 நாணயக் கொள்கையும் இறைக் கொள்கையும்

முன்னோக்கிய எதிர்காலக் கட்டமைப்பொன்றின் அடிப்படையில் எடுக்கப்பட்ட நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் பணவீக்கத்தினை நடு ஒற்றை இலக்க மட்டத்திற்கு வீழ்ச்சியடையச் செய்தமையின் மூலம் காத்திரமானது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறதுடன் வீழ்ச்சியடைந்து செல்லும் பணவீக்கமும் சாதகமான பணவீக்க எதிர்பார்ப்புக்களும் பொருளாதார நடவடிக்கையின் மீளெழுச்சிக்கு உதவியளிப்பதற்கு நாணயக் கொள்கையை அனுமதித்தன.

2012இல் ஒதுக்குப் பணத்தின் குறைந்த வளர்ச்சியின் தளத் தாக்கத்தின் காரணமாக ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சி 16.5 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டது. எனினும், 2013 யூலை 01ஆம் நாளிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் ஒதுக்கு நியதி விகிதத்தில் சேமிக்கப்பட்ட குறைப்பு விரிந்த பணத்தினை இலக்கிடப்பட்ட பாதையில் செலுத்துவதற்கு ஆண்டின் எஞ்சிய பகுதியில் எறிவு செய்யப்பட்ட ஒதுக்குப் பணப் பாதையில் கீழ் நோக்கிய திருத்தங்களை தேவைப்படுத்தியது.

2012 திசெம்பரிலிருந்து நாணயக் கொள்கை நிலையில் காணப்பட்ட தளர்த்தல் மற்றும் பணச் சந்தையில் காணப்பட்ட மிகையான ரூபாத் திரவத்தன்மை என்பன இவ்வாண்டுப் பகுதியில் சந்தை வட்டி வீதங்களில் கீழ் நோக்கிய சீராக்கங்களுக்கு வசதியளித்தன. குறுங்கால சந்தை வட்டி வீதங்கள் விரைவாக கீழ் நோக்கிச் சீராக்கப்பட்ட போதும் நீண்ட காலச் சந்தை வட்டி வீதங்கள், வீழ்ச்சியடைவதற்கு முன்னதாக, ஆண்டின் முதல் ஒரு சில மாதங்களாக கீழ் நோக்கிய போக்கில் நெகிழ்ச்சியற்ற தன்மையொன்றினைக் கொண்டிருந்தன. யூன் முதல் வாரம் வரையில் கொள்கை வட்டி வீத வீச்சின் ஏறத்தாழ மேல் எல்லை வரை தளம்பலுற்ற சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் இவ்வாண்டுப் பகுதியில் படிப்படியாக வீச்சின் நடுப்பகுதியினை நோக்கி நகர்ந்தது.

தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலை, ரூபாத் திரவத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் நிதிகளின் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பனவற்றிற்குப் பதிலிறுத்தும் விதத்தில், கணிசமான காலதாமதத்தின் பின்னரேனும், கடன் வழங்கல் வீதங்கள் கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டன. அனைத்து முதிர்ச்சிகளையும் கொண்ட அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் ஆண்டு முழுவதும் வீழ்ச்சியடைந்து கொள்கை வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் சந்தையில் காணப்பட்ட மிகையான திரவத்தன்மையினையும் மிதமான பணவீக்கத்தினையும் பணவீக்க எதிர்பார்ப்புக்களையும் பிரதிபலித்தன.

இறைத்திரட்சிக்கான அரசாங்கத்தின் தொடர்ச்சியான கடப்பாடுகளின் காரணமாக இறைப் பற்றாக்குறையும் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதமும் இவ்வாண்டுப் பகுதியில் குறைவடைந்தன. இறைக்

கொள்கை நடுத்தர காலத்தில் தொடர்ந்ததுடன் பிரதேச ரீதியாக சமநிலையான வளர்ச்சியையும் ஊக்குவிப்பதன் மீது தொடர்ச்சியாக கவனத்தினைச் செலுத்தி வந்த வேளையில், இறைத் திரட்சி முயற்சிகள் தொடர்பில் காணப்பட்ட அரசாங்கத்தின் கடப்பாடுகள் முக்கிய இறைக்குறிகாட்டிகள் படிப்படியாக மேம்பாடடைய வழிவகுத்தன. இதன்படி, இறைப் பற்றாக்குறை 2012இன் 6.5 சதவீதத்திலிருந்து 2013இல் மொ.உ.உற்பத்தியில் 5.9 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்ததெனினும் இது வரவு செலவுத்திட்ட

**வரைபடம் 12** **அரசிறையின் உள்ளமைப்பு (2013)**




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

மதிப்பீடான 5.8 சதவீதத்திலும் பார்க்க சிறிதளவு உயர்வானதாகக் காணப்பட்டது. அரசிறையில் மந்தமான வளர்ச்சி காணப்பட்ட போதும், இறைத்திரட்சிக்கு செலவினங்களைக் கட்டுப்படுத்த அரசாங்கம் எடுத்த ஒருங்கிணைந்த முயற்சிகளே காரணமாக அமைந்தது. அரச முதலீடுகள் மொ.உ.உற்பத்தியின் 5.5 சதவீதத்தில் பேணப்பட்டிருப்பினும் கூட மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட கணிசமான குறைப்பு மற்றும் மூலதன செலவினம் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டமை என்பன வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நடுத்தர கால பேரண்டப் பொருளாதார இறைக் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் குறைப்பதற்கு உதவின. இதனை அடையும் விதத்தில் அரசிறையினை அதிகரிப்பதற்கும் செலவினத்தினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் பல்வேறு வழிமுறைகளையும் மேற்கொண்ட வேளையில் நாட்டின் பிரதேச ரீதியில் சமநிலைப்படுத்தப்பட்ட பொருளாதார வளர்ச்சிக்கும் ஊக்குவிப்பு வழங்கப்பட்டது.

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் அரசிறை 2012இன் 13.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2013இல் 13.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வரி அரசிறை மற்றும் வரியல்லா அரசிறை இரண்டிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகளே காரணமாகும். மேலும், வரி அரசிறை கடந்த ஆண்டின் 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 11.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையின் காரணமாக மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறையின் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு தொடர்ந்தும் காணப்பட்ட போதும் ஏனைய வரிகளிலிருந்தான அரசிறை 2013இல் கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது. மேலும், மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக, மீண்டெழும் செலவினம் வீழ்ச்சியடைந்து, நடுத்தர காலத்தில் மீண்டெழும் செலவினத்தினை சிக்கனப்படுத்துகின்ற அரசாங்கத்தின் கடப்பாடுகளை பிரதிபலித்து, மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக வட்டிச் செலவினம் மெதுவாக வீழ்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டு சந்தையில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் தாழ்ந்த வட்டி வீதங்கள், மொத்த உள்நாட்டு படுகடன் இருப்பில் குறுங்கால படுகடனின் பங்கினைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகளும் இணைந்து கொண்டமையே காரணமாகும்.

அரசிறைச் சேகரிப்புக்கள் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவாகக் காணப்பட்ட போதும், செலவினம் சிக்கனப்படுத்தப்பட்டமையானது திரண்ட இறைப் பற்றாக்குறையினை வரவு செலவுத்திட்ட இலக்கிற்கு அணித்தானதொரு மட்டத்தில் பேணுவதனை இயலச்செய்தமையின் மூலம் அரசின் மூலவள இடைவெளி குறுக்கமடைந்து அரசின் நிதியிடல் தேவைப்பாடும் குறைவடைந்தது.

2013ஆம் ஆண்டு காலப்பகுதியில் ரூ.516.1 பில்லியன் கொண்ட திரண்ட பற்றாக்குறையினை நிதியிடுவதில் உள்நாட்டு நிதியிடல் மொத்தத்தில் 76 சதவீதத்திற்கு பங்களித்த வேளையில் வெளிநாட்டு நிதியிடல் மீதி 24 சதவீதத்திற்கு வகைகூறியது. மேலும், 2013இல் தேறிய உள்நாட்டு நிதியிடல் ஆரம்ப மதிப்பீடான ரூ.359.4 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.392.4 பில்லியனாக விளங்கிய வேளையில், தேறிய வெளிநாட்டு நிதியிடல் மதிப்பிடப்பட்ட தொகையான ரூ.148 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.123.7 பில்லியனாகக் காணப்பட்டது. அரசாங்கம் உள்நாட்டு நிதியிடல் மூலமாக வங்கித்தொழில் துறையில் பெருமளவில் பயன்படுத்திக் கொண்டமையானது 2013இல் ரூ.297 பில்லியனைக் கொண்ட தொகையைப் பிரதிபலித்ததுடன், ஆண்டிற்காக இலக்கிடப்பட்ட ரூ.70 பில்லியனைக் கொண்ட தொகையினை விஞ்சிக் காணப்பட்டதுடன், இது வங்கித்தொழில் துறையிலிருந்து கடன்பட்ட ரூ.131.5 பில்லியன் கொண்ட தொகையிலும் பார்க்க உயர்வானதாகக் காணப்பட்டது. எனினும், வங்கியல்லா துறைக் கடன்பாடுகள் 2013ஆம் ஆண்டிற்கான ஆரம்ப மதிப்பீடான ரூ.289.4 பில்லியன் கொண்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ.95.4 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டுக் கடன்பாடுகளின் பங்காக வங்கியல்லாக் கடன்பாடுகள் 2012இல் 35 சதவீதத்திலிருந்து 2013இல் 24 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையினை எடுத்துக் காட்டியது. திரண்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையின் குறைப்பிற்கு வங்கித்தொழில் அல்லாத் துறையின் பங்களிப்பில் வீழ்ச்சிப் போக்கு காணப்பட்ட போதும், வங்கித்தொழில் அல்லாத் துறையில் முக்கியமாக நிறுவன ரீதியிலான முதலீட்டாளர்களிலொருவராக இன்னமும் ஊ.சே. நிதியம் விளங்குகின்றது. இதற்கு இவ்வாண்டுப்

பகுதியில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு நீண்ட கால சந்தைப்படுத்தத்தக்க சாதனங்களின் மீது அரசாங்கம் அதிகரித்தளவில் தங்கியிருந்தமையும் அந்நீண்ட காலச் சாதனங்களின் உயர்ந்தளவு பங்கேற்பு 2013இல் ஊ.சே. நிதியத்தினால் மேற்கொள்ளப்பட்டமையுமே காரணங்களாகும்.

## 1.5. அரச பிணையங்கள் சந்தையும் விளைவு வீதங்களின் அசைவுகளும்

2013ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் அரச பிணைய சந்தையில் விளைவு வீதங்கள் படிப்படியாக வீழ்ச்சியடைந்தன. 3 மாதங்களிலிருந்து 20 ஆண்டுகள் வரையான அரச பிணையங்கள் (உ-ம் திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்) தொடர்பான விளைவு வளையிடு முழுவதிலுமான விளைவு வீதங்கள் 24 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 246 அடிப்படைப் புள்ளிகள் வரையில் வீழ்ச்சியடைந்தன. 6 மாத காலத்திற்கான விளைவு வீதங்கள் மிகக் கூடுதலாக 347 அடிப்படைப் புள்ளிகளினால் வீழ்ச்சியடைந்தன. விளைவு வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி பண வீக்கம் மற்றும் பண வீக்க எதிர்பார்புக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினைக் கருத்திற் கொண்டு மத்திய வங்கி நாணயக் கொள்கையினைத் தளர்த்தியமையின் விளைவாக ஏற்பட்டதாகும். மேலும், அரச பிணையங்கள் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த பங்கேற்பு, இக்காலத்தில் பெரும் பகுதியில் பணச் சந்தையில் நிலவிய மிகையான திரவத்தன்மை என்பனவும் குறைந்தளவு விளைவிற்குப் பங்களித்தன. 2013இல் முதலாந்தரச் சந்தையில் திறைசேரி முறிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு வீதங்கள் விளைவு வளையிடு முழுவதிலும் (2-30 ஆண்டுகள்) 500 அடிப்படைப் புள்ளிகளிலிருந்து 200 அடிப்படைப் புள்ளிகள் வரை வீழ்ச்சியடைந்தன.

வரைபடம் 13 அரச பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தை விளைவின் வாராந்த அசைவு




மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2 அரச பிணையங்களின் விளைவு வீதங்கள்

ஆண்டிற்கு சதவீதம்

| விடயம் | முதனிலைச் சந்தை | | | | இரண்டாந்தரச் சந்தை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | | 2012 | | 2013 | |
| | தாழ்ந்த | உயர்ந்த | தாழ்ந்த | உயர்ந்த | தாழ்ந்த | உயர்ந்த | தாழ்ந்த | உயர்ந்த |
| **திறைசேரி உண்டியல்கள்** | | | | | | | | |
| 91 நாட்கள் | 8.67 | 12.19 | 7.54 | 9.91 | 8.63 | 12.06 | 7.52 | 10.12 |
| 182 நாட்கள் | 8.71 | 13.12 | 7.85 | 10.99 | 8.71 | 13.10 | 7.83 | 11.26 |
| 364 நாட்கள் | 9.30 | 13.60 | 8.29 | 11.38 | 9.28 | 13.34 | 8.27 | 11.72 |
| **திறைசேரி முறிகள்** | | | | | | | | |
| 2 ஆண்டுகள் | 9.45 | 13.62 | - | - | 9.37 | 13.77 | 8.53 | 11.65 |
| 3 ஆண்டுகள் | 10.20 | 13.50 | 10.87 | 10.98 | 9.58 | 13.93 | 9.05 | 11.75 |
| 4 ஆண்டுகள் | 9.55 | 14.10 | - | - | 9.69 | 14.16 | 9.54 | 11.95 |
| 5 ஆண்டுகள் | 10.75 | 14.15 | 10.64 | 11.17 | 9.78 | 14.35 | 10.26 | 12.01 |
| 6 ஆண்டுகள் | 9.75 | 14.25 | 10.97 | 9.81 | 14.36 | 10.37 | 11.99 | |
| 10 ஆண்டுகள் | 10.25 | 14.75 | 11.76 | 11.80 | 9.93 | 14.63 | 10.88 | 12.30 |
| 15 ஆண்டுகள் | - | - | 11.90 | 12.21 | 10.07 | 14.59 | 11.14 | 12.72 |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

2013ஆம் ஆண்டுப் பகுதியில் இரண்டாந்தரச் சந்தைக்கான விளைவு வீதங்களும் வீழ்ச்சியடைந்து, நாணயக் கொள்கைத் தளர்த்தலையும் சாதகமான பணவீக்கச் சூழலையும் பிரதிபலித்த 2013இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் உறுதியாக காணப்பட்டதுடன், அதன் பின்னர் அவை குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. அனைத்து முதிர்ச்சிகளையும் கொண்ட திறைசேரி

உண்டியல்கள் மீதான விளைவுகள் 2012இன் இறுதியுடன் ஒப்பிடுகையில் 2013இன் இறுதியில் 248 அடிப்படைப் புள்ளிகளினால் 343 அடிப்படைப் புள்ளிகளுக்கு வீழ்ச்சியடைந்தன. அதனைத் தொடர்ந்து திறைசேரி முறிகள் மீதான இரண்டாந்தரச் சந்தை வீதங்களும் இதே தன்மையினைப் பிரதிபலித்து, 2012இன் இறுதியில் நிலவிய மட்டங்களுடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் 217 - 288 அடிப்படைப் புள்ளிகளைக் கொண்ட வீச்சினை எடுத்துக் காட்டின.

## 2. ஊழியர் சேம நிதிய செயலாற்றத்தின் மீளாய்வு

2013 இறுதியில் நிதியத்தின் மொத்தப் பெறுமதி 2012 இறுதியில் காணப்பட்ட ரூ.1.1 றில்லியனைக் கடந்து ரூ.1.3 றில்லியனை அடைந்து 13.6 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. உறுப்பினர் கணக்குகளின் மொத்த எண்ணிக்கை 2013 இறுதியில் 15.0 மில்லியனை அடைந்ததுடன், 2012இன் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 14.6 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீதம் கொண்ட

**வரைபடம் 14** **பங்களிப்புக்கள், மீளளிப்புக்கள் மற்றும் தேறிய பங்களிப்புக்கள்**




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| பங்களிப்புக்கள் (ரூ.பில்.) | 48.7 | 54.8 | 61.9 | 70.2 | 80.5 |
| மீளளிப்புக்கள் (ரூ.பில்) | 31.9 | 34.9 | 47.3 | 48.7 | 50.2 |
| தேறிய பங்களிப்புக்கள் (ரூ.பில்) | 16.8 | 19.9 | 14.6 | 21.5 | 30.2 |

மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அதிகரிப்பைக் காட்டியது. பங்களிக்கின்ற உறுப்பினர் கணக்குகளின் எண்ணிக்கை 2012 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 2.3 மில்லியனிலிருந்து 2013 இறுதியில் 2.4 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் பங்களிப்புச் செலுத்தாத உறுப்பினர் கணக்குகள் 2012 இறுதியின் 12.3 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013 இறுதியில் 12.8 மில்லியனாகக் காணப்பட்டது. அதேவேளை, பங்களிக்கின்ற தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2012 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 68,140 இலிருந்து 2013 இறுதியில் 70,392 இற்கு 3.3 சதவீதத்தினால் அதிகரித்தது.

### 2.1 உறுப்பினர் பங்களிப்புக்களும் ஓய்வுகால நன்மைகளின் கொடுப்பனவுகளும்

2013இல் உறுப்பினர் பங்களிப்புக்கள் 2012இன் ரூ.70.2 பில்லியனிலிருந்து ரூ.80.5 பில்லியனுக்கு 14.7 சதவீதத்தினால் அதிகரித்தன. 2013இல் உறுப்பினர்களுக்கும் அவர்களது சட்ட ரீதியான வாரிசுகளுக்கும் மீளளிப்பு நன்மைகளாக செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூ.50.2 பில்லியனாகக் காணப்பட்டது. இது 2012இல் செலுத்தப்பட்ட ரூ.48.7 பில்லியனை விட 3 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். இதன்படி,

**வரைபடம் 15** **முதலீட்டுச் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு 2008 - 2013**




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 3** **ஊ.சே. நிதிய மீளளிப்புக் கொடுப்பனவு - 2013**

| ஊ.சே. நிதிய மீளளிப்பிற்கான காரணம் | மீளளிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | மீளளிப்பு நன்மைகளின் மொத்தத் தொகை | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | % | தொகை (ரூ.பில்.) | % |
| ஓய்வூதிய வயதினை அடைந்தமை | 73,596 | 64.49 | 38.53 | 76.99 |
| திருமணம் காரணமாக ஓய்வுபெற்றமை | 24,614 | 21.57 | 4.84 | 9.68 |
| புலம்பெயர்ந்தமை | 1,739 | 1.52 | 2.24 | 4.47 |
| மருத்துவ காரணங்கள் | 1,017 | 0.89 | 0.55 | 1.11 |
| உறுப்பினரின் மரணம் | 5,392 | 4.73 | 2.31 | 4.61 |
| ஓய்வூதிய தொழிலொன்றில் இணைந்து கொண்டமை | 7,734 | 6.78 | 1.55 | 3.10 |
| ஏனையவை | 22 | 0.02 | 0.02 | 0.04 |
| **மொத்தம்** | **114,114** | **100.0** | **50.04** | **100.0** |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

தேறிய பங்களிப்பும் (மீளளிப்பு நன்மைகளைக் கழித்த மொத்தப் பங்களிப்பு) முன்னைய ஆண்டின் 21.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.30.3 பில்லியனாக 40.9 சதவீதத்தினால் அதிகரித்தது.

கடந்த ஐந்தாண்டுகளில், பங்களிப்புக்கள் மீளளிப்புக் கொடுப்பனவுகளை விட உயர்ந்த வேகத்தில் அதிகரித்துக் கொண்டிருப்பதன் காரணமாக தேறிய பங்களிப்பில் (வரைபடம் 14) அதிகரிப்பொன்று ஏற்பட்டிருக்கின்றது ஓய்விற்குரிய வயதினை அடைந்து ஓய்வு பெற்றவர்களுக்குச் செய்யப்பட்ட மீளளிப்பு, மீளளிப்பு நன்மைகளில் பெரும் பங்கிற்கு வகை கூறியதுடன், அதற்கடுத்ததாக திருமணம் செய்த காரணத்தினால் ஓய்வுபெற்ற மகளிருக்கான மீளளிப்புக் காணப்பட்டது.

## 2.2 ஊ.சே.நிதியத்தின் முதலீட்டுச் சொத்துப்பட்டியல்

நிதியத்தின் மொத்த முதலீட்டு சொத்துப் பட்டியல் (ஏட்டுப் பெறுமதி) 2012இன் ரூ.1,105.5 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.1,257.3 பில்லியனிற்கு 13.7 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்துள்ளது. (வரைபடம் 15) முதலீட்டு சொத்துப்பட்டியலில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு, முதலீட்டின் மீதான வருவாயும் உறுப்பினர் பங்களிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புமே முக்கிய தூண்டுதலாக அமைந்தன.

### 2.2.1 அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல்

திறைசேரி முறிகள், ரூபாக் கடன்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் என்பவற்றை உள்ளடக்கிய அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல் 2012இன் ரூ.1,035.2 பில்லியனிலிருந்து 2013 இறுதியில் ரூ.1,163.6 பில்லியனிற்கு 12.4 சதவீதத்தினால் அதிகரித்தது. 2013 இறுதியில் திறைசேரி முறிகளின் சொத்துப்பட்டியல் மொத்தச் சொத்துப்பட்டியலின் 89.6 சதவீதமாகக் காணப்பட்டது. இக்காலப்பகுதியில், ரூபாக் கடன்களின் பங்கு 2.1 சதவீதத்திலிருந்து 1.8 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்கு திறைசேரி முறிகள் மற்றும் உண்டியல்களிலான முதலீடுகள் அதிகரித்தமையும் ரூபாக் கடன்களிலான தேறிய முதலீடு பூஜ்யமாக இருந்தமையுமே காரணமாகும்.

2013ஆம் ஆண்டுப் பகுதியில், ஊ.சே. நிதியம் அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலிலிருந்து வட்டி வருமானமாகவும் கடன் தீர்ப்பனவு வருமானமாகவும் மூலதன இலாபமாகவும் ரூ.133.0 பில்லியனை ஈட்டிக் கொண்டதன் மூலம் நிதியத்தின் மொத்த வருமானத்தில் 97.3 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தியது. 2013இல் சராசரி அரச பிணையங்கள் மீதான வருவாயின் தேறல் வீதம் 12.1 சதவீதமாகக் காணப்பட்ட வேளையில் அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலில் நிறையேற்றப்பட்ட

**அட்டவணை 4 — அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சித் தோற்றப்பாடு - 2013 இன் இறுதியில்**

| முதிர்ச்சிக் காலம் | முதிர்ச்சிப் பெறுமதித் தொகை (ரூ. பில்லியன்) | பங்கு (%) | சராசரி நிறையேற்றப்பட்ட விளைவு (%) |
|---|---|---|---|
| | 2013 | 2013 | 2013 |
| 1 ஆண்டிற்கும் குறைவானது | 139.5 | 10.0 | 9.8 |
| 1 மற்றும் 2 ஆண்டுகள் | 195.7 | 14.1 | 9.8 |
| 3 மற்றும் 4 ஆண்டுகள் | 216.2 | 15.5 | 10.8 |
| 3 மற்றும் 4 ஆண்டுகள் | 842.0 | 60.4 | 11.9 |
| **மொத்தம்** | **1,393.4** | **100.0** | **11.2** |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அரச பிணையங்கள் மீதான முதலீடுகளின் குவிவு 2012இன் 93.6 சதவீதத்திலிருந்து 2013இறுதியில் 92.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் பங்குரிமை மூலதனங்கள் மீதான முதலீடுகளின் பங்கு 2012இன் 5.4 சதவீதத்திலிருந்து 5.8 சதவீதத்திற்கு அதிகரித்த வேளையில் 1.2 சதவீதமானவை கம்பனி தொகுதிக் கடன்களிலும் நிதியத்தின் திரவத்தன்மை தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக மீதி 0.5 சதவீதம் அரச பிணையங்கள் மீதான நேர்மாற்று மீள்கொள்வனவு போன்ற உயர் திரவத்தன்மை கொண்ட சொத்துக்களிலும் வைப்புச் செய்யப்பட்டன.

சராசரி விளைவு 2013 இறுதியில் 11.2 சதவீதமாகக் காணப்பட்டது. மொத்த அரசு பிணையங்களின் சொத்துப்பட்டியலில் 39.6 சதவீதம் 5 ஆண்டுகளுக்குள் முதிர்ச்சி அடைய உள்ள வேளையில் அரசபிணை சொத்துப்பட்டிலில் 60.4 வீதம் 5 ஆண்டுகளில் பின்னர் முதிர்ச்சி அடைய உள்ளது. (அட்டவணை 4) இறுதியிலுள்ளவாறான மொத்த அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலில் 54.8 சதவீதம் 5 ஆண்டுகளுக்குள் முதிர்ச்சியடையவுள்ள வேளையில் அரச பிணையங்கள் சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்குரிய காலம்

**வரைபடம் 16 — பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலின் துறைவாரியான உள்ளமைப்பு - 2013 இன இறுதியில்**




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

பட்டியலிடப்பட்ட வங்கித்தொழில் மற்றும் நிதி, சுற்றுலா விடுதி மற்றும் பயணம், பன்முகப்படுத்தப்பட்ட உடமைகள், தயாரிப்பு, கட்டுமானம் மற்றும் பொறியியல், சக்தி மற்றும் (16 வரைபடம்) வலு மற்றும் தொடர்பூட்டல் துறைகள் என்பனவற்றை உள்ளடக்கிய நன்கு பன்முகப்படுத்தப்பட்ட விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துப்பட்டியலைத் தொடர்ந்தும் பேணியது பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியல், 2013ஆம் ஆண்டில் பங்கிலாபங்கள் மூலதன இலாபம் இழப்பு சொத்துப்பட்டியலினூடாக சந்தைப் பெறுமதியின் சந்தைப்படியான இலாபம்/ இழப்பு என்பற்றினூடாக ரூ. 3.3 பில்லியன் வருமானத்தினை

**அட்டவணை 5 — முதலீடுகள் மீதான வருமானம்**

| வருமானத்தின் மூலங்கள் | 2012 | | 2013 | |
|---|---|---|---|---|
| | தொகை (ரூ. மில்.) | பங்கு (%) | தொகை (ரூ. மில்.) | பங்கு (%) |
| வட்டி மற்றும் கடன் தீர்ப்பனவு இலாபம் | 118,696 | 97.8 | 131,994 | 96.8 |
| அரச பிணையங்களிலிருந்தான மூலதன இலாபம் | 34 | - | 1,016 | 0.7 |
| சந்தைப்படியான இலாபம்/ (இழப்பு) | (388) | (0.3) | (45) | - |
| பங்குரிமை மூலதனத்திலிருந்தான மூலதன இலாபம் | 1,020 | 0.8 | 112 | 0.1 |
| பங்கு இலாபங்கள் | 1,996 | 1.7 | 3,226 | 2.4 |
| **மொத்தம்** | **121,358** | **100.0** | **136,303** | **100.0** |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

அதிகரித்தமையின் காரணமாக (அட்டவணை 4) 2013இல் இது 39.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## 2.2.2 பங்குரிமை மூலதனத்தின் சொத்துப்பட்டியல்

பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் ஆகிய இரண்டையும் உள்ளடக்கிய பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியல் 2012இன் 59.2 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.72.8 பில்லியனுக்கு ரூ.13.6 பில்லியனால் (22.9 சதவீதம்) அதிகரித்தமைக்கு பட்டியலிடப்பட்ட மற்றும் பட்டியலிடப்படாத பங்குரிமை மூலதனம் ஆகிய இரண்டிலும் காணப்பட்ட புதிய முதலீடுகளும் ஊ.சே.நிதியம் ஏற்கனவே முதலீடு செய்துள்ள கம்பனிகளில் முதலீடுகள் அதிகரித்தமையுமே காரணங்களாக அமைந்தன. 2013 இறுதியில் ரூ.72.3 பில்லியன் கொண்ட முதலீட்டு சொத்துப்பட்டியலொன்றையும் ரூ. 0.5 பில்லியன் கொண்ட வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலொன்றையும் உள்ளடக்கிய பங்குரிமை மூலதன சொத்துப்பட்டியல் செலவில் காணப்பட்டது.

ஊ.சே. நிதியம் அடிப்படையில் ஆற்றல்வாய்ந்த கம்பனிகளைக், குறிப்பாக, கொழும்புப் பங்குச் சந்தையில் உருவாக்கியதுடன் இது 2012இல் உழைக்கப்பட்ட ரூ. 2.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 26.9 சதவீதம் கொண்ட அதிகரிப்பை பதிவு செய்தது.

## 2.2.3 கம்பனிப் படுகடன் சொத்துப்பட்டியல்

ஊ.சே. நிதியத்தின் முதலீடுகுள் கம்பனித் தொகுதிக் கடன்கள், நம்பிக்கைச் சான்றிதழ்கள் மற்றும் ஈட்டின் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் போன்ற முதலீட்டுத் தரம் கொண்ட கம்பனி படுகடன் சாதனங்களில் முதலீடு செய்யப்பட்டன. 2013இல் நிதியம் சந்தையில் பட்டியலிடப்பட்ட 10 படுகடன் வழங்கல்களில் முதலீடு செய்யப்பட்டது. 2013. திசெம்பர் 13 இல் நிதியத்தின் கம்பனி படுகடன் சொத்துப்பட்டியல் ரூ.14.3 பில்லியனாகக் காணப்பட்டது. இது மொத்தச் சொத்துப்பட்டியலில் 1.1 சதவீதம் மட்டுமேயாகும். நிதியமானது கம்பனி படுகடன் சொத்துப்பட்டியலிருந்து ரூ.1,256 மில்லியன் கொண்ட வட்டி வருமானத்தினை உழைத்ததுடன், சராசரி சொத்துப்பட்டியல் மீதான வருவாய் வீதம் ஆண்டுக்கு 11.22 சதவீதமாகக் காணப்பட்டது.

### 2.2.4நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

நிதியத்தின் திரவத்தன்மையினை முகாமைப்படுத்தும் பொருட்டு, நாளாந்த மிகை நிதியம் மீள்கொள்வனவுச் சந்தையில் முதலீடு செய்யப்படுகின்றது. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் நிதியம் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கலிகளிலிருந்து ரூ.389 மில்லியன் கொண்ட வட்டி வருமானத்தினை ஈட்டிக் கொண்டது.

அட்டவணை 6 — தொழிற்பாட்டுச் செலவினம்

| விடயம் | நாணயச் சபை | | | தொழில் திணைக்களம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | மாற்றம் | 2012 | 2013 | மாற்றம் |
| | (ரூ. மில்.) | (ரூ. மில்.) | (%) | (ரூ. மில்.) | (ரூ. மில்.) | (%) |
| ஆளணிச் செலவினங்கள் | 288 | 334 | 15.97 | 226 | 235 | 3.98 |
| நிர்வாகச் செலவினங்கள் | 224 | 237 | 5.80 | 172 | 127 | (26.16) |
| ஏனைய செலவினங்கள் | 25 | 33 | 32.00 | 12 | 12 | - |
| மொத்தம் | 537 | 604 | 12.48 | 410 | 374 | (8.78) |
| மொத்த வருமானத்தின் % ஆக மொத்தச் செலவுகள் | **0.44** | **0.44** | **0.34** | **0.34** | **0.27** | |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### 2.2.5 நிதியத்தின் வருமானம்

2013இல் நிதியம் ரூ.136.3 பில்லியன் கொண்ட மொத்த வருமானத்தினை ஈட்டியதுடன், முன்னைய ஆண்டின் மொத்த வருமானத்துடன் ஒப்பிடுகையில் 12.6 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. (அட்டவணை 5). வட்டி வருமானம் நிதியத்திற்கான வருமானத்தின் முக்கிய மூலமாக (வருமானத்தின் 76.9 சதவீதம்) இருந்தது. வட்டி வருமானம் 2012இன் ரூ.90.9 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.105.0 பில்லியனுக்கு 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், மூலதன இலாபம் மற்றும் பங்கிலாபம் இரண்டினையும் உள்ளடக்கிய பங்குரிமை மூலதன சொத்துப்பட்டியலிலிருந்து உருவாக்கப்பட்ட வருமானம் 2012இல் உழைக்கப்பட்ட ரூ.3,016 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2013இல் ரூ.3,338 மில்லியனுக்கு 10.7 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், திறைசேரி முறிகளிலிருந்தான கடன் தீர்ப்பனவு இலாபம் 2012இன் 27.8 பில்லியனிலிருந்து 2013இல் ரூ.26.9 பில்லியனுக்கு 3.0 சதவீதத்தினால் குறைவடைந்தமைக்கு சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலமும் மிகைமதிப்பு முறிகளில் முதலீடுகளும் அதிகரித்தமையே காரணமாகும்.

வரைபடம் 17 — உறுப்பினர் நிலுவைகளும் செலுத்தப்பட்ட வட்டியும்




மூலம்: ஊ.சே.நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

### 2.3 தொழிற்பாட்டுச் செலவினம்

முன்னைய ஆண்டுகளைப் போன்றே 2013இலும் நிதியத்தின் மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம் ரூ.978.9 மில்லியனுக்கு 2012இன் ரூ.947.7 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 3.29 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு ஆளணிச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்தது. இருப்பினும் கூட, ஆய்வுக்குரிய ஆண்டுப் பகுதியில் நிதியம் மொத்த தொழிற்பாட்டு செலவினத்தினை அதன் மொத்த வருமானத்தில் 0.7 சதவீதத்திற்கு குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருந்தது. தனிப்பட்ட நிதிய முகாமையாளர்களினால் 1 சதவீதம் - 2 சதவீதம் வரையிலான முகாமைத்துவக் கட்டணம் விதிக்கப்படுகின்றமையினைக் கருத்திற் கொள்கையில் தொழிற்பாட்டுச் செலவினத்தினை மொத்த வருமானத்தின் 1 சதவீதத்திற்குக் கீழே பேணக்கூடியதாக இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதொரு சாதனையேயாகும்.

### 2.4 வரிச் செலவினம்

2013ஆம் ஆண்டுப் பகுதியில் ஊ.சே. நிதியம் ரூ.10,068 மில்லியனை வருமான வரியாகச் செலுத்திய, 2012இல் செலுத்தப்பட்ட ரூ.8,636 மில்லியன் வருமான வரியுடன் ஒப்பிடுகையில் 16.5 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

## 2.5 உறுப்பினர் கணக்கு நிலுவைகளும் செலுத்தப்பட்ட வட்டியும்

2013 இல் உறுப்பினர்களிடையே ரூ.126.9 பில்லியன் கொண்ட தொகை வட்டியாக பகிர்ந்தளிக்கப்பட்டமையின் காரணமாக உறுப்பினர் நிலுவைகள் 2012 இன் ரூ.1,124 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ.1,281 பில்லியனுக்கு 13.9 சதவீதத்தினால் உயர்வடைந்தது. வீழ்ச்சியடைந்து செல்லும் வட்டி வீதச் சூழல் காணப்பட்ட போதும் நிதியமானது 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்காக 11.0 சதவீதம் கொண்ட வட்டியை பிரகடனப்படுத்தக்கூடியதாக இருந்தது.

## 2.6 இடர்நேர்வு முகாமைத்துவம்

இலங்கையின் மிகப் பெரிய ஓய்வூதிய நிதியமாக விளங்கி வருகின்ற ஊ.சே.நிதியம் தனியார் மற்றும் அரசுசார் துறை ஊழியர்களுக்கு உயர்ந்தபட்ச ஓய்வுநிதிய நன்மைகளை வழங்குவதற்காக நீண்ட கால சேமிப்புக்களை முகாமைப்படுத்தி வருகின்ற வேளையில் நிதியத்தின் பாதுகாப்பினையும் அதன் முதலீடுகள் மீதான உயர்ந்தபட்ச வருவாய்களையும் உறுதிப்படுத்துகின்றது. ஊ.சே. நிதியம் 2013 இறுதியிலுள்ளவாறு முக்கிய நிதியியல் நிறுவனங்களின் மொத்தச் சொத்துக்களில் ஏறத்தாழ 12.6 சதவீதத்தினைக் கொண்டிருப்பதனால் நிதியியல் துறையில் முறையியல் சார்ந்த முக்கிய நிதியியல் நிறுவனமாக விளங்கி வருகின்றது. ஆகவே, நாணயச் சபை நிதியத்தின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விதத்திலும் அதன் மூலம் நாட்டின் நிதியியல் முறைமையை பாதுகாக்கும் விதத்திலும் நிதியத்துடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளை முகாமைத்துவ தொடர்பில் பெருமளவு வலியுறுத்தல்களை மேற்கொண்டிருக்கிறது. ஊ.சே.நிதியத்தினால் எதிர்நோக்கப்படும் முக்கிய இடர்நேர்வுகளாக கொடுகடன் இடர்நேர்வு, சந்தை இடர்நேர்வு, திரவத்தன்மை இடர்நேர்வு மற்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பன காணப்பட்டன.

### 2.6.1. கொடுகடன் இடர்நேர்வு

கொடுகடன் இடர்நேர்வு என்பது இணைத்தரப்பினர் அல்லது வழங்குநரொருவர் குறித்துரைக்கப்பட்டதொரு காலப்பகுதிக்குள் வட்டியையும் முதலையும் தீர்ப்பனவு செய்கின்ற அவர்களது நிதியியல் கடப்பாடுகளை பூர்த்தி செய்யத் தவறுவதனால் தோன்றக்கூடிய சாத்தியமானதொரு இடர்நேர்வாகும். முதலீடுகளில் 92.5 சதவீதம் அரச பிணையங்களில் காணப்படுவதனால் நிதியத்தின் கொடுகடன் இடர்நேர்வு ஆகக் குறைந்த மட்டத்திற்கு குறைக்கப்பட்டுள்ளது. சொத்துப்பட்டியலில் ஏறத்தாழ 1.5 சதவீதத்திற்கு வகைகூறும் கம்பனிப் படுகடனிலிருந்து எழுகின்ற கொடுகடன் இடர்நேர்வு மிகக் குறைவாகும். ஏனெனில் நிதியம் முதலீட்டு தரமிடப்பட்ட கம்பனிகளின் படுகடன் சாதனங்களில் மட்டுமே முதலீடு செய்யப்பட்டுள்ளது. இடர்நேர்வுகளையும் வருவாய்களையும் பரிசீலனை செய்வதன் மூலம் முழுமையான ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் மட்டுமே அத்தகைய முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், நிதியத்தின் ஏறத்தாழ 0.5 சதவீதத்தினைக் கொண்டிருப்பதாக அநுமானிக்கப்படும் அனைத்து நேர்மாற்று மீள்கொள்வனவு முதலீடுகளும் போதுமான அரச பிணைகளினால் பிணையிடப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஊ.சே.நிதியத்தின் கொடுகடன் இடர்நேர்வு மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

### 2.6.2 சந்தை இடர் நேர்வு

சந்தை இடர்நேர்வு என்பது வட்டி வீதங்கள், பங்குரிமை மூலதன விலைகள் மற்றும் செலாவணி வீதம் போன்ற சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வாகும். தற்பொழுது, நிதியத்தினால் எதிர்நோக்கப்படுகின்ற சந்தை இடர்நேர்வுகள் இரண்டு வகைப்படும் அவையாவன வட்டி வீத இடர்நேர்வு மற்றும் பங்குரிமை மூலதன விலைகளின் இடர்நேர்வு. சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கும் பொழுது, சந்தை முறி வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் பெறுமதி தேய்வடைவதுடன் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைகின்ற பொழுது, நிதியமானது முதலீடுகளை குறைந்த வட்டி வீதங்களில் மேற்கொள்ள வேண்டியிருக்கும். எனினும், வேறுபட்ட முதிர்ச்சிகளிலும் விளைவுகளிலும் பொருத்தமான விதத்தில் திறைசேரி முறிகளைத் தெரிவுசெய்வதன் மூலமும் வர்த்தகப்படுத்தல் சொத்துப்பட்டியலின் அளவினை மட்டுப்படுத்துவதன் மூலமும் இவ்விடர்நேர்வுகள் காலத்திற்குக் காலம் முகாமைப்படுத்தப்பட்டு வருகின்றன.

நிதியத்தினால் எதிர்நோக்கப்படுகின்ற பங்குரிமை மூலதன விலை இடர்நேர்வு யாதெனில் பங்கு விலைகளில் ஏற்படுகின்ற வீழ்ச்சியின் காரணமாக பங்குரிமை மூலதனச் சொத்துப்பட்டியலின் பெறுமதியில் ஏற்படும் குறைவாகும். இவ்விடர்நேர்வானது பங்குரிமை மூலதனத்தின் சொத்துப்பட்டியல் மீதான மேல் எல்லையை நிர்ணயிப்பதன் மூலமும் வங்கித்தொழில் நிதி மற்றும் காப்புறுதி, பன்முகப்படுத்தப்பட்ட உடமைகள், சுற்றுலாவிடுதி மற்றும் பயணங்கள், கட்டுமானம் மற்றும் பொறியியல், தயாரிப்பு மற்றும் தொலைத் தொடர்பூட்டல் போன்ற பல்வேறுபட்ட துறைகளில் பங்குரிமை மூலதனத்தினைப் பன்முகப்படுத்துவதன் மூலமும் அனைத்துக் காரணிகள் தொடர்பிலும் கவனமாக பகுப்பாய்வினை மேற்கொண்டதன் பின்னர் முதலீடுகளை மேற்கொள்வதன் மூலமும் தணிக்கப்பட்டது. மேலும், பங்குரிமை மூலதனத்தின் வெளிப்படுத்துகை நிதியத்தின் மொத்த சொத்துப்பட்டியலில் 5.8 சதவீதமாக மாத்திரம் இருந்தமையினால் பங்குரிமை மூலதனத்தின் மீதான சந்தை இடர்நேர்வு ஒப்பீட்டு ரீதியில் குறைவாகக் காணப்பட்டது.

### 2.6.3 திரவத்தன்மை இடர்நேர்வு

திரவத்தன்மை இடர்நேர்வு என்பது, உரிய திகதியில் நிதியியல் கடப்பாடுகளை நிறைவேற்ற இயலாமல் இருப்பதிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வாகும். நிதியத்தின் தேறிய பங்களிப்புக்கள் (ஏறத்தாழ ரூ.2.3 பில்லியன்) ஒவ்வொரு மாதத்திலும் நேர்க்கணியமாக இருப்பது நிதியத்திற்கு குறைந்தபட்ச திரவத்தன்மை இடர்நேர்வினைத் தோற்றுவிக்கிறது. வருமானம் மற்றும் முதிர்ச்சிப் பெறுகைகள் போன்ற ஏனைய காசுப்பாய்ச்சல்களின் காரணமாக, மொத்த காசு உட்பாய்ச்சல்களின் சதவீதமாக ஆண்டு மீளளிப்புக் கொடுப்பனவுகள் 2013 இறுதியில் 5.9 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும், உயர்ந்த திரவத்தன்மை கொண்ட அரச பிணையங்கள் சொத்துப்பட்டியல் கிடைக்கத்தக்கதாக இருந்தமை ஏதேனும் திரவத்தன்மைத் தடைகளுக்கெதிரான மேலதிக தாங்கிருப்பொன்றினை வழங்கியது. நாளாந்த திரவத்தன்மை முகாமைத்துவக் கருவியொன்றாக நாளாந்த அடிப்படையில் போதுமான நிதியினைப் பேணுவதற்காக ஓரிரவு மீள்கொள்வனவுச் சந்தையில் ஊ.சே. நிதியம் முதலீடு செய்யப்பட்ட வேளையில் நியாயமானதொரு வருமானமும் ஈட்டப்பட்டது. இதனால் நிதியத்தின் திரவத்தன்மை இடர்நேர்வு மிகக்குறைந்தளவிலேயே காணப்பட்டது.

### 2.6.4 தொழிற்பாட்டு இடர்நேர்வு

தொழிற்பாட்டு இடர்நேர்வு என்பது போதுமானதற்ற அல்லது முறிவடைந்து போன உள்ளகச் செயன்முறைகள், மக்கள் மற்றும் முறைமைகள் அல்லது உள்ளக நிகழ்வுகளிலிருந்து (சட்ட ரீதியான இடர்நேர்வு உட்பட) எதிர்பார்க்கப்பட்ட இழப்புக்களின் வேறுபாடுகளில் தோன்றுகின்ற உண்மையான இழப்புக்களின் காரணமாக பெறுமதியில் ஏற்படும் மாற்றமாகும். நிதியத்தின் தொழிற்பாட்டு இடர்நேர்வுகளின் முக்கிய மூலங்கள் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான இடர்நேர்வுகள், மனித தவறுகள் மற்றும் தலையீடுகள் மற்றும் இயற்கை அனர்த்தங்களிலிருந்து தோன்றுகின்ற இடர்நேர்வுகள் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. இவ்விடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு, நிதியமானது ஆற்றல்வாய்ந்த தொழிற்பாட்டு இடர்நேர்வு முகாமைத்துவச் செயன்முறையொன்றினை நடைமுறைக்கிட்டிருக்கிறது. தொழிற்பாட்டு நடவடிக்கைகள் சுயாதீனமான உள்ளகக் கணக்காய்வாளரொருவரினால் கணக்காய்வு செய்யப்படுவதுடன் கணக்காய்வில் கண்டறியப்பட்டவைகள், பலயீனங்களையும் கண்டறியப்பட்ட பிறழ்வுகளையும் சீர்செய்வதற்காக மாதாந்த அடிப்படையில் கலந்துரையாடப்படுகின்றன. மேலும், கணனி வழி அதேநேர பின்னூட்டல் முறைமையொன்றினைப் பேணுகின்ற ஊ.சே. நிதியத் தரவினை வழங்குகின்ற ஏஎஸ்/400 கணனி முறைமையானது நிதியம் அதன் தொழிற்பாடுகளை எவ்விதத் தடங்கலுமின்றி மேற்கொள்வதனை இயலச் செய்தது. மேலும், எந்தவொரு எதிர்பாராத நிகழ்வுகளின் காரணமாகவும் தொழிற்பாடுகளின் சுமூகமான இயக்கம் பாதிக்கப்படாமல் இருப்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் தடங்கலற்ற வியாபாரத் திட்டம் மற்றும் அனர்த்த மீட்பு அமைவிடம் என்பன அனர்த்த மீட்பு அமைவிடத்திலிருந்து தொழிற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் ஒவ்வோராண்டும் பரீட்சிக்கப்படுகின்றன.

தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கு நடைமுறைக் கிடப்பட்டுள்ள ஏனைய பொறிமுறைகள் கொடுக்கல் வாங்கல்களுக்கான அதிகாரமட்டம், தொழிற்பாட்டு ரீதியான கைநூல்கள் கிடைக்கத் தக்கதாகவுள்ளமை, கடவுச்சொல் பாதுகாப்பு முறைமைகளினூடாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டுப்பாடுகள், தனியான இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவொன்றும் தொழிற்பாட்டு இடர்நேர்வுப் பதிவேடொன்றும் பேணப்பட்டு வருகின்றமை என்பனவற்றை உள்ளடக்கிக் காணப்படுகின்றன.

## 2.7 வீடமைப்புக் கடன் வசதி

உறுப்பினர்கள், பங்கேற்கின்ற கடன் வழங்கல் நிறுவனங்களான, அதாவது வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிய கூட்டுத்தாபன வங்கி, அரச ஈட்டு முதலீட்டு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, கூட்டுறவு கிராமிய வங்கிகள் என்பனவற்றிலிருந்து வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக்கொள்வதனை வசதிப்படுத்தும் நோக்குடன் 1988இல் அறிமுகப்படுத்தப்பட்ட வீடமைப்புக் கடன் திட்டம் 2013இலும் தொடர்ந்தது. இத்திட்டத்தின் கீழ்

அட்டவணை 7 வீடமைப்புக் கடன் வசதிகள்

| ஆண்டு | வழங்கப்பட்ட சான்றிதழ்கள் (எண்.) | ஊ.சே. நிதியத்தினால் ஒப்புதலளிக்கப் பட்ட கடன் (ரூ. மில்.) | கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்ட தொகை (ரூ. மில்.) |
|---|---|---|---|
| 2004 | 14,307 | 2,452 | 735 |
| 2005 | 14,600 | 2,766 | 900 |
| 2006 | 15,136 | 3,049 | 1,078 |
| 2007 | 12,969 | 2,872 | 1,240 |
| 2008 | 12,519 | 3,008 | 1,192 |
| 2009 | 10,383 | 2,680 | 1,552 |
| 2010 | 13,848 | 4,512 | 2,093 |
| 2011 | 20,041 | 6,355 | 1,896 |
| 2012 | 11,234 | 3,973 | 2,019 |
| 2013 | 16,268 | 6,914 | 2,178 |
| **மொத்தம்** | **141,305** | **38,581** | **14,883** |

மூலம்: ஊ.சே. நிதியத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

ஊ.சே.நிதியம் உறுப்பினர்களின் நிலுவைகளுக்கெதிராக உத்தரவாதச் சான்றிதழ்களைத் தொடர்ந்தும் வழங்கியது. இவ்வாண்டுப் பகுதியில் ரூ.6,914 மில்லியன் கொண்ட வீடமைப்புக் கடன்களின் ஒப்புதலுக்காக (அட்டவணை 7)

பங்கேற்கும் கடன் வழங்கல் நிறுவனங்களுக்கு 16,268 உறுப்பினா் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், 2012 ஆண்டுப் பகுதியில் நிலுவையிலிருந்த கடன்களைத் தீர்ப்பனவு செய்வதற்காக ஏறத்தாழ ரூ.2,178 மில்லியன் தொடர்பான உறுப்பினர்களின் கணக்குகளிலிருந்து கழிக்கப்பட்டு பங்கேற்கும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு 2013 இல் அனுப்பி வைக்கப்பட்டன.

## 2.8 சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்

ஊ.சே. நிதியச் சட்டத்திற்கிணங்க, தொழில் திணைக்களம் நிதியத்தின் பொது நிருவாகத்திற்கும் ஊ.சே. நிதியச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாகவுள்ளது. இதன்படி, 2013ஆம் ஆண்டுப் பகுதியில் மாவட்ட தொழில் அலுவலகங்களும் துணை அலுவலகங்களும் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கி 6,822 தொழில்தருநர்களையும் 448,398 ஊழியர்களையும் பதிவு செய்துள்ளன. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் பதிவு செய்யப்பட்ட தொழில்தருநர்களில் 46 சதவீதத்திற்கும் கூடுதலானோர் மேல் மாகாணத்திலிருந்து பதிவு செய்யப்பட்ட வேளையில் வட மாகாணமும் கிழக்கு மாகாணமும் மொத்த தொழில்தருநர்களின் பதிவில் 10 சதவீதத்திற்கு வகைகூறின.

சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, உறுப்பினர் பங்களிப்புக்களைச் செலுத்தாத தொழில்தருநர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரங்களை தொழில் திணைக்களம் கொண்டிருக்கின்றது. இதற்கமைய, மாவட்ட தொழில் அலுவலகங்களினாலும் துணைத் தொழில் அலுவலகங்களினாலும் முறையே ரூ.5,100 மில்லியனையும் ரூ.6,132 மில்லியனையும் கோரி முறையே 12,807 முதலாவது அறிவித்தலும் 8,411 சிவப்பு அறிவித்தலும் அனுப்பி வைக்கப்பட்டன. சிவப்பு அறிவித்தல் பெறப்பட்டதன் பின்னர் 28 நாட்களுக்குள் நிலுவைகளைச் செலுத்தத் தவறிய 2,744 நிறுவனங்களுக்கெதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டதன் மூலம் தொழில் திணைக்களம் ரூ.2,442 மில்லியனை அறவிட்டுக் கொண்டது.

## 2.9 ஊ.சே. நிதிய உறுப்பினர்களை மீளப்பதிவு செய்தல்

ஊ.சே. நிதிய உறுப்பினர்களுக்கு சிறந்த பணியினை வழங்கும் நோக்குடன் ஊ.சே. நிதியத் திணைக்களமும், தொழில் திணைக்களமும் ஊ.சே. நிதிய உறுப்பினர்களை அவர்களது தேசிய அடையாள அட்டையில் காணப்படுகின்றவாறு அவர்களது பெயர்களை மீளப்பதிவு செய்து தேசிய அடையாள அட்டை இலக்கத்தினை தனித்துவமான அடையாள இலக்கமாக வழங்குவதற்காக 2008ஆம் ஆண்டில் சிறப்புச் செயற்றிட்டமொன்றினை மேற்கொண்டன. இது, இரண்டு நிறுவனங்களும் பொதுவான உறுப்பினர் மத்திய தரவுத் தளமொன்றினை பயன்படுத்துவதனை இயலச்செய்தது. 2013 இறுதியில் ஏறத்தாள 1.4 மில்லியன் செயற்படுகின்ற ஊ.சே. நிதிய உறுப்பினர்களின் பங்களிக்கின்ற உறுப்பினர்களை தேசிய அடையாள அட்டை விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் உறுப்பினர் கணக்குகளில் 79 சதவீதத்திற்கு (1.1 மில்லியன் கணக்குகள்) தனித்துவமான அடையாள இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ள வேளையில் சேகரிப்பட்ட தரவுகளுக்கும் ஏற்கனவேயுள்ள தரவுகளுக்குமிடையிலான வேறுபாடுகள் தொடர்பில் ஊழியர்களின் தொழில்தருநர்களிடமிருந்து பெறப்பட்ட சரிபார்ப்புக்களின் மூலம் எஞ்சிய உறுப்பினர்களின் விபரங்கள் செயன்முறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதேநேர அடிப்படையில் தேசிய அடையாள அட்டை விபரங்களின் கீழ் புதிய ஊ.சே. நிதிய உறுப்பினர்களைப் பதிவு செய்தல் 2010 நவம்பரில் தொடங்கப்பட்டது. இதற்கமைய, ஒவ்வொரு மாதமும் முதந்தடவையாக ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களைப் பெறும் புதிய உறுப்பினர்கள் தேசிய அடையாள அட்டை விபரங்களை பெற்றுக் கொள்வதற்காக மாதாந்தக் கண்காணிப்பு முறைமையொன்று நடைமுறைக்கிடப்பட்டது. 2013இல் அத்தகைய 130,000 புதிய உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டதுடன் புதிய உறுப்பினர் பதிவேடும் அதற்கமைய இற்றைப்படுத்தப்பட்டது.

செயற்படுகின்ற உறுப்பினர்களின் முன்னைய உறுப்பினர் கணக்குகளை தனித்துவமான அடையாள இலக்கத்துடன் இணைக்கின்ற நடவடிக்கைகளும் இவ்வாண்டுப் பகுதியில் தொடர்ந்தன. இவ்வசதியானது உறுப்பினர்கள் தமது அடையாள இலக்கத்தினை வழங்குவதன் மூலம் இணையத்தளமூடாகவும், குறுந்தகவல்கள் முறைமையூடாகவும் தமது பல்வேறு கணக்குகளை அணுகவும் அவற்றை பார்வையிடவும் வழியமைத்தது. 2013 இறுதியில் 565 உறுப்பினர் கணக்குகள் இணைக்கப்பட்டன.

2013இல் ஊ.சே. நிதியம் செயற்படாத உறுப்பினர்களுக்கும் தேசிய அடையாள அட்டையின் கீழ் மீளப்பதிவு செய்வதற்கு வசதியளிப்பதற்காக புதிய பிரிவொன்றினைத் திறந்துள்ளது.

## 2.10 ஊ.சே. நிதிய கொடுப்பனவுகளுக்கான இ-கூற்று முறைமை

ஊ.சே. நிதியத் திணைக்களம் கைகளினால் செய்யப்படுகின்ற கொடுப்பனவு முறைமைகளுக்கு சி மற்றும் சி3 கூற்றுக்கள் பதிலாக உறுப்பினர் பங்களிப்புக்களின் விபரங்களை இலத்திரனியல் ரீதியாக தொழில்தருநர்கள் சமர்ப்பிப்பதனை ஊக்குவிப்பதற்காக, இ-கூற்று முறைமை தொடர்பில் படிப்படியாக பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. முழுமையாக காகிதாதிகளற்ற தீர்வாக விளங்கும் இ-கூற்று முறையில் தகவல்களைச் சமர்ப்பிப்பது செலவினையும் தாமதங்களையும் குறைத்து, தொழிற்பாடுகளின் வினைத்திறனை உயர்வடையச்

செய்து ஊ.சே. நிதியம் அதன் உறுப்பினர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதனை இயலச்செய்கிறது. மேலும், ஊ.சே. நிதியப் பங்களிப்புக்களை பங்களிப்பு தொடர்பான விபரங்களுடன் சேர்த்து மேற்கொள்ளக்கூடிய விதத்தில் அதேநேர முறைமையில் கிடைக்கத்தக்கதாக இருப்பது, நாட்டிற்கு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதற்கு மிக இன்றியமையாததாக இருக்கின்ற நாட்டின் வியாபாரம் செய்யும் தரமிடலை மேம்படுத்துவதற்கும் உதவியாக அமையும். 2012ஆம் ஆண்டு வரை இ-கூற்று முறைமை சுயவிருப்புக்களின் அடிப்படையிலேயே தொழிற்பட்டது. 2012இல் தொழில்தருநர்களுக்கு இம்முறையினை கட்டாயப்படுத்துவதற்காக 2012ஆம் ஆண்டின் 2ம் இலக்கச் சட்டத்தில் ஒரு திருத்தமாக ஊ.சே நிதிச் சட்டத்திற்கு சட்ட ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்டன. திருத்தங்கள் மீதான ஒழுங்கு விதிகள் 2013 மேயில் வர்த்தமானப்படுத்தப்பட்டன.

ஊ.சே. நிதியத் திணைக்களம் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கின்ற முகவர்களாக நியமிப்பதன் மூலம் அவர்களின் பணிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதன்படி கொமர்ஷல் வங்கி சிலோன் பிஎல்சி மற்றும் இலங்கை வங்கி என்பன தமது வாடிக்கையாளர்களுக்கு இலத்திரனியல் கொடுப்பனவு வசதிகளை முறையே 2011இல் ஒத்தோபரிலிருந்தும் 2012 செத்தெம்பரிலிருந்தும் அறிமுகப்படுத்தின. 2013இல் மக்கள் வங்கி, சம்பத் வங்கி பிஎல்சி மற்றும் அட்டன் நஷனல் வங்கி பிஎல்சி என்பன அவற்றின் முறைமைகளை அறிமுகப்படுத்தியதுடன் இப்பெறுமதிகூட்டப்பட்ட பணிகளை, நிதியத்திற்கு பங்களிப்புச் செலுத்துகின்ற தமது வாடிக்கையாளர்களாகவுள்ள தொழில்தருநர்களுக்கும் வழங்கும் பொருட்டு ஊ.சே நிதியத்துடன் சேகரிப்பு முகவர்களாக இணைந்து கொண்டன. இதன் காரணமாக மற்றைய பல வர்த்தக வங்கிகளும் கூட தமது வாடிக்கையாளர்களுக்கு இதே போன்ற பணிகளை வழங்கும் பொருட்டு தேவையான தகவல் தொழிநுட்ப முறைமைகளைத் தயாரிக்கின்ற செயன்முறைமைகளை மேற்கொண்டு வருகின்றன. 2013 இறுதியில் 1,868 தொழில்தருநர்கள் உறுப்பினர் பங்களிப்பு விபரங்களையும் கொடுப்பனவுகளையும் அதேநேர அடிப்படையில் அனுப்புவதற்காக பதிவு செய்துள்ளனர். செயற்படுகின்ற மொத்தமுள்ள 2.4 மில்லியன் உறுப்பினர்களில் தற்பொழுது 40 சதவீதத்தினரை உள்ளடக்கியுள்ள இவ்வசதி, ஊ.சே. நிதியப் பங்களிப்புக்கள் கிடைத்தவுடன் உடனடியாகவும் துல்லியமான முறையிலும் உறுப்பினரின் கணக்குகளை இற்றைப்படுத்துவதனை இயலச்செய்தது.

மேலும், தொழில்தருநர்கள் பங்களிப்பு விபரங்களை மின்னஞ்சலினூடாக நேரடியாக ஊ.சே. நிதியத்திற்கு அனுப்பும் அதே வேளையில் அவர்களது மாதாந்தப் பங்களிப்பினை அவர்களது வங்கிகளிலிருந்து நேரடியாக ஊ.சே. நிதியத்தின் வங்கி கணக்கிற்கு மாற்றல் செய்வதற்கு அவர்களை இயலுமைபடுத்தும் விதத்தில் நேரடிப் பற்றுக் கொடுப்பனவு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. ஊ.சே. நிதியத் திணைக்களம் 2013ஆம் ஆண்டுப்பகுதியில் இ-கூற்று முறைமைகள் தொடர்பில் தொழில்தருநர்களுக்கும் தொழில் திணைக்களத்தின் அலுவலர்களுக்கும் 19 விழிப்புணர்வுப் பிரச்சாரங்களும் செயலமர்களும் நடத்தப்பட்டன. இதன் விளைவாக முறைமையுடன் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில்தருநர்களின் எண்ணிக்கை 2012இன் 1,385 இருந்து 2013 இறுதி 1,868 இற்கு அதிகரித்தது

## 2.11 பிம்பப்படுத்துகின்ற ஸ்கானிங் செயற்றிட்டம்

தற்போதுள்ள காகிதாதிகளை அடிப்படையாகக் கொண்ட ஊ.சே. நிதிய முறைமையினை ஏறத்தாள காகிதாதிகளற்ற முறைமையொன்றுக்கு மாற்றியமைப்பதன் மூலம் உறுப்பினர்களுக்கும் ஏனைய ஊ.சே. நிதிய ஆர்வலர்களுக்கும் வினைத்திறன் மிக்கதும் காத்திரமானதுமான பணியினை வழங்குகின்ற உபாய ரீதியான குறிக்கோள்களிலொன்றினைப் பூர்த்தி செய்வதற்காக பிம்பப்படுத்தும் ஸ்கானிங் செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பிம்பப்படுத்தும் ஸ்கானிங் செயற்றிட்டமானது காகிதாதி வேலைகளைக் கையாள்வதுடன் தொடர்புபட்ட நேரம், இடவசதி, செலவு மற்றும் மனித மூலவளங்கள் என்பனவற்றைக் குறைப்பதன் மூலம் திணைக்களத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனை மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கிறது. செயற்றிட்டமானது நான்கு கட்டங்களில் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

(i) தற்போதுள்ள ஆவணங்களை இலத்திரனியல் வடிவத்திற்கு மாற்றுதல்

இப்பணியானது பணி வழங்குமொருவரிடம் வழங்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்த உடன்படிக்கை 2013 யூலை 29 நாளன்று கையெழுத்தானது. அட்டவணையிடப்பட்ட நேரத்திட்டத்திற்கிணங்க முதன்மைக் கோவை, (எம்எவ்) படிவம் டி (தொழில்தருநர் பதிவுப் படிவம்) மற்றும் மீள்பதிவு ஆவணங்கள் போன்ற தற்போதுள்ள ஆவணங்களை ஸ்கான் செய்யும் வேலைகள் 2014 இறுதியில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) ஆவணங்களை அதேநேர அடிப்படையில் ஸ்கான் செய்தல்

காகித ஆவணங்கள் ஒன்று சேர்வதனைத் தவிர்ப்பதற்காக ஆவணங்களைப் பெறுகின்ற இடத்திலேயே ஸ்கான் செய்யும் வேலைகள் 2014இன் இரண்டாம் காலாண்டிற்குள் ஆரம்பிக்கப்படவுள்ளன. 2013இல் திணைக்களத்தின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் மென்பொருளை இயல்பாக்கிக் கொள்வதற்காக

மென்பொருள் தேவைப்பாட்டு மாதிரிகளை விருத்தி செய்துகொள்ளும் செயன்முறையில் ஈடுபட்டிருந்தது.

(iii) இ-பதிவேட்டு அறையினை நிறுவுதல்

இ-பதிவேட்டு அறையினை நிறுவுவதற்கான வன்பொருள் 2014 மார்ச் இல் கொள்வனவு செய்யப்பட்டது.

(iv) ஆவண முகாமைத்துவ முறைமையினை தற்பொழுதுள்ள ஊ.சே. நிதிய கணனி முறைமையுடன் இணைத்தல்

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று முக்கிய கட்டங்களும் நிறைவடைந்ததும் தகவல் தொழில்நுட்பத் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் இக்கட்டம் நிறைவேற்றப்படும்.

## 2.12 பொதுமக்கள் விழிப்புணர்வு

இ-கூற்று முறைமை, உறுப்பினர்களை மீளப் பதிவு செய்தல் மற்றும் ஏனைய உறுப்பினர் தொடர்பான பணிகள் தொடர்பாக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடமாடும் பணிகளும் 2013இல் திணைக்களத்தின் முக்கிய நடவடிக்கைகளாகக் காணப்பட்டன. உறுப்பினர்கள், தொழில்தருநர்கள், தொழில் சந்தைக்குள் நுழைவோர், தொழில் அலுவலர்கள், கிராமிய வங்கி அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் போன்ற வேறுபட்ட வகையினரான ஆர்வலர்களை இலக்காகக் கொண்டு ஒன்பது விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் நடமாடும் பணிகளும் நடத்தப்பட்டன. இவ்வனைத்து விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களும் பெருமளவு உறுப்பினர் தளங்களைக் கொண்டுள்ள நிறுவனங்களை உள்ளடக்குவதனையே முக்கிய கவனத்தில் கொண்டிருந்தன. நடமாடும் பணிகள் மாஸ் இன்ரிமேட்ஸ் - துல்கிரிய, மாநாகரசபை - சிறி ஜெயவர்த்தனபுர கோட்டே, தயரட்ட கிருள பொருட்காட்சி - அம்பாறை, மருத்துவ மற்றும் சனசமூக விருந்தோம்புகை தினம் - மொறட்டுவ, கிறிஸ்டல் மாட்டின் (பிறைவேற்) லிமிடெட் - கலகெதர, நஷனல் நமுனுகுல பிளான்டேஷன் பிஎல்சி ஊவாப் பிரிவு - பத்திரமுல்ல ஆகிய இடங்களில் நடத்தப்பட்டன. ஊ.சே. நிதியம் தொழில் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத்தின் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் போன்ற மற்றைய அமைப்புக்களுடனும் ஒத்துழைத்துச் செயற்பட்டது. உறுப்பினர்களுக்குப் பின்வரும் பணிகள் வழங்கப்பட்டன.

(i) உறுப்பினர்களுக்கு ஊ.சே. நிதிய நிலுவைக் கூற்றுக்களை வழங்குதல்

(ii) உறுப்பினர் கணக்குகளைத் திருத்துதல்

(iii) உறுப்பினர்களை மீளப் பதிவு செய்தல்

(iv) குறுந்தகவல் பணிகள், இணையத்தள வசதிகள் போன்ற அதேநேர உறுப்பினர் பணிகளுக்கான பதிவுகளை ஊக்குவித்தல்

(v) உறுப்பினர்களுக்கான உளவள ஆலோசனைகள்

(vi) ஆட்பதிவுத் திணைக்களத்தின் அலுவலர்களின் மூலம் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக ஊ.சே. நிதிய உறுப்பினர்களுக்கு விண்ணப்பங்களை வழங்குதல்

(vii) பதிவாளர் நாயகத்தின் திணைக்கள அலுவலர்களிடமிருந்து பிறப்புச் சான்றிதழ்/ வயது ஊகச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்காக ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்கு விண்ணப்பங்களை வழங்குதல்.

மேலும், ஊ.சே. நிதியத்தின் பொதுமக்கள் தொடர்பு மற்றும் விசாரணைப்பீடமும் உதவிப்பீடமும் ஊ.சே. நிதிகளின் நடைமுறைகள் பற்றி, கருமபீடங்களிலும் மின்னஞ்சலூடாகவம் கடிதங்கள், தொலைநகல்கள் மற்றும் தொலைபேசிகளூடாகவும் அறிவூட்டுவதில் ஈடுபட்டிருந்தன. 2013ஆம் ஆண்டுப் பகுதியில் பொதுமக்கள் தொடர்பு மற்றும் விசாரணைப்பீடம் மற்றும் உதவிப்பீடம் என்பன 222,498 உறுப்பினர் விசாரணைகளுக்குப் பதிலிறுத்ததுடன் இதில் 118,380 உறுப்பினர்களுக்கு உடனடியாக பீடத்திலேயே உதவி வழங்கப்பட்டதுடன் 76,916 தொலைபேசி விசாரணைகளுக்கும் பதிலளிக்கப்பட்டதுடன் 16,057 மின்னஞ்சல்களுக்கும் 10,185 கடிதங்களுக்கும் 960 தொலைநகல்களுக்கும் பதிலிறுத்தப்பட்டது.

## ஊழியர் சேம நிதியம்
## 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான
## அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

(ரூபா)

| | | 2013 | | | 2012 |
|---|---|---|---|---|---|
| | குறிப்பு | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | மொத்தம் | |
| வட்டி வருமானம் | 1 | 105,038,261,311 | - | 105,038,261,311 | 90,904,169,498 |
| பங்கிலாப வருமானம் | 2 | 3,226,229,672 | - | 3,226,229,672 | 1,996,329,740 |
| பெறப்பட்ட மூலதன இலாபம்/(இழப்பு) | 3 | 1,127,566,932 | - | 1,127,566,932 | 1,054,177,803 |
| பதிவழிப்பு இலாபம் | 4 | 26,955,778,791 | - | 26,955,778,791 | 27,791,502,310 |
| இலாபம்/ (இழப்பு) ஊடாக சந்தைப் பெறுமதியிலான நிதியியல் சாதனங்களிலிருந்தான தேறிய இலாபம்/ (இழப்பு) | 5 | (44,504,112) | - | (44,504,112) | (387,735,742) |
| **முதலீட்டு வருமானம்** | | **136,303,332,593** | **-** | **136,303,332,593** | **121,358,443,609** |
| ஏனைய வருமானம் | 6 | 345,895,777 | 8,106,362 | 354,002,140 | 54,626,710 |
| **முழு மொத்த வருமானம்** | | **136,649,228,370** | **8,106,362** | **136,657,334,732** | **121,413,070,319** |
| **மொத்தத் தொழிற்பாட்டுச் செலவினம்** | 7 | (604,578,286) | (374,347,463) | (978,925,750) | (947,706,943) |
| வருமான வரிக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம் | | **136,044,650,084** | **(366,241,101)** | **135,678,408,983** | **120,465,363,376** |
| கழிக்குக: வருமான வரி | 8 | (10,068,532,366) | - | (10,068,532,366) | (8,636,643,180) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **125,976,117,718** | **(366,241,101)** | **125,609,876,616** | **111,828,720,196** |
| கூட்டுக: முன்னைய ஆண்டிலிருந்தான பிடித்துவைக்கப்பட்ட அனைத்தையுமுள்ளடக்கிய இலாபம் | | | | 28,010,746 | 368,792,047 |
| கூட்டுக: முன்னைய ஆண்டுச் சீராக்கம் (குறிப்பு 12) | 11 | | | 28,254,317 | - |
| **பகிர்ந்தளிப்புக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள இலாபம்** | | | | **125,666,141,679** | **112,197,512,243** |
| கழிக்குக: மீளளிப்புக்கள் தொடர்பில் செலுத்தப்பட்ட வட்டி - நடப்பாண்டு | | | | (2,233,490,165) | (2,098,085,270) |
| கூட்டுக/(கழிக்குக): இலாப சமப்படுத்தல் ஒதுக்கங்களிலிருந்தான/ (இற்கான) மாற்றல்கள் | | | | 3,700,000,000 | 5,700,000,000 |
| 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான உறுப்பினர் நிலுவைகள் மீதான வட்டி - 11.00% (2012 - 11.5%) | | | | (126,991,919,874) | (115,771,416,227) |
| **அடுத்த ஆண்டிற்காக முன்கொண்டு செல்லப்படும் நிலுவை** | | | | **140,731,641** | **28,010,746** |

## ஊழியர் சேம நிதியம்
### 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான
### ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானக் கூற்று

(ரூபா)

| | குறிப்பு | 2013 | 2012 மீளக்குறிக்கப்பட்டது |
|---|---|---|---|
| ஆண்டிற்கான இலாபம் | | 125,609,876,616 | 111,828,720,196 |
| **ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம** | | | |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | 9 | 1,805,741,814 | (6,240,881,426) |
| காலப்பகுதிக்கான மொத்த அனைத்தையுமுள்ளடக்கிய வருமானம் | | **127,415,618,431** | **105,587,838,770** |

# ஊழியர் சேம நிதியம்
# 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான
# நிதியியல் நிலைமைக் கூற்று

(ரூபா)

| | குறிப்பு | 2013 | 2012 மீளக்குறிக்கப்பட்டது |
|---|---|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (தே.ஏ.பெ) | 10 | 229,740,242 | 148,967,627 |
| தொழிற்பாட்டிலுள்ள மூலதனம் | 11 | 890,547,335 | 435,549,121 |
| அருவச் சொத்துக்கள் | 12 | 8,223,942 | 435,495 |
| | | | |
| நிதியியல் சொத்துக்கள் | 13 | | |
| திறைசேரி முறிகள் | | 1,126,941,275,632 | 980,371,915,815 |
| திறைசேரி உண்டியல்கள் | | 23,100,000,000 | 23,100,000,000 |
| திறைசேரி உண்டியல்கள் | | 13,587,399,142 | 31,757,671,753 |
| பட்டியலிடப்பட்ட உரிமை மூலதனம் | | 63,263,646,500 | 54,744,901,555 |
| பட்டியலிடப்படாத உரிமை மூலதனம் | | 9,480,625,000 | 4,480,625,000 |
| கம்பனித் தொகுதிக்கடன்கள் மற்றும் நம்பிக்கைச் சான்றிதழ்கள் | | 14,327,169,226 | 7,981,853,042 |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | | 6,627,000,000 | 3,106,900,000 |
| | | **1,257,327,115,500** | **1,105,543,867,164** |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| இருப்புக்கள் | | 18,065,752 | 12,416,925 |
| பெறத்தக்க வட்டி | | 34,375,440,761 | 30,807,809,156 |
| பெறத்தக்க பங்களிப்புக்கள் | | 7,264,552,149 | 6,239,874,709 |
| ஏனைய பெறத்தக்கவைகள் நடைமுறைச் சொத்துக்கள் | 14 | 1,521,042,677 | 1,254,862,633 |
| காசு மற்றும் காசிற்குச் சமனானவைகள் | 15 | 2,408,928,759 | 2,377,212,886 |
| | | **45,588,030,098** | **40,692,176,309** |
| கழிக்குக: நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| கடன் கொடுநர் | 16 | 5,723,796 | 10,366,364 |
| செலுத்த வேண்டிய செலவினங்கள் | | 150,338,731 | 240,005,104 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புக்கள் | 17 | 3,913,575,001 | 2,161,788,601 |
| | | **(4,069,637,527)** | **(2,412,160,069)** |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | | **41,518,392,571** | **38,280,016,241** |
| | | | |
| **மொத்தத் தேறிய சொத்துக்கள்** | | **1,299,974,019,589** | **1,144,408,835,648** |
| | | | |
| பிரதிநிதித்துவப்படுத்தல் | | | |
| | | | |
| உறுப்பினர் நிலுவைகள் | 18 | 1,281,854,849,565 | 1,124,508,128,334 |
| | | | |
| ஒதுக்கங்கள் | 19 | 17,978,438,383 | 19,872,696,568 |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபம் | | 140,731,641 | 28,010,746 |
| | | **18,119,170,024** | **19,900,707,314** |
| | | | |
| **நிதியத்தின் மொத்தத் தேறிய பெறுமதி** | | **1,299,974,019,589** | **1,144,408,835,648** |

பக்கங்கள் 8 தொடக்கம் 35 வரையுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் என்பன நிதியியல் கூற்றுக்களில் முக்கிய பகுதியினைக் கொண்டமைந்துள்ளது.

நாணயச் சபை சார்பில்

அஜித் நிவாட் கப்ரால்
ஆளுநர்
இலங்கை மத்திய வங்கி

பி.டபிள்யு.டி.என்.ஆர். றொட்றிகோ
கண்காணிப்பாளர்
ஊழியர் சேம நிதியம்

திகதி : 2014 பெப்புருவரி 17

## ஊழியர் சேம நிதியம்
## 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான
## கொள்ளல் கொடுத்தல் கணக்கு

(ரூபா)

| | குறிப்பு | 2013 | | | 2012 |
|---|---|---|---|---|---|
| | | நாணயச் சபை | தொழில் திணைக்களம் | மொத்தம் | மொத்தம் |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு நிலுவை | | **2,377,212,886** | **44,911,739** | **2,422,124,625** | **2,073,227,694** |
| கூட்டுக: மொத்தப் பெறுகைகள் | 20 | 229,029,063,905 | 1,007,032,835 | 230,036,096,740 | 179,156,397,522 |
| கழிக்குக: மொத்தக் கொடுப்பனவுகள் | 21 | 228,997,348,030 | 948,144,933 | 229,945,492,963 | 178,807,510,593 |
| **ஆண்டின் இறுதியில் காசு நிலுவை** | | **2,408,928,759** | **103,799,642** | **2,512,728,402** | **2,422,114,625** |

# ஊழியர் சேம நிதியம்
# 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான
# காசுப் பாய்ச்சல் கூற்று

(ரூபா)

| விபரம் | 2013 | 2012 (மீளக்குறிக்கப்பட்டது) |
|---|---|---|
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட வட்டி | 98,698,057,389 | 83,928,914,594 |
| பங்குகளிலிருந்தான பங்கிலாபம் | 2,886,142,528 | 1,881,100,206 |
| தண்டப்பணம் மற்றும் ஏனைய வருமானம் | 346,252,668 | 56,715,848 |
| கடன்பெற்றோரிடமிருந்து மீளப்பெற்றவை | 2,469,221 | - |
| செயற்பாட்டுச் செலவினம் | (828,410,501) | (645,754,880) |
| முற்பணம | (31,625,921) | (1,702,500) |
| வழங்குனர்களுக்கான கொடுப்பனவுகள் | (2,396,466,159) | (2,092,881,197) |
| **தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு** | **98,676,419,225** | **83,126,392,071** |
| செலுத்தப்பட்ட வரி | (31,030,731,549) | (18,918,362,215) |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **67,645,687,677** | **64,208,029,856** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| முதலீடுகள் | (763,359,631,755) | (487,822,962,364) |
| முதலீடுகளின் முதிர்ச்சி | 619,419,455,910 | 380,190,465,395 |
| தி/ உண்டியல், முறிகள் மற்றும் பங்குகளின் விற்பனையிலிருந்தான வருவாய்கள் | 46,925,727,535 | 22,542,712,078 |
| **முதலீடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட காசு** | **(97,014,448,310)** | **(85,089,784,891)** |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | (119,936,511) | (92,871,587) |
| செயற்பாட்டிலுள்ள மூலதனம் | (448,000,000) | (98,903,651) |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(97,582,384,822)** | **(85,281,560,130)** |
| | | |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | |
| பங்களிப்புகள் | 80,176,396,756 | 70,170,727,965 |
| பொது வைப்புக்கள் | 139,298,344 | 10,882,301 |
| மீளளிப்புக்கள் | (50,243,482,439) | (48,711,597,845) |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **30,072,212,662** | **21,470,012,421** |
| | | |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றிலான தேறிய (குறைவு)/அதிகரிப்பு | **135,515,517** | **396,482,148** |
| ஆண்டின் தொடக்கத்தில் காசும் காசுக்கு சமமானவையும் | **2,377,212,886** | **2,025,632,477** |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் - சீராக்கலின் முன்** | **2,512,728,403** | **2,422,124,625** |
| **சீராக்கம்: தொழில் திணைக்களத்தின் ஆண்டிறுதி காசும் காசுக்கு சமமானவையும்** | **(103,799,642)** | **(44,911,739)** |
| **ஆண்டின் இறுதியில் காசும் காசுக்குச் சமமானவையும்** | **2,408,928,760** | **2,377,212,886** |

## ஊழியர் சேம நிதியம்
## 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான
## முதலீடுகளின் கூற்று

(ரூபா)

| 2013 | | | | | முதலீடுகளின் வகை | குறிப்பு | 2012 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முகப்புப் பெறுமதி | கிரயம் | பதிவளித்த பெறுமதி | ஏட்டுப் பெறுமதி | முதலீடுகளின் வகை | | | முகப்புப் பெறுமதி | கிரயம் | பதிவளித்த பெறுமதி | சந்தைப் பெறுமதி | ஏட்டுப் பெறுமதி |
| 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | ரூபாக் கடன் | 24 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 | 23,100,000,000 |
| 1,356,388,637,000 | 1,097,409,813,289 | 1,126,126,980,931 | 1,190,953,799,549 | 1,126,941,275,632 | திறைசேரி முறிகள் | 23, 24 | 1,117,360,267,000 | 939,109,002,211 | 980,371,915,815 | 950,709,557,308 | 980,371,915,815 |
| 13,968,793,000 | 12,575,597,836 | 12,575,597,836 | 13,587,399,142 | 13,587,399,142 | திறைசேரி உண்டியல் | 23 | 33,409,900,000 | 30,962,701,825 | 31,757,671,753 | 31,811,458,284 | 31,757,671,753 |
| 6,627,000,000 | 6,627,000,000 | 6,627,000,000 | 6,627,000,000 | 6,627,000,000 | நேர்மாற்று மீள்கொள்வனவு ஒப்பந்தங்கள் | 25 | 3,106,900,000 | 3,106,900,000 | 3,106,900,000 | 3,106,900,000 | 3,106,900,000 |
| 11,106,379,600 | 11,106,379,600 | 11,106,379,600 | 11,106,379,600 | 11,106,379,600 | தொகுதிக் கடன்கள் | 22, 23, 24 | 5,316,930,000 | 5,316,930,000 | 5,316,930,000 | 5,316,930,000 | 5,316,930,000 |
| - | - | - | - | - | பிணையுடனான கடன் ஆவணங்கள் | | 500,000,000 | 500,000,000 | 500,000,000 | 500,000,000 | 500,000,000 |
| 3,774,661,584 | 2,759,800,000 | 3,220,789,626 | 3,220,789,626 | 3,220,789,626 | நம்பிக்கை சான்றிதழ் | 24 | 2,493,372,496 | 1,942,880,973 | 2,164,923,042 | 2,164,923,042 | 2,164,923,041 |
| - | 71,690,881,118 | 71,690,881,118 | 63,277,367,343 | 63,263,646,500 | Listed Equity | 22, 23 | - | 63,102,761,384 | 63,102,761,384 | 54,744,901,555 | 54,744,901,555 |
| - | 9,480,625,000 | 9,480,625,000 | 9,480,625,000 | 9,480,625,000 | பட்டியலிடப்படாத மூலதனம் | 23 | - | 4,480,625,000 | 4,480,625,000 | 4,480,625,000 | 4,480,625,000 |
| **1,414,965,471,184** | **1,234,750,096,845** | **1,263,928,254,111** | **1,321,353,360,260** | **1,257,327,115,500** | மொத்தம் | | **1,185,287,369,496** | **1,071,621,801,393** | **1,113,901,726,994** | **1,075,935,295,189** | **1,105,543,867,164** |

## ஊழியர் சேம நிதியம்
## 2013 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
## உரிமை மூலதனத்திலான/ உறுப்பினர் செல்வத்திலான மாற்றங்களின் கூற்று

(Rs.)

| விபரம் | உறுப்பினர் நிலுவை | கட்டட ஒதுக்க நிதி | தொழில்நுட்ப மேம்பாட்டு ஒதுக்க நிதி | இலாப சமப்படுத்தல் ஒதுக்க நிதி | பொது ஒதுக்க நிதி | முதலீட்டு மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | பிடித்து வைக்கப்பட்ட இலாபம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2011 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **986,045,958,691** | **3,157,000,000** | **350,000,000** | **23,500,000,000** | **6,650,000,000** | **(2,367,430,983)** | **368,792,048** | **1,017,704,319,756** |
| முன்னைய ஆண்டுச் சீராக்கம் | - | - | - | - | - | - | - | **-** |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | - | - | - | - | - | (6,240,881,426) | - | **(6,240,881,426)** |
| இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றப்பட்ட விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | - | - | - | - | - | 524,008,977 | - | **524,008,977** |
| 2012ஆம் ஆண்டுக்கான தேறிய இலாபம் | - | - | - | - | - | - | 111,828,720,196 | **111,828,720,196** |
| தேறிய பங்களிப்புக்கள் | 22,690,753,416 | - | - | - | - | - | - | **22,690,753,416** |
| 2012இல் செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி | - | - | - | - | - | - | (2,098,085,270) | **(2,098,085,270)** |
| **உறுப்பினர் வட்டி (2012:11.50%)** | 115,771,416,227 | - | - | - | - | - | (115,771,416,227) | **-** |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபத்திலிருந்தான மாற்றல்கள் | - | - | - | (5,700,000,000) | - | - | 5,700,000,000 | **-** |
| **2012 திசெம்பர் 31இல் உள்ளவாறான நிலுவை** | **1,124,508,128,334** | **3,157,000,000** | **350,000,000** | **17,800,000,000** | **6,650,000,000** | **(8,084,303,432)** | **28,010,747** | **1,144,408,835,648** |
| முன்னயை ஆண்டுச் சீராக்கம் | - | - | - | - | - | - | 28,254,317 | **28,254,317** |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | - | - | - | - | - | 1,805,741,814 | - | **1,805,741,814** |
| இலாபம் அல்லது நட்டத்திற்கு மாற்றப்பட்ட விற்பனைக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நிதியியல் சொத்துக்களின் சந்தைப் பெறுமதியிலான தேறிய மாற்றம் | - | - | - | - | - | - | - | **-** |
| ஆண்டுக்கான தேறிய இலாபம் - 2013 | - | - | - | - | - | - | 125,609,876,616 | **125,609,876,616** |
| 2013இற்கான தேறிய பங்களிப்பு | 30,354,801,358 | - | - | - | - | - | - | **30,354,801,358** |
| மீளளிப்புக்கள் மீது செலுத்தப்பட்ட உறுப்பினர் வட்டி - 2013 | - | - | - | - | - | - | (2,233,490,165) | **(2,233,490,165)** |
| உறுப்பினர் வட்டி (2013:11.00%) | 126,991,919,874 | - | - | - | - | - | (126,991,919,874) | **-** |
| பிடித்துவைக்கப்பட்ட இலாபத்திலிருந்தான மாற்றல்கள் | - | - | - | (3,700,000,000) | - | - | 3,700,000,000 | **-** |

# ஊழியர் சேம நிதியம்
# கணக்கீட்டுக் கொள்கை

## 1. அறிக்கையிடுகின்ற நிறுவனம் மற்றும் சட்ட ரீதியான அடிப்படை

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஊழியர் சேம நிதியம் (ஊ.சே. நிதியம் அல்லது நிதியம்) என்பது இலங்கையிலுள்ள கம்பனி மற்றும் வர்த்தகத் துறையிலுள்ள ஊழியர்களுக்கான கட்டாய பங்களிப்பு ஓய்வூதியத் திட்டமொன்றாகும். நிதியத்தின் பொதுவான நிருவாகம் தொழில் ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வேளையில் நிதியத்தின் கட்டுக்காப்பாளர் என்ற ரீதியில் மத்திய வங்கியின் நாணயச் சபையிடம் அதன் பொறுப்பாண்மை ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊ.சே. நிதியச் சட்டத்தின் 5(1)(எச்) மற்றும் (ஐ) என்பனவற்றின் நியதிகளுக்கிணங்க நாணயச் சபை, நிதியம் தொடர்பான பொதுவான கணக்குகளைப் பேணுமாறும் பின்வரும் நிதியியல் கூற்றுக்களை வருடாந்தம் தயாரிக்குமாறும் தேவைப்படுத்தப்பட்டுள்ளது.

அ. வருமானம் மற்றும் செலவுக் கூற்று,

ஆ. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் கூற்று,

இ. பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளின் கூற்று, அத்துடன்

ஈ. ஒவ்வொரு வகை முதலீடுகளினதும் முகப்புப் பெறுமதி, கொள்வனவு விலை மற்றும் சந்தைப் பெறுமதிகளைக் காட்டுகின்ற முதலீடுகளின் கூற்று.

## 2. கணக்கீட்டுக் கொள்கைகள்

### *2.1 தயாரிப்பின் அடிப்படை*

இலாபம் மற்றும் இழப்பு மற்றும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை என்பனவற்றினூடான சந்தைப் பெறுமதியில் குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்கள் நீங்கலாக, நிதியியல் கூற்றுக்கள் வரலாற்று ரீதியிலான செலவுகளின் அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ளன. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டாலன்றி நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் இலங்கை ரூபாவிலேயே காட்டப்பட்டுள்ளன.

### *2.2 இணங்குவிப்புக் கூற்று*

மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் கூற்றுக்கள் கூட்டிணைக்கப்பட்டுள்ள நிதியத்தின் நிதியியல் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற கணக்கீட்டுத் தத்துவங்களுக்கும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் உருவாக்கப்பட்டுள்ள புதிய இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கவும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம்/ இலங்கை கணக்கீட்டு நியமம் என்பன பொருண்மிய ரீதியில் பன்னாட்டு கணக்கீட்டு நியமங்கள் சபையினால் விடுக்கப்பட்டவாறான பன்னாட்டு அறிக்கையிடல் நியமங்களுடன் ஒத்தவைகளாகக் காணப்படுகின்றன.

### *2.3 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்*

2012 சனவரி 1ஆம் திகதியிலிருந்து இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் என்பன நடைமுறைக்கு வந்தமையின் காரணமாக, குறிப்பிட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், முறைகள் மற்றும் சமர்ப்பிப்புக்கள் மாற்றமடைந்துள்ளன அல்லது மேம்படுத்தப்பட்டுள்ளதுடன் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கீழே விபரிக்கப்பட்டுள்ளன. இம்மாற்றங்கள் தவிர பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் தற்போதைய இலங்கை கணக்கீட்டு நியமங்களில் பிரதிபலிக்கப்பட்டவாறான மேம்பாடுகள் நீங்கலானவை, முன்னைய ஆண்டுகளில் பின்பற்றப்பட்டவையுடன் ஒத்துச்செல்வனவாகக் காணப்பட்டன.

## *2.4 மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்களின் பயன்பாடு*

நிதியியல் கூற்றுக்களின் தயாரிப்பு, மதிப்பீடுகளின் பயன்பாட்டினையும் எதிர்கால நிலைமைகள் பற்றிய எடுகோள்களையும் தேவைப்படுத்துகிறது. கிடைக்கத்தக்க தகவல்களின் பயன்பாடும் கருத்துக்களின் பிரயோகங்களும் மதிப்பீடுகளின் உருவாக்கத்தில் இயல்பாகவே இணைந்து காணப்படுகின்றமையால் எதிர்காலத்தில் உண்மையான பெறுபேறுகள் நிதியியல் தகவல்கள், தயாரிக்கப்படுகின்ற மதிப்பீடுகளிலிருந்தும் வேறுபடக்கூடும். கருத்துக்கள் அத்தியாவசியமாக பிரயோகிக்கப்படுகின்ற குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் நிதியியல் சாதனங்களின் மதிப்பீடு, சொத்துக்களின் பெறுமதி இழப்பு, ஆதனங்கள், பொறிகள் மற்றும் சாதனங்களின் தேய்மானம், பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கான ஏற்பாடுகள் என்பனவற்றுடன் தொடர்பானவைகளாகக் காணப்பட்டன.

## *2.5 தொடர்ந்து செல்லும் கரிசனைகள்*

கிட்டிய எதிர்காலத்திற்கான வியாபாரத்தினைத் தொடர்வதற்கான மூலவளங்களை நிதியம் கொண்டிருப்பதனால் அது தொடர்ந்து செல்லும் கரிசனையொன்றாகத் தொடர்வதற்குரிய இயலாற்றலையிட்டு நிதியம் திருப்திப்பட்டுக் கொள்கிறது. ஆகவே, நிதியியல் கூற்றுக்கள் தொடர்ந்து செல்லும் கரிசனைகளின் அடிப்படையில் தயரிக்கப்பட்டுள்ளன.

## *2.6 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழ்ந்த சம்பவங்களும் எதிர்பாராத பொறுப்புக்களும்*

நிதியியல் கூற்றுக்களைத் தயாரிக்கும் பொழுது ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் நிகழ்ந்த அனைத்துப் பொருண்மை வாய்ந்த சம்பவங்களும் கருத்திற் கொள்ளப்பட்டிருக்கின்றன. அறியவந்த அனைத்துப் பொறுப்புக்களுக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்

## *3.1 நிதியியல் சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டுக்கான அடிப்படையும்*

### 3.1.1 நிதியியல் சொத்துக்களை அங்கீகரித்தலும் அளவிடுதலும்

நிதியியல் சாதனமொன்றின் ஒப்பந்த ரீதியான ஏற்பாட்டின் ஒரு தரப்பாக நிதியம் மாறுகின்ற வேளையில் மாத்திரமே நிதியியல் சொத்துக்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. நிதியியல் சொத்துக்கள் முக்கியமாக முதிர்ச்சியடையும் வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள், இலாபம் மற்றும் இழப்பினூடான சந்தைப் பெறுமதியிலான பிணையங்கள், கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் மற்றும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்க முதலீடுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றன. அனைத்து நிதியியல் சொத்துக்களும் ஆரம்பத்தில் செலவில் அங்கிகரிக்கப்பட்டு, குறிப்பிட்ட பரிசீலனையில் கொள்ளப்பட்ட சந்தைப் பெறுமதியையுடையதாக, அத்துடன், இலாபம் அல்லது இழப்பினூடான சந்தைப் பெறுமதியில் நிதியியல் சொத்துக்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்த கையேற்பு உட்பட கொடுக்கல்வாங்கல் செலவுகளுடன் நேரடியாகச் சேர்க்கப்பட்டதாக இருக்கின்றன.

நிதியியல் சொத்துக்களின் பகுப்பாய்வுகளும் அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளின் அடிப்படையும் பின்வருமாறு:

**அ. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள்**

நிலையான அல்லது நிர்ணயிக்கப்படத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய நிதியியல் சொத்துக்கள் மற்றும் ஊ.சே. நிதியம் எதிர்பார்க்கும் நிலையான முதிர்ச்சியும், முதிர்ச்சி வரை வைத்திருக்கக் கூடியவையும் முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் பின்னர் ஏதேனும் பெறுமதி இழப்புக்கள் இருப்பின் அதனைக் கழித்து பயனுறு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றன. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகளைக் கொள்வனவு செய்வதன் மீது ஏற்படுகின்ற கட்டணங்கள் மற்றும் கழிவிடல்கள் அவற்றின் பயனுறு வட்டி வீதங்களின் கணிப்பில் உள்ளடக்கப்படுகின்றன. முதிர்ச்சி வரை வைத்திருக்கப்படும் முதலீடுகள் நீக்கப்படும் போது அல்லது பெறுமதி இழக்கும் போது இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**ஆ. இலாபம் அல்லது இழப்பு ஊடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள்**

வர்த்தகப்படுத்தலுக்காக வைத்திருக்கப்படுபவை என வகைப்படுத்தப்பட்ட நிதியியல் சொத்துக்கள் இலாபங்கள் அல்லது இழப்புக்களூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்களின் வகைக்குள்ளும் இலாபம் அல்லது இழப்பூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் என ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்குள்ளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றிற்குரிய கொடுக்கல்வாங்கல் செலவுகள் வருமானக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்படுகின்றன.

இலாபம் அல்லது இழப்பூடான சந்தைப் பெறுமதியில் பிணையங்கள் பின்னர், சந்தைப் பெறுமதிகளினால் எடுத்துக்காட்டப்பட்டவாறு சந்தைப் பெறுமதியில் மதிப்பிடப்பட்டன. சந்தைப் பெறுமதியின் மாற்றங்கள் பிணையங்களின் பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பாக அல்லது வீழ்ச்சியாக அங்கீகரிக்கப்படுகின்ற வேளையில் தோன்றுகின்ற தேறிய இலாபங்கள் மற்றும் இழப்புக்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**இ. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள்**

தீவிரமான சந்தை நடவடிக்கைகளில் விலைக்குறிப்பீடு செய்யப்படாத ஊ.சே. நிதியத்தினால் பெறப்பட்ட நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளை கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அதன் பின்னர் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் ஏதேனும் பெறுமதியிழத்தல் இழப்புக்களைக் கழித்து பயனுறு வட்டி வீத மாதிரியினைப் பயன்படுத்தி தேய்மானச் செலவில் அளவிடப்படுகின்றது. கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் நீக்கப்படும் போது அல்லது பெறுமதி இழக்கும் பொழுது இலாபங்களும் இழப்புக்களும் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**ஈ. விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவை**

இலாபம் அல்லது இழப்புக்களினூடாக சந்தைப் பெறுமதியிலுள்ள பிணையங்களாக வகைப்படுத்தப்படாத பங்குரிமைச் சாதனங்கள் மற்றும் மேலேயுள்ள மூன்று வகைகளின் கீழும் வகைப்படுத்தப்படாத படுகடன் சாதனங்களும் ஆரம்ப கையேற்பில் விற்பனைக்குக் கிடைக்கத்தக்க முதலீடுகள் என குறித்துரைக்கப்பட்ட பிணையங்களும் விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துக்கள் நிதியியல் நிலைமைக் கூற்றிலுள்ள சந்தைப் பெறுமதியில் தொடர்ந்தும் மதிப்பிடப்படுகின்றன. விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துக்கள் விற்கப்படும் வரை அல்லது பெறுமதி இழக்கும் வரை விற்பனைக்குக் கிடைக்கத்தக்க சொத்துக்கள் மீதான சந்தைப் பெறுமதி மாற்றங்கள் ஏனைய அனைத்தையுமுள்ளடக்கிய வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் மீள்மதிப்பீட்டு ஒதுக்குகளூடாக உறுப்பினர் செல்வத்தின் கீழ் ஒன்றுசேர்க்கப்படுகின்றன.

விற்பனைக்குக் கிடைக்கத்தக்கவையான நிதியியல் சொத்துக்கள் பெறுமதியிழக்குமிடத்து, நிதியியல் சொத்துக்களில் கொண்டிருக்கும் செலவிற்கும் நடைமுறைச் சந்தைப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடு வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பயனுறு வட்டி வீத முறையினைப் பயன்படுத்தி விற்பனைக்குக் கிடைக்கத்தக்க படுகடன் பிணையங்கள் மீது வட்டி வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. கொடுப்பனவுகளை பெறுவதற்கான உரிமை நிலைநாட்டப்படும் வேளையில் பங்கிலாபங்கள் வருமானக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

## 3.1.2 நிதியியல் சொத்துக்களின் பெறுமதியிழப்பு

ஒவ்வொரு ஐந்தொகைத் திகதியிலும், நிதியியல் சொத்துக்களின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க பெறுமதி இழப்புக்கள் ஏதேனும் ஏற்பட்டுள்ளனவா என்பதனைக் கண்டறிவதற்காக மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பெறுமதியிழப்புக்களின் மூலம் இழப்புக்கள் அங்கீகரிக்கப்படுமிடத்து, நிதியியல் சொத்தின் (இழப்பு நிகழ்வு) ஆரம்ப அங்கீகரிப்பின் பின்னர் ஏற்பட்ட ஒன்று அல்லது அதற்கும் கூடுதலான நிகழ்வுகளின் விளைவாக பெறுமதி இழப்புக்களுக்கான சான்றுகள் காணப்படுகின்றதுடன் அவ்விழப்பு நிகழ்வு (அல்லது நிகழ்வுகள்) நம்பகரமான முறையில் மதிப்பிடத்தக்க நிதியியல் சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட எதிர்காலக் காசுப்பாய்ச்சலின் மீது தாக்கமொன்றினைக் கொண்டிருக்கின்றது.

பிணையங்களின் பெறுமதி இழப்புக்கள் பற்றிய குறிப்பிடத்தக்க சான்றுகள், வழங்குநரின் குறிப்பிடத்தக்க நிதியியல் இடர்ப்பாடுகள் போன்ற வழங்குநர் பற்றிய குறித்துரைக்கப்பட்ட தகவல்கள், முறிவடைதல், வங்கி முறிவு அல்லது ஏனைய நிதியியல் இடர்ப்பாடுகள் போன்ற ஒப்பந்தங்களை மீறுதல் போன்றவற்றை மட்டுமல்லாது பிணையங்களின் செலவுகளை மீளப்பெற முடியாது என்பதற்கு சான்றுகளை வழங்குகின்ற சந்தை நிலைமைகளில் ஏற்படுகின்ற குறிப்பிடத்தக்க மாற்றங்கள் பற்றிய தகவல்களையும் உள்ளடக்கலாம். சொத்துக்களின் சந்தைப் பெறுமதி அதன் செலவிற்கும் குறைவாக குறிப்பிடத்தக்களவில் அல்லது நீண்ட காலத்திற்கு வீழ்ச்சியடைவது பெறுமதி இழப்பிற்கான குறிப்பிடத்தக்க சான்றாக விளங்குகின்றது. இது குறிப்பிடத்தக்கதொன்றா என்பதனை மதிப்பிடுகையில், சந்தைப் பெறுமதியில் ஏற்படும் வீழ்ச்சி, ஆரம்ப அங்கீகரிப்பில் சொத்துக்களின் ஆரம்ப செலவிற்கெதிராக மதிப்பிடப்படுகிறது. இது நீண்ட காலமாக இருக்கின்றதா என்பதனை மதிப்பிடுகையில், வீழ்ச்சி, சொத்தின் சந்தைப் பெறுமதி ஆரம்ப அங்கீகரிப்பின் போதான அதன் ஆரம்பச் செலவிற்கும் கீழாக வீழ்ச்சியடைந்த காலப்பகுதிக்கெதிராக மதிப்பிடப்படுகிறது.

### 3.1.3 அங்கீகரிக்கப்படாத நிதியியல் சொத்துக்கள்

| நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி | 375,000,000 | 375,000,000 | 375,000,000 | 375,000,000 |
| நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி | 500,000,000 | 500,000,000 | 500,000,000 | 500,000,000 |
| நேஷன்ஸ் ரறஸ்ட் பாங்க் பிஎல்சி | 1,000,000,000 | 1,000,000,000 | 1,000,000,000 | 1,000,000,000 |
| நேஷன்ஸ் ரறஸ்ட் பாங்க் பிஎல்சி | 549,150,000 | 549,150,000 | 549,150,000 | 549,150,000 |
| நவலோகா கொஸ்பிட்டல்ஸ் பிஎல்சி | 114,500,000 | 114,500,000 | 114,500,000 | 114,500,000 |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் பிஎல்சி | 250,000,000 | 250,000,000 | 250,000,000 | 250,000,000 |
| பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | 105,900,000 | 105,900,000 | 105,900,000 | 105,900,000 |
| சம்பத் பாங்க் பிஎல்சி | 14,430,000 | 14,430,000 | 14,430,000 | 14,430,000 |
| சம்பத் பாங்க் பிஎல்சி | 251,775,000 | 251,775,000 | 251,775,000 | 251,775,000 |
| சம்பத் பாங்க் பிஎல்சி | 170,095,000 | 170,095,000 | 170,095,000 | 170,095,000 |
| செலான் பாங்க் பிஎல்சி | 100,000,000 | 100,000,000 | 100,000,000 | 100,000,000 |
| சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி | 33,214,000 | 33,214,000 | 33,214,000 | 33,214,000 |
| சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி | 123,306,000 | 123,306,000 | 123,306,000 | 123,306,000 |
| சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி | 93,576,000 | 93,576,000 | 93,576,000 | 93,576,000 |
| சிங்கர் சிறிலங்கா பிஎல்சி | 31,193,400 | 31,193,400 | 31,193,400 | 31,193,400 |
| சிங்கர் சிறிலங்கா பிஎல்சி | 46,790,100 | 46,790,100 | 46,790,100 | 46,790,100 |
| எஸ்எம்ஜபீ பாங்க் | 195,000,000 | 195,000,000 | 195,000,000 | 195,000,000 |
| இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 195,000,000 | 195,000,000 | 195,000,000 | 195,000,000 |
| இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி | 65,580,000 | 65,580,000 | 65,580,000 | 65,580,000 |
| த லையன் புறுவறி (சிலோன்) பிஎல்சி | 39,900,000 | 39,900,000 | 39,900,000 | 39,900,000 |
| த லையன் புறுவறி (சிலோன்) பிஎல்சி | 39,900,000 | 39,900,000 | 39,900,000 | 39,900,000 |
| த லையன் புறுவறி (சிலோன்) பிஎல்சி | 53,200,000 | 53,200,000 | 53,200,000 | 53,200,000 |
| **துணை மொத்தம்** | **9,594,281,100** | **9,594,281,100** | **9,594,281,100** | **9,594,281,100** |

## ஊழியர் சேம நிதியம்
## ஊழியர் சேம நிதியம் 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான முதலீட்டுக் கூற்றுக்கான குறிப்புக்கள்

| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | முகப்புப் பெறுமதி | கொள்வனவுக் கிரயம் | சந்தைப் பெறுமதி | பதிவழிக்கப்பட்ட கிரயம் |
|---|---|---|---|---|
| எல்பீ பினான்ஸ் பிஎல்சி | 983,474,896 | 722,900,000 | 853,774,990 | 853,774,990 |
| பீப்பிள்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி | 2,589,245,308 | 1,878,900,000 | 2,181,739,235 | 2,181,739,235 |
| செங்கடகல பினான்ஸ் பிஎல்சி | 201,941,380 | 158,000,000 | 185,275,402 | 185,275,402 |
| **துணை மொத்தம்** | **3,774,661,584** | **2,759,800,000** | **3,220,789,626** | **3,220,789,626** |
| | | | | |
| முழு மொத்தம் | **1,381,473,579,684** | **1,123,088,236,725** | **1,216,278,917,910** | **1,152,266,393,993** |

## ஊழியர் சேம நிதியம்
## ஊழியர் சேம நிதியம் 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறான முதலீட்டுக் கூற்றுக்கான குறிப்புக்கள்

### 25. கடன்கள் மற்றும் பெறத்தக்கவை

நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகள் (நேர்மாற்று மீள்கொள்வனவு)

(ரூபா)

| வர்த்தகப் பங்காளர் | வீதம் | முகப்புப் பெறுமதி | கொள்வனவுக் கிரயம் | சந்தைப் பெறுமதி |
|---|---|---|---|---|
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களம் | 7.30 | 2,000,000,000 | 2,000,000,000 | 2,000,000,000 |
| இலங்கை வங்கி | 5.76 | 511,000,000 | 511,000,000 | 511,000,000 |
| நேஷன் ரறஸ்ட் பாங் | 6.90 | 750,000,000 | 750,000,000 | 750,000,000 |
| தேசிய சேமிப்பு வங்கி | 6.95 | 1,500,000,000 | 1,500,000,000 | 1,500,000,000 |
| பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேஷன் லிமிடெட் | 6.95 | 145,000,000 | 145,000,000 | 145,000,000 |
| செலான் பாங்க் பிஎல்சி | 6.90 | 945,000,000 | 945,000,000 | 945,000,000 |
| அக்குயிட்டி செக்குறிட்டீஸ் லிமிடெட் | 7.05 | 250,000,000 | 250,000,000 | 250,000,000 |
| என்டிபீ பாங்க் | 6.90 | 526,000,000 | 526,000,000 | 526,000,000 |
| முழு மொத்தம் | | **6,627,000,000** | **6,627,000,000** | **6,627,000,000** |

# ஊழியர் சேம நிதியம்
# 2013 திசெம்பர் 31இல் உள்ளவாரான முதலீட்டு கூற்றுக்கான குறிப்புகள்

## 26. முதலீட்டின் அசைவு

(ரூபா)

| முதலீட்டின் வகை | ஆரம்ப நிலுவை | முதலீடு | முதிர்ச்சி | விற்பனை | மாற்றல்கள் | பதிவழிப்பு | இறுதி மீதி | 2013 | 2012 | மாற்றம் % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலாப மற்றும் நட்ட முதலீடுகளூடான சந்தைப் பெறுமதி | | | | | | | | | | |
| திறைசேரி முறிகள் | - | 231,837,950 | - | 231,837,950 | - | - | - | - | - | - |
| பட்டியல்படுத்தப்பட்ட உரிமை மூலதனம் | 147,603,472 | 535,615,945 | - | 161,451,059 | (49,020,597) | - | 472,747,761 | 0.0 | 0.0 | 0.0 |
| கம்பனித் தொகுதிக்கடன் | - | 114,500,000 | - | - | - | - | 114,500,000 | 0.0 | - | 0.0 |
| **துணை மொத்தம் - குறுங்கால முதலீடுகள்** | **147,603,472** | **881,953,895** | **-** | **393,289,009** | **(49,020,597)** | **-** | **587,247,761** | **0.0** | **0.0** | **0.0** |
| | | | | | | | | | | |
| விற்பனைக்குக் கிடைக்கத்தக்க முதலீடுகள் | | | | | | | | | | |
| திறைசேரி முறிகள் | - | 15,879,012,869 | - | 6,181,159,611 | - | 892,099,107 | 10,589,952,365 | 0.8 | - | 0.8 |
| திறைசேரி உண்டியல்கள் | - | 27,913,070,203 | 5,372,593,000 | 10,235,609,479 | 1,282,531,418 | - | 13,587,399,142 | 1.1 | - | 1.1 |
| பட்டியலிடப்பட்ட உரிமை மூலதனம் | 54,597,298,083 | 8,234,193,013 | - | 97,548,760 | - | 56,956,403 | 62,790,898,739 | 5.0 | 4.9 | 0.1 |
| பட்டியலிடப்படாத உரிமை மூலதனம் | 4,480,625,000 | 5,000,000,000 | - | - | - | - | 9,480,625,000 | 0.8 | 0.4 | 0.3 |
| கம்பனி தொகுதிக்கடன் | - | 1,397,598,500 | - | - | - | - | 1,397,598,500 | 0.1 | - | 0.1 |
| **துணை மொத்தம் - குறுங்கால முதலீடுகள்** | **59,077,923,083** | **58,423,874,585** | **5,372,593,000** | **16,514,317,850** | **1,282,531,418** | **949,055,510** | **97,846,473,745** | **7.8** | **5.3** | **2.4** |
| | | | | | | | | | | |
| முதிர்ச்சியின் போதான முதலீடுகள் | | | | | | | | | | |
| திறைசேரி முறிகள் | 980,371,915,815 | 350,490,343,097 | 204,816,388,416 | 27,057,294,183 | - | 17,362,746,955 | 1,116,351,323,267 | 88.8 | 88.7 | 0.1 |
| ரூபாய்க் கடன்கள் | 23,100,000,000 | - | - | - | - | - | 23,100,000,000 | 1.8 | 2.1 | (0.3) |
| ரூபாய்க் கடன்கள் | 31,757,671,753 | - | 33,409,900,000 | - | 1,652,228,247 | - | - | - | 2.9 | (2.9) |
| கம்பனித் தொகுதிக்கடன் | 5,316,930,000 | 4,577,351,100 | 300,000,000 | - | - | - | 9,594,281,100 | 0.8 | 0.5 | 0.3 |
| ஈட்டினால் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் | 500,000,000 | - | 500,000,000 | - | - | - | - | - | 0.0 | (0.0) |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | 2,164,923,041 | 2,550,000,000 | 2,000,351,835 | - | - | 506,218,420 | 3,220,789,626 | 0.3 | 0.2 | 0.1 |
| துணை மொத்தம் - நீண்ட கால முதலீடுகள் | **1,043,211,440,609** | **357,617,694,197** | **241,026,640,252** | **27,057,294,183** | **1,652,228,247** | **17,868,965,375** | **1,152,266,393,993** | **91.6** | **94.4** | **(2.7)** |
| | | | | | | | | | | |
| கடன்கள் மற்றும் பெறத்தக்க முதலீடுகள் | | | | | | | | | | |
| நேர்மாற்று மீள்கொள்வனவு | 3,106,900,000 | 1,002,204,402,375 | 998,684,302,375 | - | - | - | 6,627,000,000 | 0.5 | 0.3 | 0.2 |
| **துணை மொத்தம் - கடன்கள் மற்றும் பெறத்தக்க முதலீடுகள்** | **3,106,900,000** | **1,002,204,402,375** | **998,684,302,375** | **-** | **-** | **-** | **6,627,000,000** | **0.5** | **0.3** | **0.2** |
| | | | | | | | | | | |
| முழு மொத்தம் | **1,105,543,867,164** | **1,419,127,925,052** | **1,245,083,535,627** | **43,964,901,043** | **2,885,739,068** | **18,818,020,885** | **1,257,327,115,500** | **100.0** | **100.0** | **-** |

# ஊழியர் சேம நிதியம்
## முதலீட்டுக் கூற்றுக்கான குறிப்புகள்
### 27. 2013 திசெம்பர் 31இல் உள்ளவாறு சொத்துப்பட்டியலின் முதிர்ச்சிக் கட்டமைப்பின் வகைப்படுத்தல்

(ரூ. மில்.)

| முதலீட்டின் வகை | வீதம் | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 | 2025 | 2026 | 2028 | 2032 | 2033 | 2043 | நிர்ணயிக்கப் படாத | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திறைசேரி முறிகள் | | | | | | | | | | | | | | | | | | | |
| | 5.35 | | | | | | | | | | | | 89,247 | | | | | | 89,247 |
| | 5.65 | | | | | | 3,000 | | | | | | | | | | | | 3,000 |
| | 5.80 | | | | 45,464 | | | | | | | | | | | | | | 45,464 |
| | 6.20 | | 9,929 | | | | | 64,320 | | | | | | | | | | | 74,249 |
| | 6.40 | | | 34,974 | | | | | | | | | | | | | | | 34,974 |
| | 6.50 | | 19,081 | | | | | | | | | | | | | | | | 19,081 |
| | 6.60 | 62,447 | | | | | | | | | | | | | | | | | 62,447 |
| | 6.75 | | | | | | | | | | | | | | | | | | - |
| | 7.00 | 21,074 | | | | | | | | | 63,540 | | | | | | | | 84,614 |
| | 7.25 | | | 35,736 | | | | | | | | | | | | | | | 35,736 |
| | 7.50 | | | | | 46,814 | | | | | | | | | | | | | 46,814 |
| | 8.00 | | | 16,489 | 32,731 | 5,700 | 12,307 | 9,225 | | 52,781 | | | | | 64,047 | | | | 193,280 |
| | 8.50 | | 2,000 | | | 85,464 | 75,078 | | | | | | | | | | | | 162,542 |
| | 9.00 | 1,750 | | | | | | | 12,615 | | 6,000 | 9,944 | 20,200 | 177,980 | 31,845 | 119,215 | 30,676 | | 410,225 |
| | 10.50 | | | | | | | | | | | | | | | | | | - |
| | 10.60 | | | | | | | | | | | | | | | | | | - |
| | 11.00 | | 44,444 | | | | | | | | | | | | | | | | 44,444 |
| | 11.25 | 11,395 | | | | | | | | | | | | | | | | | 11,395 |
| | 11.40 | | | | | | | | | | | | | | | | | | - |
| | 11.50 | | | | | | | | | | | | | | | | | | - |
| | 11.75 | 28,908 | 9,971 | | | | | | | | | | | | | | | | 38,879 |
| | 13.00 | | | | | | | | | | | | | | | | | | - |
| | 13.25 | | | | | | | | | | | | | | | | | | - |
| துணை மொத்தம் | | 125,574 | 85,424 | 87,198 | 78,195 | 137,979 | 90,384 | 73,545 | 12,615 | 52,781 | 69,540 | 9,944 | 109,447 | 177,980 | 95,892 | 119,215 | 30,676 | - | 1,356,389 |
| இலங்கை ரூபாய்க் கடன் | | | | | | | | | | | | | | | | | | | |
| | 9.50 | | 19,600 | | | | | | | | | | | | | | | | 19,600 |
| | 11.00 | | 3,500 | | | | | | | | | | | | | | | | 3,500 |
| துணை மொத்தம் | | - | 23,100 | - | - | - | - | - | - | - | - | | | | | | - | | 23,100 |
| **கம்பனித் தொகுதிக்கடன்கள்** | | | | | | | | | | | | | | | | | | | |
| எச்டிஎவ்சி பாங்க் தொகுதிக்கடன் | | | | | 66 | | | 195 | | | | | | | | | | | 261 |
| எஸ்எம்ஜபீ பாங்க் தொகுதிக்கடன் | | | | | | | | 195 | | | | | | | | | | | 195 |
| சம்பத் பாங்க் தொகுதிக்கடன் | | | | | 14 | 844 | | | | | | | | | | | | | 858 |
| இலங்கை வங்கி | | | 200 | | | 576 | | | | | 134 | | | | | | | | 910 |
| லங்கா ஒறிக்ஸ் லீசிங் கம்பனி பிஎல்சி | | | 500 | | | | | | | | | | | | | | | | 500 |
| என்டிபீ தொகுதிக்கடன் | | | | 1,000 | | 1,098 | | | | | | | | | | | | | 2,098 |
| டிஎவ்சிசி வர்தன பாங்க் தொகுதிக்கடன் | | | | 500 | | | | | | | | | | | | | | | 500 |
| எச்என்பீ தொகுதிக்கடன் | | | | | | 317 | | | 2,000 | | | | | | | | | | 2,317 |
| எம்பீஎஸ்எல் | | 163 | | | | 281 | | | | | | | | | | | | | 444 |
| பிஏபீசி வைப்புச் சான்றிதழ் | | | | | 250 | | | | | | | | | | | | | | 250 |
| சிங்கர் சிறிலங்கா | | | 62 | 94 | | | | | | | | | | | | | | | 156 |
| சிங்கர் சிறிலங்கா | | | | 40 | 40 | 53 | | | | | | | | | | | | | 133 |
| ஹேலீஸ் பிஎல்சி | | | | 104 | | | | | | | | | | | | | | | 104 |
| சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி | | | | 33 | 123 | 93 | | | | | | | | | | | | | 249 |
| சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி | | | | 37 | 118 | 183 | | | | | | | | | | | | | 338 |
| செலான் பாங்க | | | | | | 100 | | | | | | | | | | | | | 100 |
| பீபிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி | | | | | | 106 | | | | | | | | | | | | | 106 |
| நவலோக கொஸ்பிட்டல்ஸ் | | | | | | 229 | | | | | | | | | | | | | 229 |
| எல்பீ பினான்ஸ் பிஎல்சி | | | | | | 221 | | | | | | | | | | | | | 221 |
| நஷனல் டெவலப்மென்ட் பாங்க் பிஎல்சி | | | | | | 262 | | | | | 375 | 500 | | | | | | | 1,137 |
| | | | | | | | | | | | | | | | | | | | - |
| துணை மொத்தம் | | 163 | 762 | 1,808 | 611 | 4,363 | - | 390 | 2,000 | - | 509 | 500 | - | - | - | - | - | | 11,106 |
| திறைசேரி உண்டியல்கள் | | 13,969 | | | | | | | | | | | | | | | | | 13,969 |
| நம்பிக்கைச் சான்றிதழ்கள் | | 1,916 | 1,440 | 419 | | | | | | | | | | | | | | | 3,775 |
| பட்டியலிடப்பட்ட உரிமை மூலதனம் | | | | | | | | | | | | | | | | | | 63,264 | 63,264 |
| பட்டியலிடப்படாத உரிமை மூலதனம் | | | | | | | | | | | | | | | | | | 9,481 | 9,481 |
| மீள்கொள்வனவு | | 6,627 | | | | | | | | | | | | | | | | | 6,627 |
| முழு மொத்தம் | | 148,249 | 110,726 | 89,425 | 78,806 | 142,342 | 90,384 | 73,935 | 14,615 | 52,781 | 70,049 | 10,444 | 109,447 | 177,980 | 95,892 | 119,215 | 30,676 | 72,745 | 1,487,711 |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எல்எஸ்/டீ/ஈபீஎப்/எப்ஏ/13 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2015 ஏப்ரல் 30

கௌரவ அமைச்சர்,

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

**ஊழியர் சேமலாப நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் 6(3) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

ஊழியர் சேமலாப நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 6(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. ஊழியர் சேமலாப நிதியஅதிகாரச் சட்டத்தின் 6(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk


142

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களைத் தவிர்த்து 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்**

கம்பனி ஒன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,005,584,993 தொகையான பங்குகளின் சந்தை விலை சில வருடங்களாக தொடர்ந்து குறைவடைந்து 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 815,640,503 ஆல் அதாவது 81.1 சதவீதத்தால் பெறுமதி குறைவடைந்திருந்தது. எனினும், நிதிச் சொத்துக்களுக்கு நேர்ந்திருந்த பாதிப்பு நட்டம் தெளிவாக இனங்காண்பதற்கு இயலுமானவரையில் விடய அடிப்படையிலான சான்றுகள் காணப்பட்ட போதிலும் இதற்காக இலங்கை கணக்கீட்டு நியமம் 39 முதல் 58 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டின் போது ஏற்பட்ட மீண்டெழும் செலவினமான ரூபா 51,514,358 தொகை

மூலதனமாக்கப்பட்டு இதன் அடிப்படையில் பெறுமானத்தேய்வும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,199,442 கிரயமான உபகரணங்களும் மென்பொருட்களும் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

**தீர்த்து வைக்கப்படாத மீதி**

---

கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 7,908,504,669 தொகையான பணம் பின்வரும் காரணங்களால் சேமலாப பெறுனர்களின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிராததும் கொடுப்பனவு செய்யப்பட்டு தீர்க்கப்பட்டிராத காரணத்தால் அச் சேமலாபப் பெறுனர்களுக்கு நிதி கிடைக்கப்பெறாது அல்லது கொடுப்பனவுகள் காலதாமதமாவதற்குக் காரணமாகியிருந்தது. இம் மீதிகளைத் தாமதமின்றித் தீர்க்கப்பட்டிராமை தொடர்பாக அரசாங்க கணக்குச் செயற்குழுவாலும் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

(அ) தொழில் ஆணையாளர் நாயகத்தால் ஊழியர் சேமலாப நிதியத்திற்காக தொடரப்பட்ட வழக்குகள் மூலமும் நிலுவையாக உள்ள தவணைப் பணமாக அறவிடப்பட்ட ரூபா 5,982,176,693 தொகையானது 2013 திசெம்பர் 31 வரையிலும் ஒவ்வொரு அங்கத்தவரது தனிப்பட்ட கணக்குகளுக்கு செலவு வைக்கப்படாதிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியமாக நலனாளிகளின் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டிராத ரூபா 440,452,911 ஆன தொகையானது பொது வைப்புக் கணக்கில் 2013 திசெம்பர் 31 வரையிலும் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) குறைமிகைப் பங்களிப்பு நிதிக் கணக்கின் மீதியான ரூபா 1,342,080,192 மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் தீர்த்து வைக்கப்படாது உரிமை கோரப்படாத நலன் கணக்கு மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட நலன்

கணக்கு மீதிகள் முறையே ரூபா 96,173,622 தொகையாகவும் ரூபா 47,621,251 தொகையாகவும் காணப்பட்டன.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து தொழில் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 757,897,367 தொகையான நிலையான சொத்துக்களின் நிலைத்திரு தன்மை, பெறுமதி மற்றும் செம்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான நிலையான சொத்துப் பதிவேடு, நிலையான சொத்து மெய்மையாய்வு அறிக்கைகள் மற்றும் இலங்கை மத்திய வங்கி வளாகத்தில் நிலவும் ரூபா 143,252,603 தொகையான நிலையான சொத்துக்களுக்கு உரித்தான மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிச்செயற்பாடுகளின் விளைவு ரூபா 125,609,876,616 தொகையான தேறிய இலாபமானதுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் தேறிய இலாபம் ரூபா 111,828,720,196 ஆகும். அதற்கமைய, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் தேறிய இலாபத்தில் ரூபா 13,781,156,420 தொகையான சாதகமான அதிகரிப்பு காணப்பட்டது. முதலீட்டு வருமானத்திலான ரூபா 14,944,888,984 தொகையான அதிகரிப்பு முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகம்

(i) நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு பின்பற்றப்பட்ட அடிப்படைச் செயற்பாடு (சட்ட நடவடிக்கை 3) பின்பற்றப்படல் 6 மாதங்கள் முதல் 2 ½ ஆண்டுகள் வரையான காலமாக

தாமதமடைந்திருந்தமையால் குறித்த வகையில் வழக்குத் தொடர்வதற்கு முடியாதிருந்தமையால் 182 நிறுவகங்களுக்குரிய நிலுவைப் பங்களிப்புத் தொகையும் மிகை அறவீட்டுக் கட்டணமான ரூபா 171,992,382 தொகையும் அறவிடப்பட முடியாதிருந்தன.

(ii) சட்ட நடவடிக்கைகள் 1 உம் 2 உம் அனுப்பப்பட்டு 14 நாட்களின் பின்னர் 3 ஆம் சட்ட நடவடிக்கை அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் இதற்காக 3 மாதங்கள் முதல் 1 வருடம் வரையான கால தாமதம் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் ரூபா 28,742,744 தொகைக்காக நிலுவைப் பங்களிப்புத் தொகையும் மிகை அறவீட்டுத் தொகையும் அறவிடுவதற்கு 3 ஆவது சட்ட நடவடிக்கை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

- மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தால் பரீட்சிக்கப்பட்ட நிறுவகங்களில் 12 நிறுவகங்களுக்குரிய ரூபா 7,171,353 தொகையான நிலுவைப் பங்களிப்புப் பணம் மற்றும் மிகைக்கட்டண அறவீட்டை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இலங்கை மத்திய வங்கியின் கணனித் தரவு அடிப்படையில் 20 நிறுவனங்கள் நீண்ட காலமாக பங்களிப்புத் தொகையை நிதியத்திற்குச் செலுத்தியிருக்கவில்லை.

- 122 நிறுவகங்கள் நீண்ட காலமாக தொழில் உத்தியோகத்தர்களின் பரீட்சிப்பிற்கு உட்பட்டிராததுடன் பரீட்சிக்கப்பட்ட நிறுவகம் தொடர்பிலான அறிக்கைக்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கும் போது 2 மாதங்களுக்கு மேற்பட்ட காலதாமதம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2004 முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக நிதியத்தால் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு அறவிடப்பட்டிருந்த ரூபா 83,410,920 தொகை எக் காரணத்திற்காக தொடரப்பட்ட வழக்குகளுக்கு உரித்தானதென்பது குறித்து 2014

திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை மத்திய வங்கியின் கணனித் தரவு தொகுதியின் படி நிதியத்தில் பதிவாகியுள்ள 360 நிறுவகங்களில் 2000 முதல் 2013 காலப்பகுதிக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 194,273,332 தொகையான மிகையறவீடு 2014 ஆகஸ்ட் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொழும்பு கிழக்கு, மாவட்ட தொழில் அலுவலகத்திற்குரிய அதிகார எல்லைக்குட்பட்ட 102 நிறுவகங்களுக்குரிய ரூபா 93,423,472 நிலுவையான பங்களிப்புத் தொகையையும் மிகையறவீட்டுத் தொகையையும் அறவிடுவதற்கு 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2000 முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதிக்குரித்தாக 169 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 14,379,993 தொகையான நிதியத்தின் தாமத மிகையறவீட்டை அறவிடுவதற்காக குறித்த வகையில் அறிவித்தல்கள் அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கம்பஹா மாவட்ட தொழில் அலுவலக அதிகார எல்லைக்குட்பட்ட 131 நிறுவகங்களில் 2009 ஆம் ஆண்டு முதல் 2013 சனவரி வரையான காலப்பகுதிக்குரித்தான ரூபா 114,601,542 தொகையான நிலுவைப் பங்களிப்புத் தொகையும் மிகையறவீட்டுத் தொகையும் 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(எ) அவிசாவளை மாவட்ட தொழில் அலுவலக அதிகார எல்லைக்குட்பட்ட 68 நிறுவகங்களில் 2010 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையான காலப்பகுதிக்குரித்தான ரூபா 102,112,505 தொகையான நிலுவைப் பங்களிப்புத் தொகையும் மிகையறவீடும் 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நாடெங்கிலுமுள்ள இலங்கை போக்குவரத்துச் சபைக்குரிய பிராந்திய அலுவலகங்களிலிருந்து 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரை

நிலுவைப் பங்களிப்பாக ரூபா 4,125,870,645 தொகையும் மிகையறவீடாக ரூபா 2,089,740,360 தொகையுமாக ரூபா 6,215,611,005 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஐ) 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 8,244,403,544 தொகையான பங்களிப்புத் தொகையை அறவிடுவதற்காக நாடெங்கிலும் 10,641 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இவ்வழக்குகளிலிருந்து எந்த அளவு தொகை அறவிடப்பட்டுள்ளது, எந்தளவு எண்ணிக்கையான வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளன என்பது குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவான வகையில் ஆவணங்கள் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஒ) கண்டி வடக்கு மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் இரு அரச பெருந்தோட்ட நிறுவகங்களுக்குரித்தான 31 தோட்டக் கம்பனிகளிலிருந்து 2007 சனவரி 01 ஆம் திகதி முதல் 2013 யூன் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குரித்தாக அறவிடப்பட வேண்டிய எனினும் நிதியத்திற்குச் செலுத்தப்படாதுள்ள நிலுவைப் பங்களிப்புத் தொகை மற்றும் இதற்கு உரித்தான மிகையறவீட்டுப் பணம் ரூபா 208,378,193 ஆகக் காணப்பட்டது.

(ஓ) கண்டி தெற்கு மாவட்டத் தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்திற்குரிய 21 மக்கள் தோட்டக் கம்பனிகளிலிருந்து 2003 ஆம் ஆண்டு முதல் 2013 வரையான காலப்பகுதிக்குரித்தாக அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பங்களிப்புத் தொகை மற்றும் மிகையறவீட்டுத் தொகையின் மொத்தப் பெறுமதி ரூபா 286,729,384 ஆகக் காணப்பட்டது.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 06 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.7 ஆம் பிரிவிற்கு முரணாக ஊழியர் சேமலாப நிதியத்தில் கடமையாற்றும் இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தர்களின் ஊழியர் வருமானத்தில் 2013 ஆம் ஆண்டின்

போது அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,168,498 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது. 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போதும் உழைக்கும் போதே செலுத்தும் வரி முறையே ரூபா 5,542,066 தொகையும் ரூபா 6,459,092 தொகையும் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாது நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்தும் பங்களிப்புப் பெற்றுக்கொள்ளப்பட்டு ரூபா 8.557 பில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் “மெஹெவர பியஸ” கட்டிடத்திற்கு ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பு ரூபா 5.147 பில்லியன் தொகையாகக் காணப்பட்டது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இக் கட்டிடத்திற்காக நிதியத்தால் ஏற்கப்பட்டிருந்த கிரயம் ரூபா 890.55 மில்லியன் அதாவது மொத்தக் கிரயத்தில் 10.4 சதவீதமானதுடன் 2012 இன் 2 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியத்தின் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் படி கட்டிட வளாகத்தின் உரிமையை நிதியத்தின் பெயரிற்கு மாற்றப்பட்டு வழங்கப்பட வேண்டிய போதிலும் 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையிலும் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாட்டுச் செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டின் இறுதியில் நிலவிய செயலாற்றல் நிலைமை பின்வருமாறாகக் காணப்பட்டது.

| விபரம் | உள்ளபடியான எண்ணிக்கை | நிதிய நடவடிக்கைகளுக்கு உரிய எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|---|
| தனியார் மற்றும் பகுதியளவு பொதுத்துறை நிறுவன ஊழியர்கள் | 3,661,132 | 2,403,501 | 65.65 |
| தொழில் வழங்குவோர் | 204,777 | 69,148 | 33.77 |
| நிதியத்தின் அங்கத்தவர்களது கணக்குகளின் எண்ணிக்கை | 15,203,073 | 2,403,501 | 15.81 |

(மூலம்: இலங்கை மத்திய வங்கி - ஊழியர் சேமலாப நிதியம் 2013)

தற்போது பங்களிப்புத் தொகைகளை அனுப்பிவைக்காதுள்ள நிதியத்தின் 12,799,572 செயற்பாடற்ற அங்கத்தவர் கணக்குகளிற்கு 2013 சனவரி 01 ஆந் திகதி வரை செலவு வைக்கப்பட்டுள்ள தொகை ரூபா 602,017,524,105 ஆகவும் அக் கணக்கின் உரிமையாளர்களிற்கு 2013 ஆண்டிற்காக செலவு வைக்கப்பட்டிருந்த வட்டித் தொகை ரூபா 66,221,927,651 ஆகவும் இருந்தன. இச் செயற்பாடற்ற கணக்குகளின் எண்ணிக்கை நிதியத்தால் பேணப்பட்டு வரும் மொத்தக் கணக்குகளின் எண்ணிக்கையில் 84.2 சதவீதமாகும்.

### (ஆ) அங்கத்தவர்களுக்காகச் செலுத்தப்படும் நலன்கள்

| ஆண்டு | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 | 2008 | 2007 |
|---|---|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்ட நலன் சதவீதத்தில் | 11 | 11.5 | 11.5 | 12.5 | 13.75 | 13.2 | 11.2 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டின் போதான முதலீட்டு வருமானம் ரூபா 5,049,303,683 தொகையால் குறைவடைந்து அங்கத்துவ நிதியம் ரூபா 110,734,645,618 தொகையால் அதிகரித்தமையால் 2010 ஆம் ஆண்டைப் பார்க்கிலும் 2011 ஆம் ஆண்டின் போது அங்கத்தவர்களுக்கு செலுத்தப்பட்ட

நலன்களின் சதவீதம் 1 சதவீதத்தால் குறைவதற்குக் காரணமாகியிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட நலன்களின் சதவீதம் 0.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) 2011 ஆம் ஆண்டில் 11.5 சதவீதப்படி செலுத்தப்பட்ட அங்கத்தவர் நலன் சதவீதம் 2012 ஆம் ஆண்டின் போதும் செலுத்தப்படுவதற்காக ரூபா 115,771,416,227 தொகையான பணம் தேவைப்பட்டிருந்த போதிலும் அவ்வாண்டிற்கான வருமானம் பற்றாக்குறையாக இருந்தமையால் பங்கிலாப சமப்படுத்தல் ஒதுக்கத்திலிருந்து ரூபா 5,700,000,000 தொகை வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டின் இறுதியில் அங்கத்துவ நலன் 11 சதவீதத்தின் படி செலுத்தப்படுவதற்கு வருமானம் போதுமானதாக இன்மையால் ரூபா 3,700,000,000 தொகை பங்கிலாப சமப்படுத்தல் ஒதுக்கத்திலிருந்து வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) அதிகாரச் சட்டத்திற்குரிய பிரமாணக் கோவை ஒன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டிராமையால் 2012 இன் 02 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியம் (திருத்தப்பட்டது) அதிகாரச்சட்டத்தின் மூலமும் பிரதான அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவிற்கு அடுத்து சேர்க்கப்பட்ட 23(அ) பிரிவின் படியும் அதிகாரச்சட்டத்தின் தேவைப்பாட்டைப் பூரணப்படுத்தும் அங்கத்தவர்களிற்கு தமது அங்கத்துவப் பணமாக செலவு வைக்கப்பட்டுள்ள தொகையில் 30 சதவீதத்தை வீடமைப்பு மற்றும் மருத்துவ நலன்களாக வழங்குவதற்கு உத்தரவிடப்பட்டிருந்த போதிலும் அவ் உத்தரவைச் செயற்படுத்துவதற்கு 2014 யூலை 31 ஆம் திகதி வரையிலும் தவறப்பட்டிருந்தது.

(ஈ) 1998 ஆம் ஆண்டு முதல் அரசாங்க வங்கிகள் மற்றும் அரசாங்கத்துடன் இணைந்த 5 நியதிச்சட்ட நிறுவனங்களின் மூலம் ஊழியர் சேமலாப நிதியக் கணக்கு மீதியைப் பிணையாக வைத்து வீடமைப்புக் கடனைப் பெற்றுக்கொள்ளும் முறை

அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அக்கடன் திட்டத்தின் மூலம் 2000 – 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 208,500 கடன் சான்றிதழ்களினூடாக ரூபா 47,785 மில்லியன் கடன் தொகை அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அக்காலப்பகுதியினுள் இக்கடன் தொகைகளிலிருந்து கடன் தவணைப்பணங்களைச் செலுத்தாது புறக்கணித்திருந்த அளவு ரூபா 16,737 மில்லியனான அதாவது 35 சதவீதமாகும். இவ்வாறு கடனைப் புறக்கணித்திருந்தமையால் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை மேலும் ரூபா 2,500 மில்லியன் தொகை உரிய வங்கிக்குச் செலுத்த வேண்டியதாகக் காணப்பட்டது.

### 3.1.2 முதலீடும் முதலீட்டு வருமானமும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தால் பங்குச் சந்தையிலுள்ள 80 கம்பனிகளில் நீண்டகால மற்றும் குறுகிய கால ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 71,690,881,118 கூட்டுத்தொகையான முதலீடுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதியத்தால் பங்குச் சந்தையிலுள்ள 80 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 71,690,881,118 கூட்டுத்தொகையான நீண்டகால மற்றும் குறுகிய கால முதலீடுகளில் 61 கம்பனிகளில் மேற்கொண்டிருந்த ரூபா 52,092,805,864 முதலீடுகள் அன்றைய தினம் ரூபா 13,823,352,605 தொகையால் வீழ்ச்சியடைந்திருந்தன. எவ்வாறாயினும், 2014 யூன் 30 ஆம் திகதியளவில் நிதியத்தின் ஒட்டுமொத்த பங்குச் சந்தை முதலீடுகள் 93 கம்பனிகளில் ரூபா 75,393,966,488 தொகையாகக் காணப்பட்டதுடன் இத்திகதியில் 57 கம்பனிகளில் ரூபா 45,533,044,007 தொகையான முதலீடுகளின் பங்குச் சந்தைப் பெறுமதியிலேற்பட்ட குறைவு ரூபா 9,679,212,488 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்தின் நீண்டகாலமாக ரூபா 3,285,216,703 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த 8 கம்பனிகள் 2013/14 நிதியாண்டின் போது நட்டமடைந்திருந்தமை ஏற்றிருந்தமை அக்கம்பனிகளின் ஆண்டறிக்கைகளின் மூலம் கண்டறியப்பட்டது. இவ் 8 கம்பனிகளில் ரூபா 199,555,228 தொகையும் ரூபா 711,242,903 தொகையும் முதலீடு செய்திருந்த 2 கம்பனிகள் கடந்த 3 ஆண்டு காலப்பகுதியின் போது

தொடர்ந்து நட்டத்தை ஏற்றிருந்தன. இம் முதலீடுகளில் உரிய காலப்பகுதியின் போது நிதியத்திற்கு எவ்வித நலனும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

(இ) ஊழியர் சேமலாப நிதியம் 2013 ஏப்ரல் மாதத்திற்கு அண்மித்த கால எல்லைக்குள் கணனி கம்பனி ஒன்றிலிருந்து 11,324,228 பங்குகளை ரூபா 43,925,525 தொகைக்குக் கொள்வனவு செய்திருந்ததுடன் இவ்வாறு கொள்வனவு செய்யப்பட முன்னர் இக் கம்பனியின் திரவத்தன்மை தொடர்பாகக் கருத்திற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இக் கம்பனி 2012/13 கணக்கீட்டுக் காலப்பகுதியின் போது ரூபா 478 மில்லியன் தொகையான நட்டத்தை அடைந்திருந்திருந்ததுடன் கம்பனி தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதுமான நிலையற்ற தன்மை நிலவியமை குறித்து கம்பனியின் கணக்காய்வாளர்களும் அபிப்பிராயம் தெரிவித்திருந்தனர். 2014 யூன் 14 ஆம் திகதி வரையில் பங்குச் சந்தையில் இக் கம்பனியின் பங்கு விலைகள் ரூபா 40,528,254 ஆல் அதாவது 92.27 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன. ஆகையால் இக் கம்பனியில் முதலீடு செய்யப்பட்ட தொகை மீளப் பெறப்படுவதில் நிலையற்ற நிலை காணப்பட்டது.

(ஈ) குறுங்காலப் பங்குச் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் மூலம் பங்கு விலைகள் வீழ்ச்சியடைவதன் மூலம் நேரடியாக நிதியத்திற்கு ஏற்க நேர்ந்திருந்த நட்டம் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 174,077,469 தொகை 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 117,619,396 தொகையாகவும் 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 44,504,112 தொகையுமாக ரூபா 336,200,977 கூட்டுத்தொகை குறித்த ஆண்டுகளின் போது இலாபத்திலிருந்து கழிக்கப்பட்டிருந்தன.

(உ) நிதியத்தினால் 2008, 2009, 2010, 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே ரூபா 3,890,902,522 உம் ரூபா 6,877,822,908 உம் ரூபா 39,133,587,926 உம் ரூபா 73,948,947,927 ரூபா 63,102,761,384 மற்றும் ரூபா 71,690,881,118 தொகையும் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. இம் முதலீடுகளுக்காகப் பெறப்பட்ட வருமானம் முறையே 8.93 சதவீதமாகவும், 22.99

சதவீதமாகவும், 5.08 சதவீதமாகவும், 3.58 சதவீதமாகவும், 3.77 சதவீதமாகவும் மற்றும 4.6 சதவீதமாகவும் காணப்பட்டன.

(ஊ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தால் பங்குச் சந்தையில் 27 கம்பனிகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 14,093,581,728 தொகையான முதலீட்டிற்காக 2014 செப்தெம்பர் மாதம் வரையிலும் எவ்வித வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டின் போதும் 2012 ஆம் ஆண்டின் போதும் முறையே 11 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 3,555,864,821 தொகைக்காகவும் 14 கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 8,793,951,889 தொகையான முதலீட்டிற்காகவும் இந் நிதியத்திற்கு வருமானம் பெறப்பட்டிருக்கவில்லை.

(எ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ஊழியர் சேமலாப நிதியத்தால் ரூபா 1,515,811,224 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த 3 கம்பனிகளில் குறித்த முதலீடு செய்யப்பட்ட நாள் முதல் 2014 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரையிலும் நிதியத்திற்கு எவ்வித வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை. விபரம் பின்வருமாறாகும்.

(i) 2012 யூலை மாதத்தில் விமானக் கம்பனி ஒன்றில் 1,863,676 அலகுகள் கொள்வனவு செய்யப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 500,000,000 தொகையான முதலீட்டிற்காக உரிய முதலீடு செய்யப்பட்ட நாள் முதல் 2014 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை நிதியத்திற்கு எவ்வித வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 பெப்ரவரி முதல் 2011 நவம்பர் வரையான காலப்பகுதியின் போது ரூபா 205,489,614 தொகை செலுத்தப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 5,091,200 நிதிக் கம்பனிப் பங்குகளின் முதலீட்டிற்காக உரிய முதலீடு செய்யப்பட்ட நாள் முதல் நிதியத்திற்கு எவ்வித நலனும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. இவ்வாறு பங்குகள் கொள்வனவு செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் இறுதியாக உள்ள வெளியிடப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இக் கம்பனி பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 4,285,937,284 தொகையான

நட்டம் தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட்டிராததுடன் 2013/14 நிதியறிக்கையின் முடிவில் இக் கம்பனிகளின் திரண்ட நட்டம் ரூபா 14,340,295,995 ஆகக் காணப்பட்டது. இக் கம்பனியில் ரூபா 40.36 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட பங்கொன்றிற்கு 2014 யூன் 10 ஆம் திகதியளவில் பங்குச் சந்தை விலை ரூபா 16.20 வரை பெறுமதி குறைவடைந்திருந்தது.

(iii) இலங்கை மத்தியவங்கியின் நிதிச் சபையால் 2010 மே 05 ஆம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானத்தில் ஹோட்டல் கம்பனி ஒன்றில் 23,712,200 பங்குகளுக்காக ரூபா 810,321,610 தொகை முதலீடு செய்யப்பட்ட நாள் முதல் 2014 ஒக்டோபர் 31 ஆம் திகதி வரை நிதியத்திற்கு எவ்வித வருமானமும் பெறப்பட்டிருக்கவில்லை. இக் கம்பனியில் ரூபா 34.17 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ஓர் பங்கொன்றில் 2014 யூன் 10 ஆம் திகதி வரையான சந்தைப் பெறுமதி ரூபா 13.20 ஆகக் காணப்பட்டது.

(ஏ) புதிதாக நிர்மாணிக்கப்பட்டு ஆரம்பிக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள ஹோட்டல் குழுமத்துடனுடைய கம்பனி ஒன்றிலிருந்து பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக நிதியத்தால் ரூபா 5,000,000,000 தொகை மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

(ஐ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதியத்தின் ரூபா 71,690,881,118 தொகையான ஒட்டுமொத்த முதலீட்டிலிருந்து 13 ஹோட்டல் கம்பனிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் ரூபா 9,642,243,784 தொகையானதுடன் இது மொத்த முதலீட்டின் 13.45 சதவீதமாகும். இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஹோட்டல் துறையில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடு 2010, 2011 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் இறுதியில் முறையே ரூபா 3,882,771,148, ரூபா 7,219,711,549, ரூபா 7,746,506,674 மற்றும் ரூபா ரூபா 9,642,243,784 என அதிகரித்திருந்ததுடன் அந்த ஆண்டுகளில் கிடைத்திருந்த வருமானம் ரூபா 56,326,376, ரூபா 174,011,584, ரூபா

151,531,857 மற்றும் ரூபா 275,738,400 ஆகக் காணப்பட்டன. இதன் படி முதலீட்டிற்குக் கிடைத்திருந்த வருமானம் முறையே 1.45 சதவீதமாகவும் 2.41 சதவீதமாகவும் 1.96 சதவீதமாகவும் 2.86 சதவீதமாகவும் இருந்தன.

(ii) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 3,243,292,787 தொகையை நீண்டகால மற்றும் குறுங்கால முதலீடுகளில் மேற்கொண்டிருந்த 8 ஹோட்டல் கம்பனிகளிலிருந்து நிதியத்திற்கு எவ்வித நலனும் கிடைத்திருக்கவில்லை.

(ஒ) 20,942,989 பங்குகள் ரூபா 680,232,420 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தனியார் தொடர்பாடல் கம்பனி ஒன்றின் பங்குகளின் விலை உயர்வடைந்திருந்த போதிலும் அப் பங்குகள் 2009 ஆம் ஆண்டு முதல் பங்குச் சந்தையின் கொடுக்கல்வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிராமையால் அப் பங்கு விற்பனையிலிருந்து மூலதன இலாபம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நிதியம் தவறியிருந்தது. இம் முதலீட்டிற்கு 2008 ஆம் 2009 ஆம் ஆண்டுகளின் போது 3.39 சதவீதப்படியும் 2010 ஆம் ஆண்டின் போது 0.81 சதவீதப்படியும் 2011 ஆம் ஆண்டின் போது 1.67 சதவீதப்படியும் 2012 ஆம் ஆண்டின் போது 2.62 சதவீதப்படியும் 2013 ஆம் ஆண்டின் போது 3.02 சதவீதப்படியும் பங்கிலாப வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவ் வருமானம் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஓ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பங்குச் சந்தையில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 71,690,881,118 தொகையான நிதியத்தின் குறுங்கால மற்றும் நீண்டகால முதலீட்டிற்காக 2014 செப்தெம்பர் 30 ஆம் திகதி வரையில் பங்குச்சந்தைக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த மூலதன இலாபம் ரூபா 1,596,584,599 அதாவது 2.23 சதவீதமான மிகக் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஔ) நிதியம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு உத்தியோகபூர்வ பட்டியலிடப்பட்ட 67 கம்பனிகளில்

மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த நீண்டகால முதலீடு ரூபா 71,128,266,562 ஆகக் காணப்பட்டது. அம் முதலீட்டில் ரூபா 56,379,044,262 கூட்டுத்தொகையான 26 கம்பனிகள் மாத்திரம் முதலீடு செய்திருந்ததுடன் அக் கம்பனிகளின் முதலீடுகளின் 19 கம்பனிகளுக்காக 2014 ஆம் ஆண்டின் போது 0.37 சதவீதத்திலிருந்து 7.33 சதவீதம் வரையான வருமான வீதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ரூபா 10,315,949,306 கூட்டுத்தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த எஞ்சிய 7 கம்பனிகளிலிருந்து நிதியத்திற்கு எவ்வித நலனும் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

**4.2 பதவியணி நிர்வாகம்**

---

தொழில் திணைக்களத்தினாலும் மத்திய வங்கியாலும் நிதியத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த பதவியணியினரின் தகவல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தொழில் திணைக்களத்தில் ஊழியர் சேமலாப நிதியத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 228 ஆகக் காணப்பட்டதுடன் அன்றைய தினத்தில் உள்ளபடியான எண்ணிக்கை 176 ஆகக் காணப்பட்டது. இதன் படி, 52 வெற்றிடங்கள் நிலவின.

தொழில் திணைக்களத்தில் நிலவிய ஊழியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரால் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதாக 2014 ஆகஸ்ட் 19 ஆம் திகதி நடைபெற்ற அரசாங்கக் கணக்குக் குழுவில் எடுத்துக்கூறப்பட்டிருந்தது.

(ஆ) ஊழியர் சேமலாப நிதியத்தில் இலங்கை மத்திய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி ஒன்று இல்லாததுடன் 2012 ஆம் ஆண்டின் போது 120 பேரும் 2013 ஆம் ஆண்டின் போது 138 பேருமாக ஓர் பதவியணியினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) 2013 ஆம் ஆண்டின் போது தொழில் திணைக்களத்திலிருந்தும் இலங்கை மத்திய வங்கியிலிருந்தும் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களின் சம்பளக் கிரயம் பின்வருமாறாகக் காணப்பட்டது.

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | பதவியணிக் கிரயம் | தலா ஒரு ஊழியர் கிரயம் |
|---|---|---|---|
| தொழில் திணைக்களம் | 176 | 234,664,284 | 1,333,320 |
| இலங்கை மத்திய வங்கி | 120 | 334,145,376 | 2,784,545 |

ஊழியர் சேமலாப நிதியத்தில் தொழில் திணைக்களத்தின் தலா ஒரு ஊழியர் கிரயத்துடன் ஒப்பிடுகையில் இலங்கை மத்திய வங்கியின் தலா ஒரு ஊழியர் கிரயம் 108.8 சதவீத அதிகரிப்பைச் சுட்டிக்காட்டியது.

**4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

மீளாய்வாண்டின் போது ரூபா 34,967,296 செலவிடப்பட்டு தொழில் உத்தியோகத்தர்களுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட 395 டப்ளட்கள் தொழில் உத்தியோகத்தர்கள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் தொழில் ஆய்வினை கணனிமயப்படுத்தும் செயற்திட்ட நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

நிதியத்தைச் செயலில் ஈடுபடுத்துவதற்குரிய உள்ளகக் கணக்காய்வு தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும், ஆளணிப் பற்றாக்குறை காரணமாக நிதியத்தின் வரையறைக்குட்பட்ட பகுதிகள் மாத்திரமே கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. இவ்வாறே நிதியத்தின் நிர்வாகத்திற்குரிய உள்ளகக் கணக்காய்வு இலங்கை மத்திய வங்கியினால் தனியார் கணக்காய்வு நிறுவனம் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் இதற்காக 2013 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த கணக்காய்வுக் கட்டணம் ரூபா 6,494,880 ஆகக் காணப்பட்டது.

## 5.2 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

2011 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட போதிலும் இது வரையிலும் தீர்த்து வைக்கப்படாதுள்ள முக்கியமான கணக்காய்வுப் பந்திகள் சில பின்வருமாறாகும்.

(அ) கொழும்பு வடக்கு மாவட்ட தொழில் அலுவலகத்திற்கு உரித்தான செயற்பாட்டிலுள்ள 7543 தொழில் வழங்கும் நிறுவகங்களில் 4911 நிறுவகங்கள் அதாவது நிறுவகங்களின் எண்ணிக்கையில் 65 சதவீதமானவை ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக தொழில் உத்தியோகத்தர்களின் ஆய்விற்கு உட்பட்டிராமை.

(ஆ) நீதிமன்ற நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தமையால் 2 மாவட்ட தொழில் அலுவலகங்களுக்குரிய தொழில் வழங்கும் நிறுவகங்களிலிருந்து அறவிடப்பட்டு புதிதாக அங்கத்துவக் கணக்குகளுக்குச் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 87,546,668 தொகையான பங்களிப்புத் தொகையும் மிகை அறவீடும் 2014 மே 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிராமை.

(இ) மஹரகம மாவட்ட தொழில் அலுவலகத்திற்குரித்தான தொழில் வழங்கும் நிறுவகங்களிலிருந்து நிதியத்தால் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 176,215,549 தொகையான நிலுவையான பங்களிப்புத் தொகையும் மிகை அறவீடும் 2014 மே 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கண்டி வடக்கு மாவட்ட தொழில் அலுவலகத்தின் மூலம் ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை அறவிடப்படுவதற்கு தொடரப்பட்டிருந்த 2 வழக்குகளுக்குப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும் எதிர்வரும் நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டிராமையால் ரூபா 1,692,078 தொகையான ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை அறவிடப்பட முடியாதிருந்தமை.

(உ) போதிய தகவல்கள் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்காமை மற்றும் தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டிராமை என்பவற்றின் அடிப்படையில் தீர்க்கப்படாத 20 நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக ரூபா 9,255,876 தொகையான பங்களிப்புத் தொகையை

அறவிடுவதற்கு 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் முடியாதிருந்தமை.

(ஊ) 2010 ஆம் ஆண்டின் போது நிதியத்தால் ஆரம்பிக்கப்பட்டிருந்த அங்கத்தவர்களை மீளப் பதிவு செய்யும் செயற்திட்ட நடவடிக்கைகள் பூர்த்தியடைந்திராமையாலும் இதற்கான இயந்திர உபகரணங்களுக்கும் ஒப்பந்தக் கம்பனிகளுக்கும் ரூபா 14,528,546 தொகை செலுத்தப்பட்டிருந்தமை.

(எ) 1995 முதல் 2003 வரையான காலப்பகுதியின் போது முடிவடைந்த வழக்குகளில் கண்டி நீதவான் நீதிமன்றத்தால் அறவிடப்பட்ட ரூபா 16,803,661 பங்களிப்புத் தொகையும் மிகை அறவீடும் நீதவான் நீதிமன்றத்திலிருந்து பெறப்பட்டிராமை.

(ஏ) 2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது நிதிய அங்கத்தவர்களது பங்களிப்புத் தொகை மற்றும் மிகை அறவீடாக வழக்குகளின் மூலம் அறவிடப்பட்ட ரூபா 62,571,668 தொகைக்குரிய அங்கத்தவர்கள் தொடர்பான சரியான தகவல்கள் நிதியத்தில் இன்மையால் அத் தொகையை அவர்களது தனிப்பட்ட கணக்குகளில் செலவு வைக்காது அரசிறையில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) மத்திய கொழும்பு மாவட்ட தொழில் அலுவலகத்தின் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களிலிருந்து பங்களிப்புத் தொகை மற்றும் மிகை அறவீடு என்பவற்றை அறவிடுவதற்காக வழக்குகள் தொடரப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை, வழக்குகள் தொடரப்பட்ட போதும் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, தவணை கொடுப்பனவு செலுத்தும் வசதி வழங்கப்பட்ட நிறுவனங்கள் கொடுப்பனவுகளைப் புறக்கணித்தமை, நிறுவனங்கள் கலைக்கப்படுவதற்கு முன்னர் பங்களிப்புத் தொகை அறவிடப்பட்டிருக்காமை, நிதியத்தின் தொங்கற் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ள பணம் சரியான ‘‘சீ’’ அறிக்கைகளை வழங்கித் தீர்த்துவைக்கப்பட்டிராமை, 2003 – 2006 காலப்பகுதியின் போது பெறப்பட்ட பங்களிப்புத் தொகை மற்றும் மிகை அறவீடு என்பவற்றை குறித்த அங்கத்தவர்களது கணக்குகளில் செலவு வைக்காமை மற்றும் தாமத மிகை அறவீடுகள் அறவிடப்பட்டிராமை போன்றவை

தொடர்பான ரூபா 313,452,501 சம்பந்தமாக அறிக்கையிடப்பட்ட கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் அவ்விடயங்களை உள்ளடக்கிய 2009 இன் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கையின் 3.2.5 பந்தியின் (ஈ) மற்றும் 2010 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 3.2.1 (இ) (iii) ஆம் பிரிவுகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பதிலளிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தொழில் ஆணையாளர் நாயகத்திற்கும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுனருக்கும் அறிவிக்கப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

**(அ) இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப திணைக்களம்**

(i) முதலீடுகள்

(ii) செயற்பாட்டு நடவடிக்கைகளை வெளிநபர்களிடம் ஒப்படைத்தல்

**(ஆ) தொழில் திணைக்களத்தின் ஊழியர் சேமலாப நிதியப் பிரிவு**

(i) கணக்கீடு

(ii) பங்களிப்பு மற்றும் தண்டப்பண அறவீடு

(iii) நிலையான சொத்துக்கள்

(iv) தொழில் வழங்கும் நிறுவனங்களைப் பரிசீலித்தல்

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)